# கலைச்செல்வி




கலைவிழா மலர் - ஆவணி 196

பாலன் வெளியீடு-

# ஸ்டார் பிராண்ட் இனிப்புகளும் டொபிகளும்



**டொபிகள்:** உயர்ரகப் பாலும், அருமையான கரும்புச்சாறும், இன் சுவையுஞ் சேர்ந்து ஸ்டார் பிராண்ட் டொபிகளை ஒரு உடனடி உருசிப் பொருளாக்கின்றன.

**மின்ட் வில்லைகள்:** பலம் பொருந்திய பிரத்தியேக சுவையைத் தன்னகத்தே கொண்டவை.

**இனிப்புகள்:** பக்குவப் படுத்தப் பட்டவை, நிகரற்றவை, பல தினுசுகளிலும், நிறங்களிலும் கிடைக்கும்.

ஸ்டார் பிராண்டு இனிப்புகளும் டொபிகளும் $\frac{1}{4}$ ருத்தல் $\frac{1}{2}$ ருத்தல் 1 ருத்தல் மற்றும் 4 ருத்தல் அன்பளிப்பு அழகிய டின்களிலும் பொலிதீன் பேக்குகளிலும் கிடைக்கும்.


தயாரிப்பாளர்கள்:-

## மொடர்ன் கன்பெக்ஷனரி வேர்க்ஸ்,

661A, பிரின்ஸ் ஆப் வேல்ஸ் அவெனியூ, கொழும்பு—14.

தொலைபேசிஎண்: 7783 தந்தி: "LUSCIOUS"

பிரத்தியேக தெரிவு !



அழகிய பல டிஸைன்களில்
நெய்யப்பட்ட

ஆவணி - 1962
4 - 8

**கைத்தறி**
ஜவுளித் தினிசுகள்

அழகானவை
நீடித்து உழைப்பவை
மனதிற்குப்
பெருமையும்
மகிழ்ச்சியும்
கொடுப்பவை,

**கதராடையால்**
**கடைத்தேறலாம்.**

**ஹான்ட்லூம்ஸ்**
( Govt. of India )
7, செட்டியார் தெரு,
கொழும்பு—11.

கிளைகள் :

**அன்னை மாளிகை**
47. மெயின் வீதி, யாழ்ப்பாணம்

கொழும்பு வீதி, கண்டி.

HANDLOOMS, 7, Sea Street, Colombo - 11.

## எல்லோரும் விரும்பிப் புகைப்பது

V

# துரை

# பீடியே!



எங்களிடம்

இந்தியாவிலிருந்து தருவிக்கப்படும் அக்கூள், நிப்பாணி புகையிலைத் தினிசுகளும கடப்பை, நைஸாம், பாம்பே இலை ஆகிய பீடி இலைத் தினிசுகளும் சில்லறை யாகவும் மொத்தமாகவும்

மலிவான விலைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

V. P. P. ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

முக்கிய குறிப்பு: எங்கள் துரை பீடிக்கு இலங்கை முழுவதும ஏஜண்டுகள் தேவை.

# துரை பீடிக் கம்பெனி


போன் : 5588 தந்தி : துரை பீடி.

31, 33, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு-13

**கிளை: நேரு அச்சகம்**

282, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு.


ர்ச்சாலை.
பருத்தித்துறைவீதி.
நல்லூர்.
ரதிசோப்
ரதிசோப்
★ரதிலைம் சோப்.
★ரதிபார் சோப்.
★ரதிவாசனைத்தைலம்.
SHANMUGHA INDUSTRIES
274 PT PEDRO ROAD,
NALLUR.
Colonda Studio






இணையாசிரியர்கள் :
சிற்பி—தமிழ்ச்செல்வன்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"

| கலை 4 | கலைவிழா மலர் ஆகஸ்ட் 1962 | காட்சி 8 |
|---|---|---|


உள்ளே எழுதியிருப்பவர்கள்

1. கவியோகி சுத்தானந்தர்
2 பவானி
3 வ. ந.
4 செம்பியன் செல்வன்
5. ப. முத்துக்குமாரசாமி
6. சொக்கன்
7. பா. சத்தியசீலன்
8. அ. க. சர்மா
9. நீலாவணன்
0. ச. இராமலிங்கம் M. A.
1. முருகையன்
2. துருவன்
13. இவன்.
14. வ. நடராஜன்
15. அருணகிரிதாசர்
16. கனக. செந்திநாதன்
17. லதிகா
18. இராஜநாயகன்
19. சம்பந்தன்
20. இ. திருநாவுக்கரசு
21 பூலோகசிங்கம்
22 தமிழ்ச்செல்வன்

மலர் விலை 50 சதம்



வணக்கம். நீண்ட நாட்களுக்குப் பின் மீண்டும் சந்திக்கின்றோம். 'கலைச்செல்வி' நடாத்தும் முதலாவது கலைவிழா இன்று வவுனியாவில் நடைபெறுகின்றது. நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு இ. வைத்திலிங்கம் தலைமை வகிக்கின்றார் வவுனியாவிலுள்ள முக்கிய பிரமுகர்களெல்லாம் விழாவின் வெற்றியில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். இவர்களுடைய



கலைவிழாத் தலைவர்

புகைப்படங்கள், விழா நிகழ்ச்சி வர்ணனை முதலியவை அடுத்த இதழில் வெளியாகின்றன. கலைவிழா மலர் உங்கள் கரங்களை அலங்கரிக்கின்றது. மலரின் தரத்தைப்பற்றி நாம் கூறுவதற்கு முன் உங்கள் விரல்கள் அடுத்த பக்கங்களைப் புரட்டுவதை உணர்கின்றோம். சரி, அடுத்த மாதம் சந்திப்போமா? —ஆசிரியர்.

---



## கலைச்செல்வன்

இம்மாதம் 3ந் திகதி வவுனியாவில் நடைபெறும் கலைச்செல்வி கலைவிழாவில் நாட்டியக் கலைஞர் சுப்பையா அவர்கட்கு இலங்கையிலுள்ள கலா ரசிகர்களின் சார்பில், 'கலைச்செல்வன்' என்ற கௌரவப்பட்டம் வழங்கப்படுகின்றது.

# வாழ்த்துக்கள்.

## வவுனியாப் பிரதிநிதி

தமிழனின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும் இந் நாளிலே — அவனது அடிப்படை உணர்ச்சிகள் மறக்கப்படாமை மகிழ்ச்சிக்குரியதே. அவனது கலை உணர்ச்சிகளின் வெளிப்பாடே "கலைச்செல்வி" ஆதியாம் கலை இதழ்கள் ........................

நான்கு ஆட்டைப்பருவத்தினள் நம் 'செல்வி.' அவள்மழலை தேமதுரத்தமிழ்த் தேனருவி. அவள் மொழி அமிழ்தம்.

செழுங்கலைச்செல்வி !

மொழிவளந் தாங்கிப் புதுமை விருந்தாகப் பவனிவரும் நின் வரவு நல்வரவாகுக, நின்பணி, 'தமிழ்கூறு நல்லுலகு, முழுவதும் பரவுவதாக.

வன்னிவள நன்னாட்டில் நின்றால் எடுக்கப்படும் கன்னித் தமிழ்க் கலைவிழா, நிலைபெற என் வாழ்த்துக்கள்.

"உள்ளமெலா முயர்வடைய உயிர்க்கடோறும்
உவந்திருந்து மகிழ்துளிக்க உவக்குமன்னை
வெள்ளைமலர் வீற்றிருந்து வேண்டாளாகி
வீங்குதமிழ்க் "கலைச்செல்வி" வடிவுதாங்கி
மெல்ல மெல்ல நடைபயின்று வீறுகொண்டு
மேன்மையுற்ற நாலாண்டு மேவிநின்றாள்
கொள்ளையின்ப முறு நகர வவுனியாவின்
குணமலராய் வாழ்க பல கோடியாண்டே"

இங்ஙனம்
தா. சிவசிதம்பரம்
வவுனியாத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்

தண்ணீரூற்று
முள்ளியவளை

# தமிழரசுத் தந்தை

தமிழ்க் கலைவிழா நடத்துவதுபற்றி நான் மிக மகிழ்ச்சியடைகிறேன். அதுவும் வவுனியாவில் நடத்துவதுபற்றிக் கூடிய மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில் வவுனியா ஓர் அகண்ட பிரதேசம். அதில் குடியிருக்கும் மக்கள் மிகச் சொற்பம். கூடிய அளவு விரைவில் இந்தப் பரந்த பிரதேசத்தில் தமிழ் மக்கள் போய்க் குடியேற வேண்டும். இதற்கேற்ற முயற்சி செய்வதே இந்த நேரத்தில் தமிழ்ச் சாகியத்திற்கு செய்யக்கூடிய பெரிய தொண்டு.

ஆகையால் இந்தக் கலைவிழா நடத்துவதைப்பற்றி மிகப் பாராட்டுகிறேன். இந்த விழாவை நடத்துபவர்கள் கலைச்செல்வி என்னும் மாத சஞ்சிகை வெளியீட்டாளர். அவர்களுக்கு என் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

16 அல்பிரெட் ஹௌஸ் காடின்ஸ்,<br>
கொழும்பு-3<br>
29-7-62

இங்ஙனம்,<br>
சா. ஜே. வே. செல்வநாயகம்

# காரியாதிகாரி

ஈழத்திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் இலக்கிய ஏடுகளில் 'கலைச்செல்வி' தனிப்பட்ட சிறந்தமுறையில் சென்ற நான்கு ஆண்டுகளாகப் பவனி வந்து கொண்டிருக்கின்றாள். கலைத்துறையிலும், இலக்கியத்துறையிலும், அவள் புரிந்துவரும் மாசற்ற தொண்டோ அளப்பரிதாயிருக்கிறது. ஈழத்தில் இன்று பிரகாசிக்கும் பல எழுத்தாளர்களைச் சிருஷ்டித்த பெருமை அன்னை கலைச்செல்வியையே சாரும்.

'கலைச்செல்வி' ஆண்டுதோறும் ஈழத்தில் தமிழர் வதியும் பகுதிகளில் கலைவிழாக்கள் ஏற்பாடு செய்து மக்களுக்குக் கலை ஆர்வம் உண்டு பண்ணவேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் அவளின் முதலாவது கலைவிழாவை வவுனியாப்பகுதியில் நடத்துவதையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

கலைச்செல்வியின் விழா மலர் சிறப்புடன் மலர்ந்துமென் மேலும் வளர்ச்சியுற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,<br>
வவுனியா — தி. முருகேசம்பிள்ளை

# பட்டினசபைத் தலைவர்

வவுனியாவில் 'கலைச்செல்வி' யினர் ஓர் கலைவிழா நடத்தப் போவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இக்கலைவிழாவினல் வவுனியா மக்கள் விழிப்புணர்ச்சியும் களிப்பும் கொள்வார்களென்பதில் எதுவித ஐயமுமில்லை. கலைச்செல்வியினர் ஈழத்தமிழ்மக்களுக்கு செய்துவரும் சேவையையெந்தத் தமிழ் மகனும் மறக்கமாட்டான். வவுனியா மக்களுக்குக் கலைச்செல்வியினர் அளிக்கப்போகும் சிறப்பினை எண்ணும் பொழுது அவைகளை வார்த்தைகளில் வைத்து எண்ணிவிட முடியாதிருக்கின்றது.

ஈழத் தமிழ் மக்களின் குடும்ப பத்திரிகையாக மட்டுமின்றி தமிழ் நாட்டினது குடும்பப்பத்திரிகையாகவும், தரமான விஷயங்களைத் தாங்கியும் வெளிவருகின்ற கலைச்செல்வியானது தனிப்பட்ட மனிதனின் வளர்ச்சிக்கோ அன்றி ஓர் ஸ்தாபனத்தின் வளர்ச்சியைக் குறித்தோ வளரவில்லை. அது, காட்டில் எறித்த நிலவாய், கடலிற் பெய்த மழையாய் இலைமறைகாயாய் வாழ்ந்துவரும் வளரும் எழுத்தாளர்களை வளர்த்துக் கொண்டே வரும் பத்திரிகை என்ருல் மிகையாகாது.

எனவே, கலைச்செல்வியின் சேவையானது மென்மேலும் வளர்ந்து ஈழத்தமிழ் மக்களுக்கு இடையருது தொண்டு செய்து மிளிரவேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

பட்டினசபை, வவுனியா

இங்ஙனம்,
ச. சுப்பிரமணியம்

## மன்னிப்புக் கோருகிருேம்

எதிர்பாராது நடைபெற்ற ஒரு துக்க நிகழ்ச்சியினுல் கலைச்செல்வி - கலைவிழா மலர் வேலைகள் தாமதிக்கப்பட்டன. ஆகவே, நாம் எதிர்பார்த்த அளவிற்குப் பக்கங்களை அதிகரிக்க முடியவில்லை. மலரில் வெளியிடுவதற்கென அனுப்பிய சில விளம்பரங்கள், தேவன்-யாழ்ப்பாணம், துளையசிங்கம், பஞ்சாட்சரம், யோகநாதன், குகன், முதலியோரின் படைப்புக்கள் முற்போக்கு இலக்கியத் தொடர், திருககுறள் கீர்த்தனை, கேள்வி - பதில் முதலியவற்றை மலரில் சேர்த்துக் கொள்ள முடியாததற்காகப் பெரிதும் வருந்துகின்ருேம். நேயர்கள் மன்னிப்பார்களாக.

இணை ஆசிரியர்கள்.

# ஆசிரிய சங்கத் தலைவர்

தமிழ்த்தாயின் இனிமை நுகர் தண்டமிழோன், "இருந் தமிழே யுன்னாலிருந்தேன் வானோர் விருந்தமிழ்தமாயிடினும் வேண்டேன்" என்று திருவாய் மலர்ந்தனன். அன்று முடியுடை மூவேந்தர் மடியிருத்தி வளர்த்தனர் நம் தமிழ்த்தாயை. இன்று தீஞ்சுவை அளாவிய தமிழனனைக்கு அணிசெய்யவந்தாள் நம் கலைச்செல்வி.

பாரெல்லாம் புகழ் மணக்கும் ஈழத்தில் உருவாகித் திரு விளங்கத் தமிழ் கொழிக்கும் திருச்செல்வி எம் கலைச்செல்வி! நின்வரவு கண்டு மகிழ்ந்தனம். நின் அரும்பணிக்கு இம்மா நிலத்தின் மனமார்ந்த அஞ்சலி சேர்வதாக. வளமார்ந்த வவு னியா மாநகரில் இன்று எடுக்கப்படும் கலைவிழா நின்பொருட்டா யது என்பதனை உன்னுந்தோறும் உளம் குளிர்கின்றது.

கலையழகு துலங்கவந்த கலைச்செல்வியே! இந்நகர்க் கோர் புதிராகி வந்தனை. நாலாண்டு நடை பயின்றாய். நின்வரவு நல்வரவாய் நிலைத்தோங்குக! நின்பணி சிறக்குக! நீடுவாழ்க!!

கலைகளெல்லாம் தருகின்ற வெண்கமலக் கருணையுரு, நின் ஒளி விளங்க, புகழ்மலர; பயன் பெருக அகத்திநின்றுங் காப் பாளாக.

## விருத்தம்

தேனொழுக மொழி பேசிச் செவிக்கினிய விருந்தளித்த செல்வி நீயே
மானமுள தமிழ் மரபின் வழிவந்த கலைச்செல்வி வாழ்க! வாழ்க!!
ஞான நடம் புரிந்தீண்டு கலைவிழா எடுப்பதனை நாடி நாமும்
வான வரு மறிய வள வவுனியா மாநகரில் வாழ்த்துவோமே.

நீ. அந்தோனிப்பிள்ளை

வவுனியாப் பகுதி
நிரந்தரவாச அரசினர் ஆசிரியர் சங்கம்
தண்ணீரூற்று, முள்ளியவளை

# சமயோக சித்தாந்தம்

கவியோகி சுத்தானந்தர்

## 1. ஒற்றுமை முழக்கம்

ஒரே கடவுள் ஒரே உலகம்
ஒரே ஆன்ம நேயர் நாம்
ஒரே வானக் குடை நிழலில்
ஒருமை கொண்டு வாழுவோம்.
ஒரே உள்ளம் ஒரே உணர்வு
ஒரே அன்புத் துடிப்பு நாம்
ஒரே ஆத்ம சமய யோகத்தில்
ஒரே குலமாய் வாழுவோம்.
பாடும் பறவைக் கூட்டம் போலப்
பழம் பழுத்த தோட்டம் போல
ஆடும் அமுதக் கடலைப் போல
அருவிப் பாட்டைப் போல வாழ்
[வோம்.

இதுதான் சமயோக வாழ்க்கை; இதைத் தான் உலகம் உண்டானது முதல், உயிர்கள் உணர்வு பெற்று எழுந்தது முதல், மனிதன் தேடுவது—சமயோகம். மனிதன் தனது மனோசக்தியால் எத்தனையோ புதுப் புதுக் கொள்கைகளை உண்டாக்கி விளம்பரப்படுத்துகிறுன். இக்கொள்கைகள் இரண்டுவகையாகும்: ஒன்று அகம், மற்றொன்று புறம். மானிட மனதைப் பண்படுத்தி உள்ளே சென்று உள்ளத்தைத் தொட்டு; உள்ளத்தின் உள்ளேயுள்ள கருவான ஆத்ம நாதனை, ஜீவ சிவனைக் கலத்தல் அகக் கொள்கை; இதைத் தான் யோகம் என்பது.

## 2. யோகம்

யோகம் என்றுல் உகுதல்; உள்ளத்தில் பொருந்துதல்; புறஞ்செல்லும் மனதை அடக்கி உள்முகப்படுத்தி ஒருமை காணல். இதையே வள்ளுவர்

ஒருமையுள் ஆமைபோல் ஐந்த
[டக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.
ஓர்த்து உள்ளத்து உள்ளது
[உணரின் ஒருதலையாய்ப்
பேர்த்து உள்ளவேண்டா பிற.

என்று திட்ப நுட்பமாகச் சொல்லுகிறுர். யோகம் என்பதன் பொருளை அப்பர், மாணிக்கவாசகர், திருமூலர் போன்ற அருட்பெரியார் வாழ்ந்து காட்டினர். "நாமார்க்குங் குடியல்லோம்" "இன்றெனக் கருளி" என்ற பாசுரங்களை ஆராய்க.

ஒருமையில் இருப்பது யோகம் — நடு
உள்ளத்தில் இருப்பது யோகம்
சுழுமுனை வானத்தைப் போலே-நல்ல

கருணையும் கடமையும் காப்பது
யோகம்
அன்பு செய்வது பக்தி யோகம்-நல்ல
அருட்பணியே கர்ம யோகம்
இன்பமே இயல்பெனும் ஆன்மா-
அதில்
இயல்புடன் இருப்பதுவே ஞான
யோகம்.
உடலினைக் கோயிலென் றாக்கி-நம்
உள்ளத்தைச் சந்நிதியாக்கிக்
கடவுளை யறிவொளியாக்கி-அதன்
கலப்பினில் வாழ்வதுவே சமயோ
கம.

## 3. சமமாவதே சமயம்

இந்த யோகத்தையே சமயங்கள் தேடுகின்றன. சமயம் என்றாலே ஆன்ம சமத்துவ வாழ்வு என்று பொருளாகும். சமயம், வெறும் புறச் சடங்குகளில் இல்லை; சமயம் மண்ணுக்குள் இட்ட விதை; அதற்கு அன்பு நீர் வார்த்தால் உள்ளிருந்து முளை யெடுத்துப் பசுங்கிளைவைத்து, இலை வைத்துப் பூத்துக் காய்த்துப் பழுத்து மரபைவளர்க்க வித்தையும் தரும், இதே மாதிரி எந்தச் சமயத்தை ஆராய்ந்தாலும் உள்ளிருந்து மலரும் அன்புணர்வையே குறிக்கும்.



அன்புண்மை இன்சொல் அடக்கம்
பொறுமையருள்
இன்பப் பொது நெறியென் றெண்

பௌத்த சமயம் கருணையால் ஒருமையை நாடும். சமண சமயம் அஹிம்சையால்; கிறிஸ்துவம் அன்புத் தொண்டினால்; இஸ்லாமியம் தீவிரமான கடவுளன்பால் ஒருமையை நாடும். இவை தீர்க்க தரிசிகளைச் சுற்றியமைந்த சமயங்கள் உலகிற் பெரும்பாலோர் இச்சமயத்தவரே.

## 4. சித்தாந்தம்

இந்தியச் சமயங்கள் இரு கிளையாக விளங்கும். ஒன்று வேதாந்தம்; மற்றொன்று சித்தாந்தம்.

"வேதாந்தம்" 'அதுநான்' என்னும்
சித்தாந்தம் 'அதுநீ' என்னும்"

வேதாந்தம் தன்னைப் பார்த்து "அஹம்பிரமம்" என்னும்; சித்தாந்தம் ஆன்மாவை இறைவனிடம் ஈடுபடுத்தும். அதற்கு இருவினை ஒப்பு மலபரிபாகம் என்பன வழியாகும். நல்லது தீயது என்பதைப் பாராட்டாமல் தாமஸ — இராஜஸ— சத்துவ குணதொந்த விகாரங்களிற் சிக்காமல், ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும்மலங்களைக் களைந்து ஜீவன் தூயனாகி, சுத்த பரமாத்மனை சிவனைக் கூடிச் சிவமயமாவது தான் சித்தாந்த யோகமாகும். இது தான் சமயோகம் என்பதும். ஜீவன் தூயனாகி, குணதொந்த விகாரமற்ற சம நிலையில் இறைவனுடன் கலந்து, எல்லாம் அவனெனக் கண்டு, எங்கும் உயிர்க்குயிராய் நிற்கும் ஏகத்தில் ஒன்றி நன்று செய்வதுதான் சமயோகம்.

## 5. இன்றுலகம்,

இன்றுலகம் பச்சை அரசியல்-விஞ்ஞானவுலகம்; கொலையைக் கலையாக்கிக் கலையை விலையாக்கும் கொள்ளையுலகம். சமயங்கள் கூடத் தடுமாறி இந்தக் கொலையரசியலுக்கு அடிமையாயின. முதலில் மனிதன் கல்லால் போர்புரிந்தான்; பிறகு வில்லால் போர் புரிந்தான்; பிறகு வாளால்; பிறகு துப்பாக்கியால்; பிறகு பீரங்கியால்; பிறகு டாங்கியினால், பிறகு குண்டினால், பிறகு ஆகாச குண்டினால், பிறகு V2 வால், பிறகு அணுகுண்டைத், தூக்கி ஜப்பானில் போட்டு இலட்சம் பேர்களைக் கொன்றான், போரின் கொடுமை, போகப் போக உலகையே அழிக்கும் அரக்க-வலிமை பெற்றுக் கொதிக்கிறது. இது நாகரிகமா? நரக-அநாகரிகமா? நீங்களே சொல்லுங்கள். இன்று அணுக் கதிர்களால் தாவு குண்டு, கோபால்டு குண்டு, காஸ்மிக்ரே, ஐட்ரஜன் குண்டு, யூரேனியம் குண்டு-இன்னும் எத்தனையோ அசுரக்குண்டுகளைக் குவித்து வைத்துக்கொண்டு மனிதன் 'நான் வல்லரசு' என்று மார்தட்டி சர்வதேச சபையில் குமுறுகிறான், ரேடியோவில் கதறுகிறான். வல்லரசா, கொல்லரசா என்று நீங்களே சொல்லுங்கள். அணுசக்தியை அளந்து சொன்னால் டி, என், டி. (T. N. T.) என்பர், பத்து லட்சம் டன் டி. என். டி. என்பது ஒரு மேகாடன் (Megaton) அமெரிக்கா ஒரு லட்சம் மேகாடன் குவித்து வைத்துள்ளது; இன்னும் குவிக்கிறது இரத்தச்செங்கொடி உயர்த்திய சம்மட்டி ரஷ்யா எவ்வளவு குவித்திருக்குமோ—இரும்புத்திரைக்கு உள்ளே இருப்பதை உளவறிந்தால் ஆபத்து! உலகில் உள்ள மனிதத் தொகையில் ஒவ்வொருவருக்கும் 500 டன் வீதம் அணுவெடி குவிந்துள்ளது. ஒரு நாட்டை அழிக்கப் பத்து வெடிகள் போதும் அணுக்கதிர் அரக்கரை எதிர்க்க பெட்ராண்டு ரஸ்ஸல் முதல் அனைவரும் இயக்கம் நடத்துகிறார்கள். அண்மையில் லண்டன் ஐடு பார்க்கில் இலட்சம்பேர் கூடிப் பவனி வந்து 'அணுவெடி அழிக! அமர்க்களம் ஒழிக! மனித சமுதாயம் வாழ்க!" என்று பெருங்குரலெடுத்தனர். பயனென்ன?

## 6. இசங்கள்

ககாரினும், கார்பெண்டரும் வானில் இருநூறு முன்னூறு மைல்கள் ஏறிச் சுற்றிவருகிறார்கள். சந்திரமண்

டலத்தில் குடியேற விஞ்ஞானி துள்ளிக் குதித்து ராக்கெட்டில் ஸ்புட்னிக்கை மாட்டிப் பறக்கிறான். பறக்கும் பறவைகள் கூடிவாழ்கின்றன. பறக்கும் மனிதன் பிரிந்து வாழ்கிறான். சமயப்பிரிவுகள் ஆயிரம்; ஒவ்வொரு சமயமும் கோட்டைகட்டி எனக்கே மோட்சம் என்கிறது. சமயக்கோட்டையைவிடப பலமானது சமுதாயக்கோட்டை. அதுவும் விளம்பரப் பலகையைத் தொங்கவிட்டுக்கொண்டு நான் சீனன், நான் நிப்பன், நான் ரஷ்யன் நான் அமரிக்கன், நான் ஆங்கிலன், நான் இந்தியன், நான் சிங்களன் என்று மார்தட்டுகிறது. இவையெல்லாம் மனிதன் சாதி, சமய' மொழி வேறுபாடுகளால் ஆக்கிக்கொண்ட மனவேறுபாடுகளே. அரசியல் விளம்பரங்களும் பல பெயர் கொண்டன. ISM என்றவால் ஐயர், ஐயங்கார், பிள்ளை, முதலி, நாயுடு என்ற வால்களைப் போலவே உலகில் வேறுபாடுகளைப் பெருக்கியது- நாஷனலிசம்: கம்யூனிசம், சோஷலிசம் என்ற மூன்று இசங்கள் இப்போது உலகில் நடமாடுகின்றன. இதன் குட்டி இசங்கள் மிகப்பல நாசனல்சோசலிஷம் என்ற பெயரால் கிட்லர் உலகைக் கொலை செய்து தற்கொலையானான். ஃபாசிசம் என்ற அரக்கமதத்தால் முஸலோனி படுகொலையில் பாய்ந்து தூக்குமேடை ஏறினான். அனார்க்கிசம், மானார்க்கிசம். அப்ஸலூடிஷம், மார்க்கிசம், டெமக்ராடிசம், சிண்டிகாலிசம் இண்டிபெண்டண்டு சோசலிசம், ஆகிய எத்தனையோ பெயர் வடிவ பேதங்களைத் தாங்கி சுயநல இஸம் சுயேச்சாதிகாரம் செலுத்துகிறது. இந்த அரசியல் இஸங்களெல்லாம் வயிற்றைச் சுற்றியேவரும்; ஆணவ வெறி கொண்டு பிறரை அடக்கிச் சுயேச்சாதிகாரம் செய்யத துள்ளும்.

## 7. ஆன்மநேயவுரிமை

இவற்றிற்கு மாற்று (Spiritual Socialism) ஸ்பிரிச்சுவல் சோசலிசம் ஆன்மநேய உரிமையில் உள்ளொருமையில் வாழ்வது

உள்ளொன்றிலை உலகொன்றும்
ஆதலினலே

உள்ளத்தில் ஒற்றுமையை ஊன்று.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடல் ஆலயம்." என்றார் திருமூலர் அந்த உள்ளத்தில் ஒருமைகொண்டு வாழ்வதே சமயோகம் என்பதாம். சமயோக வாழ்வில் விஞ்ஞானம் உண்டு- சிவஞானத்துடன் அது கலந்து அருட்பணியாக முகிழ்க்கும். யோகவுர்ணவு கொண்ட விஞ்ஞானி அருளும் பொருளுங் கூடிய அன்பனயிருப்பான். அவன், பிறரைக் கொல்லும் கருவிகளைச் செய்யமாட்டான். அணு சக்தியால் ஆக்கவேலைசெய்து மனித வாழ்விற்கு இனிமை தேடுவான்.

இதுதான் சமயோகம் என்பது- சுத்தாத்ம சமத்துவத்தில் ஒருமை கூடி உலகெல்லாம் ஒருகுலமாக வாழும் வகை இதுவே.

## 8 ஒருமைக்கு வழியுண்டு. உழைப்பு

இது இயலுமா? விரலுக்கு விரல் வேற்றுமையுள்ளதே-ஒருமை வருமா? என்று சிலர் கேட்கலாம் – வரும்; கேளுங்கள்:

விரலுக்கு விரலுண்டு வேற்றுமை - அவை
வேலை செய்யும்போதே ஒற்றுமை
குரலுக்குக் குரலுண்டு வேற்றுமை - அவை
கூடி யிசைத்திடின் ஒற்றுமை

வீணைக்கும் குழலுக்கும் வேற்றுமை - பாட்டு
வேகத்தின் ஏகத்தில் ஒற்றுமை
ஆணுக்கும் பெண்ணுக்கும் வேற்றுமை - காதல்
அள்ளிக் கலந்திடின் ஒற்றுமை.

பழுத்த கனிகளில் வேற்றுமை - நல்ல
பஞ்சாமிருதத்தில் ஒற்றுமை
அழுத்து மெட்டுக்களில் வேற்றுமை - பர
மானந்தப் பாட்டிலே ஒற்றுமை.

ஆளுக்கு ஆளுண்டு வேற்றுமை - மனம்
ஆழச் சென்றால் ஆன்ம ஒற்றுமை
தோளுக்குத் தோளுண்டு வேற்றுமை - நல்ல
தொழிலைப் புரிந்திடின் ஒற்றுமை.

இது விளங்குகிறதா? ஆதலால் ஆத்மசமத்துவதில் உள்ளம் உகந்து (உகுதல்–யோகம்) எல்லோரும் ஒரே உலகில், ஒரேமானிடமாக, ஒரே விண் குடைக்கீழ், ஒரே கடவுளை ஒரே உள்ளத்தில் கூடி ஒரே குலமாக வாழ்வதுதான் சமயோகம்.

இந்தச் சமயோகத்தை எப்படிச் சாதிப்பது என்பதை இனி விரிவாக விளக்குகிறேன்— நீங்களும் சிந்தித்துக் கேள்வி யனுப்புங்கள்.

அட்டைப்படம் :

## கலைச்செல்வி

அங்கே அழகு ஒழுகுகின்றது; அருகே அருவி விழுகின்றது; எழிலோவியமான அந்தக் கலைச்செலவியிடமிருந்து இன்னிசைமாரி பொழிகின்றது. கலையும் அழகும் களிநடம்புரியும் இக்காட்சியைக் கற்பனையின் எல்லையிலே நின்று வரைந்துள்ளார் ஓவியமன்னர் மாதவன் அவர்கள். அவர் ஓவியத்தில் வடித்ததை நீங்கள் காவியத்தில் வடிப்பீர்களா? 20-8-62-க்கு முன் எழுதியனுப்புங்கள்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# புதுமுறைப் பொதுவிஞ்ஞானம்

அரசினர் U. N. O. பாடத்திட்டத்தைத் தழுவி
எழுதப்பட்டது.

இ. நாகராசன், B. A., B. Sc., B. T.,

## மிக விளக்கமாய், இலகுவான தமிழில்
## புதிய கலைச்சொற்கள் சேர்த்து
## எழுதப்பட்டவை.

| | | | |
|---|---|---|---|
| 6 ஆம் | வகுப்பு | - | ரூபா 3-00 |
| 7 ஆம் | ,, | - | ,, 3-00 |
| 8 ஆம் | ,, | - | அச்சில் |

ஆறும் வகுப்பு மாணவர்கள் தொடக்கம் உயர்தர வகுப்பு மாணவர்கள் வரையும் படித்துப் பயனடையும் வண்ணம் அமைந்துள்ளது.

# நவீன உயர்தர எண்கணிதம்

நா. நடராசா B. Sc. (Hons) M. A.,
நா. இராமநாதன்

விலை ரூபா. 6. 00

# கலைவாணி புத்தக நிலையம்.

10, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

போன் : 221 தந்தி : "கலைவாணி"

உங்கள் ஜவுளித்தேவைகளைப்பொறுக்கிஎடுக்க வேண்டாமா?



- பட்டு நூல் சேலைகள்
- பெங்களூர், காஞ்சீவரம் சேலைகள்
- டெக்கா, மணிப்புரி சாரிகள்
- அழகு அழகான பிளவுஸ் பீஸ்கள்
- ஆன்னும் பலமாதிரியான கண்ணைகவரும் டிசைன்களில் அழகான பிடவைகள்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.

**சாரதாஸ்**

196, மெயின் வீதி - கொழும்பு-11

SARATHAS, 196, Main Street, Colombo-11
Phone : 2740 Grams : KASTHURI

தரத்தில் உயர்ந்த
தங்க வைர நகைகளுக்கு



**பொ. அம்பலவாணர்**

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# என்னை உருவாக்கியவர்கள்

— பவானி —

எழுத்துலகிலே, தவழும் நிலை மறைந்து, தத்தித்தத்தி நடைபயின்ற நிலை கடந்து எழுத்தாளரென முழு உருவங்கொண்டுவிட்டேனே என நான் ஐயுற்றவேளை, ''என்னை உருவாக்கியவர்கள்'' தொடரில் எழுதும்படி என்னை அழைத்திருக்கிறாள் ''கலைச்செல்வி''. என்னை எழுத்தாளரென உருவாக்கியவர்கள் யார்? அல்லது உருவாக்கியவை எவை என்று சற்றே நின்று நினைத்துப் பார்க்குகையில் என் பிள்ளைப்பிராய நினைவுகள் சில பசுமைமாறாது என் மனத்திரையிலே எழுகின்றன. சிறு வயதில் நான் பொழுதெல்லாம் புத்தகமும் கையுமாகக் கதிரையொன்றில் முடங்கிக் கிடந்தது எனக்கு இன்னமும் நினைவிருக்கிறது. சாப்பாடெல்லாம் புத்தகம் வாசித்தபடிதான் நடக்கும்; நித்தம் இரவில் புத்தகமொன்றைக் கையில் பிடித்தபடி தான் தூங்குவேன். ஒரு புத்தகத்தின் இரு அட்டைகளுக்கிடையில் தோன்றும் உலகிலே — சாகசமும் வீரமும், மெய்சிலிர்க்கும் கற்பனையுருக்களும், இன்பதுன்பம், நாடகம் நகைச்சுவை நிறைந்த அவ்வற்புத உலகிலே நான் என்னையிழந்து உலவி வரலானேன். அந்தப் புத்தக உலகப் பாத்திரங்களோடு கண்ணீர் விடும் அல்லது சிரிக்கும் அளவுக்கு அவற்றோடு ஒன்றிவிடுவேன். ஒரு வகையில் என்னைச்சுற்றிலும் காணப்பட்ட உலகைவிட இக்கற்பனை உலகு தான் எனக்கு உண்மையாய்த் தோன்றியது. சலிப்பளிக்கும் சாதாரண வாழ்க்கையிலிருந்து வீரதீரமும் புதுமையும் மனோகரமும் நிறைந்த இக்கற்பனையுலகிற்குத் தப்பித்துக்கொள்ளலானேன். இக் குழந்தைப் பருவக் கவர்ச்சி மயக்கத்தின் கொடையாய் இன்று என் மனதில் நிலைத்திருப்பது மனிதஆன்மாவை இறைவன் நிலைக்கு உயர்த்தவல்ல கலைஞனின் சிருஷ்டி ஆற்றலில் எனக்குள்ள ஆழ்ந்த ஈடுபாடு.



இவ்வாறு புத்தகப் புழுவாய் நான் மாறும் அளவுக்கு என் இலக்கிய உணர்வை' ரசனையை, நுண்ணுணர்வை வளர்க்கக் காரணமானவர் என் தந்தையென்றே கூறவேண்

டும். நான் சிறு பெண்ணாயிருந்த போது என் தந்தை, சங்கப்பாடல்களை, கம்பராமாயணப் பாடல்களை அவற்றையாத்த புலவர் வாழ்க்கையை எவ்வளவு அழகாய்க் கதைசொல்லும் பாணியில் எடுத்துச்சொல்லுவார்! சலிப்பேயில்லாமல், மணிக்கணக்காய் என் தந்தையருகே அமர்ந்து அவரிடம் இலக்கியக் 'கதை' கேட்பதில் தான் எனக்கு எவ்வளவு ஆர்வம்! இலக்கியத்தை ஆழ்ந்து அனுபவிக்கும் என் தந்தை என் குழந்தை மனதை எட்டும் வகையில், என் கற்பனையைக் கலரும் விதத்தில் தமிழ் இலக்கியச் செல்வத்தை எனக்கு எடுத்துரைக்கும்போது ஒரு புதிய அற்புத உலகமே என் கண் முன் தோன்றி விரியும். அன்று என் தந்தை என் உள்ளத்தில் தூண்டி விட்ட இலக்கிய ஆர்வம்தான் இன்று நான் எழுத்தாளராக உருவங்கொண்டுநிற்க உதவியது எனலாம்.

சிறுவயதிலே புற்றரையிலே சாய்ந்தவாறு நீலவானின் அகண்ட பெரும் பரப்பைப் பார்த்திருப்பதிலே எனக்குப் பெருவிருப்பு. அவ்வெல்லையற்ற வான்வெளியை அவ்வாறு பார்க்கும்பொழுது பிரமாண்டமான இப் பிரபஞ்சத்தின் கம்பீரமும், அதற்கு மாறான மனிதனின் தனிமையும், பலவீனமும், பரிதாபமும் என் மனதைத் தாக்குவன. அந்திமாலை வானத்துப் பின்னணியின் குருவிக் கூட்டங்கள் விரைவதை, அம்மாலை வானத்தில் மடியும் பரிதிபூசும் வர்ணஜாலங்களைப் பார்க்கும்போதெல்லாம் என் இதயத்திலே இனந் தெரியாததொரு சோகங் கவியும். ஓயாது அலையெறிந்து, தாவிப் புரண்டு மோதிச் சிதறும் கடலைப் பார்த்திருக்கும்போது என் குழந்தை இதயத்திலே உருத்தெரியாததொரு ஏக்கம் தோன்றும். இம்மாபெரும் பிரபஞ்சத்தின் அம்சங்களான இவையெல்லாம் என் உள்ளத்திலே ஆழப் பதிந்தன. சிருஷ்டி அற்புதமான இம் மகோன்னதப் பிரபஞ்சத்தைப் பற்றி எவ்வளவுக்கெவ்வளவு எண்ணினேனோ அவ்வளவுக்கவ்வளவு மனிதனின் சிறுமையை, தனிமையை, அறியாமையை, பலவீனத்தை உணரலானேன் மெல்ல, இக்கம்பீரப் பிரபஞ்சப் பின்னணியிலே நடமாடும் சாதாரண மனிதர்களின் வாழ்க்கை நாடகத்திலே என்கவனம் செல்லலாயிற்று. என்னைச்சுற்றி வாழ்ந்தவர்களை, அவர்களின் செயல்களைப் பிரதிசெயல்களை, இன்பதுன்பங்களை அவதானிக்கத் தொடங்கினேன். காலம்செல்ல, என் அறிவு வளர்ச்சியுற, என்னைச் சுற்றிலுமுள்ள சாதாரண வாழ்க்கையின் உள்ளந்தொடும் தன்மையை உணரலானேன். ஒரு சாதாரண மனிதனின் சாதாரண வாழ்க்கையிலேதான் உண்மையான உள்ளமுருக்கும், உயிர்த்துடிப்புள்ள கதை அடங்கியிருக்கின்றது. குழந்தைப் பிராயத்திலே சாகசத்திலும் கற்பனைத் தோற்றங்களிலும் கண்ட கவர்ச்சியை விடக்கூடிய கவர்ச்சியை ஏடறியா இச்சாதாரண வாழ்க்கை நாடகத்தில் கண்டேன். இப்பிரபஞ்சத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது மனிதன் அற்பமானவன் தான். ஆயினும் இப்பிரபஞ்ச நாடகத்தோடு தொடர்புசெய்து பார்க்கும்போது ஒரு தனி மனிதனின் வாழ்க்கை, அவன் இன்பதுன்பங்கள், பாசபந்தங்கள் எல்லாம் முக்கியத்துவம் அடைகின்றன. நான் ஒரு

காட்சியாளர் ஆனேன். ஒதுங்கி நின்று என்னைச்சுற்றி நிகழும் வாழ்க்கை நாடகத்தைக் கவனிக்கலானேன். அதில் பங்குபெறும் மனிதரின் வாழ்க்கைப் பிரச்சினைகளை, ஆசாபாசங்களை, போராட்டங்களை, வெற்றி தோல்விகளை நம்பிக்கைகளை, ஏமாற்றங்களை, தைரியத்தைக் கவனிக்கலானேன். என்னை உருவாக்கியதென்று ஒன்றிருந்தால், அது ஏமாற்றம் நிறைந்த இச்சாதாரண வாழ்க்கை நாடகம்தான். நான் கற்றுள்ளதெல்லாம் இதிலிருந்துதான். இவ்வாழ்க்கை, உணர்ச்சி வசப்படாத நடுநிலை நோக்கை, ஓரளவு எனக்குக் கற்பித்துள்ளது. இன்னொரு மனிதன் — அவன் கள்ளனோ, கோழையோ, கொலைகாரனோ அன்றிக் காமுகனோ — நீதிபதி ஸ்தானத்திலிருந்து அவன் மீது தீர்ப்பளிக்க நீயார் என்ற கேள்வியை இது எழுப்பியுள்ளது. மனிதனின் ஆத்மா பெருஞ்செயலாற்றும் திறமுள்ளது. மனித ஆன்மா மேம்பாட்டை, ஏற்றத்தை, வீரத்தின் உச்சியைத் தியாகத்தின் சிகரத்தை அடையவல்லது. இறைவன் நிலைகக்கே உயரவல்லவன் மனிதன். ஆயினும், அதேசமயம், சந்தர்ப்ப விசேஷத்தால் இழிந்த, தீய நிலைக்குத் தாழ்ந்துவிடும் தன்மையுடையவன் மனிதன். அன்பும் அருளும் உறையும் மனித இதயம்தான் கேவலமான, கொடூரச்செயலும் புரிகிறது. உண்மையில் நன்மை, தீமை, பழி பாவம், ஒழுக்கம் என்பதெல்லாம் என்ன? தொடர்பு குறிக்கும் சொற்களான இவையெல்லாம் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மனிதன் எவ்வாறு ஒழுகுகிறான் என்பதை வருணிக்கின்றன. அச்சந்தர்ப்பங்களோ மனிதனால் தேர்ந்தெடுக்கப்படுபவையல்ல. என்னைச்சுற்றிலும் இயங்கும் மனித வாழ்கை, நானே அதன் ஒருகூறுயுள்ள மனித வாழ்க்கை என்னை உருவாக்க உதவியதோடு, என்போன்ற மற்றும் மனிதர்களை வெறுக்கவோ, அவர்கள்மீது தீர்ப்புக்கூறவோ விடாது தடுக்கும் மனிதத்தன்மையை ஓரளவு எனக்கு ஊட்டியுள்ளது. இதுவரை நான் புரிந்துள்ள சிறிய எழுத்துப்பணியிலே இவ்விதியை அனுசரித்துநிற்க முயன்றுள்ளேன். வாழ்க்கையை இவ்வாறு நோக்குதல் நமது பண்பாட்டுக்குப் புதிதானதோ அன்றி அந்நியமானதொன்றோ அல்ல. ஆனால் பாசாங்கிலே மூழ்கிக் கிடக்கும் நாம்தான் இதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம். இலக்கியத்தில் மனிதத்தன்மை என்னும் கருத்தை மேலைநாடுகள், யுத்தத்திற்குப் பிந்திய பெரும் கண்டுபிடிப்பாய் இன்று கொண்டாடுகின்றனர். ஆயினும் இதைவிட ஆழ்ந்த சீரிய மனிதத் தன்மையைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த, வேதரிஷிகளின் பாடல்களிலும் "...மாட்சியின் பெரியோரை வியத்தலும் இலமே; சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" என்ற சங்கப்புலவரின் பாடல்களிலும் காணலாம். ஆயினும் இச்சான்றோரின் வழிவந்த நாம், அவர்கள் எமக்களித்துச்சென்ற உண்மைகளை, உறுதிகளைத் தேடி இன்று, காலத்தில் பின்னோக்கிச் செல்லவேண்டியிருக்கின்றது, இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்குகையில் என்னைப் பொறுத்தவரை எழுத்தாளராக என்னை உருவாக்கியவர்கள் இவர்கள் என்பதைவிட உருவாக்கியவை இவை என்று சொல்வதே பொருத்தமாகும்.

ஆனால் என்னை எழுத்தாளரென எழுத்துலகிற்கு அறிமுகம் செய்துவைத்தவர்களுமுளர். அவர்களுக்கு என்றுமென் நன்றி. அவர்களுள் என் முதற்கதையைப் பிரசுரித்த 'ஞாயிறு வீரகேசரி'யையும் என்னை இளம் எழுத்தாளரென அறிமுகம் செய்துவைத்த 'கலைச்செல்வி'யையும் முக்கியமாய்க் குறிப்பிடவேண்டும்.

கலைச்செல்வி ஆடி இதழில் அன்பர் மு. பொன்னம்பலம் அவர்கள் "ஒருவன், இன்னொருவன்" என்ற நல்ல கவிதையை எழுதியிருந்தார். கவிதை எழுப்பிய வினாவிற்கு விடையாக அமைகின்றது பண்டிதர் நடராஜன் எழுதிய "வாய்க்குமொருநாள்."

# வாய்க்குமொருநாள்

வ. ந.

1. நேர்மாறிக் கிடக்கின்ற உலகேநீ எந்நாள் - சம
ஓர்மட்டத்தினையொட்டி உயர்வுற்று நிற்பாயென்
றூர்வத்தோ டாவலுறு மன்பபொன் னம்பலவ - இப்
பார்கூறு முதாரணங்கள் பகர்வனொரு சிலவே.

2. பாரின்மிசை மலைமடுக்கள் பார்த்துமகிழ் வோமோ - இப்
பாரதனி லியற்கையிது மாறிலழ கெங்கே?
நீரின்நிலை யுளதாமோ நீள்மடுக்க ளின்றேல் - மழை
நீரெங்கே யாகுமலை யில்லாது போனால்.

3. மலைகடல்கள் தம்முன்மறு மாற்றமதியைந்தே - இவ்
வலைகடலி னீர்மாறி ஆவியது வாகி
மலையடைந்து மழையாகி மன்னுலகைக் காக்கும் - இம்
மாற்றமது இல்லையெனில் மாநிலமு முளதோ?

4. இரவுபக லிவைதம்முள் ளிணையில்லை யாக - இவ்
விரவுபக லற்றதொரு நிலைநன்றோ கூறீர்?
பரவுபுக ழுலகியற்கை இதுதானே காண்பீர் – பண்
பாடு பெற்ற மக்களொடு மற்றவரும் உளரே.

5. மாரியொடு கோடையிவை மாற்றமிக மன்னும் - ஆக
மாரிகோடையற்ற நிலை மன்னிடுதல் நன்றோ?
பாரியொடு உலோபிகளும் பாரினிலே உண்டு - புவி
பகரியற்கை இருவேறு; வள்ளுவர்சொல் லீதே.

6. ஆண் பெண்ணு யியையுநிலை அநீதியெனக் கொண்டு - அவ
வாண் பெண்க ளற்றநிலை அவனியிலே உண்டோ?
மாண்புடைய ஈஸ்வரனார் மன்னுமுமை தேவி - போல்
மன்னுநிலை யெமக்குமது வாய்க்குமொரு நாளே.




அவள்—

கன்னி! கைபடாத புத்தம் புது மலர்...—! பனிமலர்...—

அவளின் உள்ளே முகிழ்த்துக் கொண்டிருந்தது பருவம்...! இதழிடை மணம்நிறை மகரந்தம் அவள் உடலிலே புத்துணர்ச்சியைக் கிளறிவிட்டுக்கொண்டிருந்தது...;

காலைப்பொழுதில் அவள்முழுமையடைந்து, பெண்ணானாள்!... விபரம் புரிந்த 'கன்னி' ஆனாள்... அவளின் விழிகளிலே இன்ப மயக்கத்தின் தாக்கத்தால் ஏற்பட்ட 'சிவப்பு' நாணம் பூத்தது!... மோகனப் புன்னகை சிந்தி விரிந்த அவள்—

தாமரை!

அவளின் மெல்லிய இதழ்களைக் காலைக் கதிரவனின் மென்மைக் கரங்கள் தழுவத்தொடங்கின!... வன்மை மென்மைமுன் தோற்றுக்கொண்டிருக்கிறதா?... அந்த வெற்றிகொண்ட போதையில் அவள் 'பெண்மை' விழிப்புறுகிறதா?... ஆதவனின் அணைப்பிலே திணறுகையிலேயே—

அவள் மனம் ஏன் இப்படிப் பேதலிக்கவேண்டும்!...

'சீ! அவள் ஒரு பெண்ணா?... பெண் குலத்துக்கே இழுக்கல்லவா?

கொண்டவன் அருகிருக்கையிலேயே இப்படி ஒரு துர் எண்ணமா?

எங்கிருந்தோ பறந்துவந்தான் அந்தக் காதகன்!... அவனுக்கு இதெல்லாம்விளையாட்டு!... பெண்களை விளையாட்டுப் பதுமைகளாக்கி வேடிக்கை பார்ப்பதில்...... அவர்களின் விலைமதிப்பற்ற செல்வமாம் 'கற்பை'ச் சூறையாடி வாடவைப்பதில் வல்லவன்!... அவன் பரம்பரைக்கே உரித்தான திறமைகூட!... அவன்—

மதுகரன்!

அவன் பாடினான்! பாடி ஆடினான்!... கன்னியின் முகாரவிந்தம் வியப்பால் மலர்ந்தது!... அவளைப் பார்த்தான்! அடடா! எவ்வளவு

உலகில் எல்லாருக்கும் "ஞானம்" நன்றாக வாழும்போதே வந்துவிட வேண்டும். தானே அழியும் தறுவாயில் ஏற்படும் சுடலை ஞானத்தால் உலகில் எவருக்குமே பலன் கிடைப்பதில்லை.

அழகு!... உயர்குலப் பெண்ணின் மைதீட்டிய கருநீல விழிகளைப்போல அவன் கருமேனி கதிரொளியில் பளபளத்தது!... அவன் இன்னிசையோ...?

தேவகானமா?— கிம்புருடனின் நாதவெள்ளமா? அவனின் மதுர கண்டத்திலிருந்து வெளிவந்துகொண்டிருக்கும் நாதச்சுழிப்பிலே ... தன்னை மறந்தவளாக... எங்கோ எங்கோ சென்றுகொண்டிருந்தாள்!... வானப் பெருவெளியில் வானம்பாடியாக... மானஹம்சத் தடாகத்தில் நீந்தும் அன்னப்புள்ளாக... 'தன்'னிலிருந்து 'தான்' நழுவி நிற்கையிலே...

"மலரே! மலரே!..." கதிரவன் அழைத்தான். அவள் கவனம் திரும்பவில்லை! கதிரவன் அழைப்பு வெறுமையில் மோதி உருவழிந்தது! கதிரவன் நொந்த மனதுடன் தன் கடமையைச்செய்ய முன்னேறினன்.

'தடை' நீங்கிய துணிவில் அவன் அவளை நெருங்கிப் பறந்துவந்தான்! மதுநிகர் இசையால், மதுமலர் மங்கையவளை மயக்கினன்!... மயக்கம் மயக்கத்திலாழ்ந்தது!... எங்கும் மயக்கம்... அவள் தன் இதழ் பிரித்து அவனுக்கு 'மஞ்சம்' சமைத்தாள்!... அவன் வெறியனானன்!... மதுவுண்ணும் 'குடி'யனானன்!...

ஒன்றில் ஒன்று இணைந்தது!...

மோகம்!

வெறி!

தாகம்!

வேட்கை!

ஏதோவொன்றை இழந்த சோர்வில் அவள் தளர்ந்தாள்!... அவளிடமிருந்து ஏதோவொன்றைப் பெற்ற மகிழ்வில் அவன் மகிழ்வு கொண்டான்!... தன் 'வேலை' முடிந்து நேரம் வந்துவிட்டதை உணர்ந்தான்!...

"மலரே! நான் சென்றுவரட்டுமா?

"அதற்குள்ளாகவா?" — மலருக்கு ஒரே ஏக்கம்.

"நானை வருகிறேன் கண்ணே! கலங்காதே!... விடைகொடு!" என்ருன். ஒல்கி ஒசிந்து நாணத்துடன் தலையசைத்து விடைகொடுத்தாள் அவள்.

அடுத்தநாள் புலர்ந்தது!...

நாயகன் வரவை எண்ணி நங்கையவள் மகிழ்ந்திருந்தாள்!... ஆனல்... மதுகரன் வரவேயில்லை... மலரின் நெஞ்சம் துடித்தது!... ஏன் ... ஏன்?... ஒருவேளை வரும் வழியில் அவருக்கு ஏதாவது...?" பெண்களுக்கே உரித்தான முறையில் அவள் நெஞ்சம் துடித்தது!...

கதிரவனைப்பற்றிய எண்ணமேயில்லை மலருக்கு!...

அடுத்தநாள் மலர்ந்தது! மதுகரன் வரவேயில்லை!...

மலரின் நெஞ்சம் கலங்கியது! ஏன்?... ஏன்?... அவருக்கு என்ன நேர்ந்துவிட்டது?... அவளுக்குத் தெரியுமா அவன் வேருெருத்தியை நாடிவிட்டான் என்று!...

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு... ஐந்து... ஆறு... நாட்கள் கழிந்துவிட்டன...

அவன் வரவேயில்லை!

மலர் மேனியில் பசலை படியத் தொடங்கியது!... யௌவனம் குன்றி

யது!... அழகு மடிந்துகொண்டிருந்தது!... அவளுக்கு ஒரே ஏக்கம்!... அவன் வரானு?... வரவே மாட்டானு?...

பெண்ணினமே அப்படித்தானே! கொண்டவனுக்காகத் தன் அழகு யௌவனம் எல்லாவற்றையும் தியாகம் செய்துவிட்டு அவனின் அன்புக்காக மண்டியிட்டுக் கிடக்கும் அன்புத் தெய்வங்களல்லவா?...

ஏழாம்நாட் காலை...

மதுகரன் அவளைநோக்கி வந்து கொண்டிருந்தான்!... அவன் வருமுன் அவன் 'இன்னிசை' அவன் வருகையைப் பறைசாற்றியது!...

'ஆ! மலருக்கு மகிழ்ச்சிப் பெருக்கம் தாங்கமுடியவில்லை... இதோ!... அவனது வருகை நெருங்குகிறது! இதோ இன்னும் சிறிதுவிநாடியில் என்னைத் தழுவித் தேறுதல் கூறுவான்... 'அடடா!... உன்மேனி வாடிவிட்டதே!... நான் வரவில்லையே என்ற ஏக்கத்தால் மெலிந்தாயா அசடே...!"—என்று தேற்றுவான்! அப்புறம்... அப்புறம் நடக்கப்போவதைக் கற்பனையில் எண்ணியபோதே மலர் முகம் செக்கச் செவேலெனச் சிவந்தது!

"ஆ! இதென்ன! மதுகரன் அவளைத் தாண்டிச் செல்கிருனே! கவனிக்கவில்லையா?...

" அன்பா! இதோ உன் காதலி. இங்கிருக்கிறேன்!... என்னை மறந்தா செல்கிருய்?... நில்!" — மலர் கூவி அழைத்தது.

மதுகரன் அலட்சியமாகத் திரும்பிப் பார்த்தான். "ஏய்! என்ன கூப்பாடு போடுகிருய்?... என்னை ஏன் அழைத்தாய்?... என் தேவையைப் பூர்த்திசெய்யும் ஆற்றலில்லாத உன்னிடம் எனக்கென்ன வேலை!...

மதுகரன் போயேவிட்டான்!...

கொண்ட கணவனுக்குத் துரோகமிழைத்த அவள் முதன்முதலில் சிந்தனையிலாழ்ந்தாள்!... ஞானம் பிறந்தது!

ஏழு நாட்களாகக் கதிரவனை உதாசீனம் செய்துவிட்டேனே!... அவன் என் காதலுக்காக — அன்புக்காக — கலங்கியவனல்லவா?... அவன் அன்பை உதாசீனம் செய்ததற்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்!"... என்று தன்னையே நொந்துகொண்டாள்.

அடுத்தநாட்காலை... எட்டாம் நாள்!... அதோ!—

கதிரவன் வந்துவிட்டான்! அவனை அழைக்கத் தனது வாயைத் திறந்தாள்! முடியவில்லை!... வயதாகிவிட்டதல்லவா... மலரின் இதழ்க்ள் எல்லாம் உதிர்ந்து நீரோட்டத்துடன் செல்கின்றன! அவள் —

'ஜலசமாதி' ஆகின்ருள்

இதையெல்லாம் கவனித்துக் கொண்ட கதிரவன் தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

"உலகில் எல்லாருக்கும் 'ஞானம்' நன்ருக வாழும்போதே வந்துவிட வேண்டும். அதனுலதான் பலனும் கிடைக்கும்... ஆனல்... தானே அழியும் தறுவாயில்... இறக்கும் வேளையிலே... ஏற்படும் 'சுடலை ஞானத்தால் உலகில் எவருக்குமே பலன் கிடைப்பதில்லை... இந்தத் தாமரையைப்போல ஏங்கி அழியவேண்டியதுதான்!... இதனல் ஆத்மாகூட சாந்தியடையாமல் அலைய நேரிடுகிறது."

ஈடு மீட்கவா! வீடு கட்டவா!!

சீதனம் கொடுக்கவா!!!

இதைப்போல் எதற்கும

# இலங்கா நிதி லிமிற்றெட்

நவீன சேமிப்பிற் சேருங்கள்

இலாபத்துடன் கொடுக்கும் தொகை

| மாதவீதம் கட்டுவது | 30 மாதங்களில் | 60 மாதங்களில் | 100 மாதங்களில் |
|---|---|---|---|
| 10 ரூபா | 330 ரூபா | 750 ரூபா | 1300 ரூபா |
| 25 ரூபா | 825 ரூபா | 1800 ரூபா | 3250 ரூபா |
| 50 ரூபா | 1650 ரூபா | 3600 ரூபா | 6500 ரூபா |

மேற்குறித்த இலாபத்துடன்
ஒவ்வொருமாதமும் அதிட்டசாலிகளுக்கு
அதிட்ட இலாபமும் கொடுக்கப்படும்

கட்டுபவர் இறந்தால் உரித்தாளிக்கு
கட்டிய பணத்துடன் கால் பங்கும் கொடுக்கப்படும்.

மறுவிபரத்திற்கு:

**இலங்கா நிதி லிமிற்றெட்**

தலைமைக்கந்தோர்:

**திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்**

கிளை;


284, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை

# இசைத்தமிழ்

ப. முத்துக்குமாரசாமி

## தொன்மை

உலகத்தில் முதல் இனம் தமிழினம். முதல்மொழி தமிழ்மொழி. கல்தோன்றிய பின்னர் அதினின்றே மண்தோன்றிற்று என்று விஞ்ஞானிகள் விளக்குகின்றார்கள் 'கல்தோன்றிமண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி' என்று ஆன்றோர் கூறினர். இத்தனை தொன்மை மிக்க தமிழினம் இசை, நடனம், நாடகம், சிற்பம் காவியம், ஓவியம், கலாச்சாரம், பண்பாடு, மொழி, மதம் முதலிய எல்லாத் துறைகளிலும், பிறவற்றிலும் மேன்மையுற்றுச் சிறந்து வாழ்ந்தனர் என்பதற்குச் சமீபத்தில் தொல்பொருள்ஆராச்சியாளராற் கண்டுபிடிக்கப்பட்ட நாகரீகத்திற்சிறந்த நகரங்களான மொகஞ்ச-தாரோ ஹரப்பா விளக்கந் தருகின்றன. இந்நகரத்தின் பொருட்களை நாணயங்களை ஆராயும்பொழுது இவை கி. மு. 3000 ஆண்டுகட்குமுன் சிறப்புற்று விளங்கி மறைந்திருக்கின்றன என்று தெரியவருவதாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.



சங்கீதபூஷணம் ப. முத்துக்குமாரசாமி அவர்களின் இசை அரங்கேற்றம் சமீபத்தில் புளியங்கூடல் ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி கோவிலில் நடைபெற்றது. இந்தியாவிலுள்ள சங்கீத வித்துவான்களின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்ற இவர் இலங்கையில் இசைத்தமிழின் வளர்ச்சிக்கு உழைக்க முன்வந்துள்ளார்.

## சிறப்பு

தமிழ் என்றாலே இனிமை என்று பொருள். "தேமதுரத்தமிழோசை" என்று பாரதியார் பாடுவது இன்னமும் காதுகளில் ஒலிக்கின்றது. இந்த மதுரத் தமிழை இயல்-இசை- நாடகம் என்று பிரித்தசிறப்பு எமக்குமட்டுந்தான் உரியது. வேறு உலகின் எந்த இனத்திற்கும் இல்லை. இங்கு இசையை நடுவணவைத்து, இயலையும் நாடகத்தையும் பக்கத்தே வைத்துப் பெருமை பாராட்டியிருக்கிறார்கள் நம் பெரியார்கள். இயலையும் நாடகத்தையும் இசைவிப்பது இசைதான். ஆராய்ச்சியாளரால் சரியான காலத்தைக்குறிப்பிடமுடியாது திகைக்கவைக்கும் சிறப்புக்கள் நிறைந்த தமிழ் பல்லாயிரம் ஆண்டுகட்குமுன் முச்சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்திருக்கின்றது. முதற்சங்க காலத்தில் பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம் இசை

நுணுக்கம், இந்திரகாளியம் முதலிய இசைநூல்களை ஆக்கித் தமிழன்னையின் கழுத்தில் ஆரமாக அணிவித்திருக்கின்றார்கள் முன்னோர். அத்துணை தொன்மையும், சிறப்பும் பெருமையும் உடையது நம் இசைத்தமிழ்.

## மாற்றம்

சிறப்புடன் விளங்கிவந்த தமிழ்நாடு முகலாயர் படையெடுப்பால் சீர்குலைந்த காலத்தில் நுண்கலைகளும் சிதைந்தன. அவர்கள் இசை புகுந்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்திவிட்டது. ஏகமும் ஒரே இசையாக இருந்தநிலை மாறி இரண்டுவிதமாக மாறிற்று. இதனால் நம் பழைய இசைக்குக் கருநாடக இசையென்றும், புது இசைக்குக் ஹிந்துஸ்தானி சங்கீதம் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. சுத்தமான தமிழ் இசையில் சில வேற்றுமுறைகளும் கலந்தன. ஆனால் இன்றும் எமது இராகங்களில் எவை எவை வெளியிலிருந்து வந்தவை என்பது புலனுகப் பெயர்களிலேயே அவைகளைப் பிரதிபலிக்க வைத்துள்ளனர். உதாரணமாக, ஹிந்துஸ்தான் காந்தாரி- கர்நாடகதேவ காந்தாரி — ஹிந்துஸ்தான் பெஹாக் என்பவற்றைக் கூறலாம். இந்தச் சேர்க்கையினல் விரிவாக வளர்ந்துவந்த தமிழிசையின் வளர்ச்சி தடைப்பட்டதென்று கூறலாம்.

## இன்றைய நிலை

இன்றைய இசையின் நிலையைப் பற்றிக் கூறின், நமது பழைய சிறந்த நிலையை இசை இன்னும் அடையவில்லையென்றே சொல்ல வேண்டும். பண்டைய நாட்களில் இருந்த வாத்தியங்களைப் பெயரளவில் நாம் அறிய முடிகிறதேயன்றி அவற்றை நேரில் காணவோ, அவை தம் இசையின்பத்தை அனுபவிக்கவோ முடியவில்லை. அன்னையாம் தமிழ்மொழியில் பாடிவந்த இசை மறைந்து வேற்றுமொழி நிறைந்த காரணத்தால் தமிழிசை என்றால் வெறுப்புணர்ச்சி ஏற்படும் நிலை இருந்துவருகின்றது. தமிழில் பாடுவது அவமானம் என்ற எண்ணம் மனதிற் பதியும் அளவுக்கு நம் இசைத்தமிழ் தாழ்த்தப்பட்டிருக்கிறது என்பதைக்காண, உணர எம் அறிவீனம் நன்கு புலப்படும். வேற்றுமொழிப் பாடல்கள் முக்யத்வம் அடைந்து பாடிப்பாடி மெருகேறிய காரணத்தால் தமிழ்நாட்டில், தமிழ் மகனல், தமிழிசை இயக்கம் என்றொரு இயக்கமே ஏற்படவேண்டி இருந்திருக்கிறது. தாய்மொழியைப் பழித்தவனைத் தாய்தடுத்தாலும் விடேன் என்று கூறிய மறத்தமிழன் வழிவந்த தமிழரிடை ஒரு தமிழிசை இயக்கம். தமிழ்மகன் எவனவது தலை நிமிர்ந்து நடக்கலாமா? எனவே இன்றைய இந்தநிலை மாறவேண்டும்.

## சீர்திருத்தம்

இசைக்கலைஞர்கள், தமிழே பாடுவதெனச் சபதமெடுத்தல், தமிழிசை வகுப்புக்கள் நடாத்தல், இசைத்தமிழ் விழாக்கள் நிகழ்த்தல், இசைத்தமிழ்க் கழகம் கண்டு இசைத்தமிழ் வளர்த்தல், பெற்றார்கள் வீட்டுக்கொரு பிள்ளையை இசைத்தமிழுக்கர்ப்பணித்தல், இசைத் தமிழ்க் கலைஞர்களை ஆதரித்தல்; வீட்டிலும் கோவிலிலும், பள்ளிக்கூடங்களிலும் மற்றும் முடிந்த இடங்களிலெல்லாம் தமிழோடு இசைபாடல்; மறவாது செய்தல். இவற்றால் இசைத்தமிழ் வளரும். தமிழ்நாடு உய்யும். தமிழ் மக்கள் சீருடனும் சிறப்புடனும் வாழ்வர். வாழ்க இசைத்தமிழ்.

என்ன? பாவம்! 'புரொடக்டிவ் கப்பாசிட்டியில்' பன்றியின் நேர் வாரிசாக நானும் அவளும் இருந்து வருகிறோம் என்பதை ஓங்காரத்தால் உலகிற்கு உணர்த்தவேண்டிய கடப் பாடு அவளுக்கு! என்ன செய்வாள் நாலு வருஷத்தில் நாலாவது ஈத்து!

பரபரவென்று எழுந்திருக்கி றேன். முன்னால் வேலைகள் நிறை ந்து கிடந்து மனத்தையும், சிந்தனை யையும் விறைக்கச் செய்கின்றன! பாயைக் கழுவி, மலம் எல்லாம் சுத்தம்செய்து, கோப்பிவைத்து மத் தியானத்திற்கு ஏதாவது தயார் செய்து.......

நல்லகாலம்! முதலிரண்டு பிள் ளைகளும் ஊரிலே பேர்த்திமாரோடு இருக்கின்றன. இல்லாவிட்டால் பைத்தியம்தான் பிடித்திருக்கும் இது வரையில்........!

பாய்களைத் தூக்கிக்கொண்டு கிணற்றடிக்குச் செல்கிறேன். மனைவி கிணற்றடியிலே சுவரைப் பிடித்துக் கொண்டு வயிற்றை வாய்வரையிலே வாந்தியாகக் கொண்டுவந்து கொண் டிருக்கிறாள்.

இன்னும் இரண்டு குழந்தைகள் பிறந்தால் ஆளைச் சுகாதார ஆய்வு கூடத்திற்கு எலும்பாராய்ச்சி செய்ய அனுப்பிவைத்துவிடலாம். நாலு வருஷ இல்லறவாழ்க்கை அவளுக்கு அளித்துள்ள பரிசெல்லாம் இதே தான்! பார்க்கப் பரிதாபமாக இருக் கிறது.

ஒரு தமிழ்வாத்தியின் வாழ்க்கை யிலே பரிதாபப்படும் ஒன்றுக்குத் தானே வசதி இருக்கிறது? பின்னே பிறைவேற் நேசிங்ஹோமிற்குக்கொ ண்டுசெல்லவும், கண்ட கண்ட 'ரொனிக்' வாங்கிக்கொடுக்கவும் அவ னிடத்திலே காசு குவிந்தா கிடக் கிறது? ஆயா வைக்கவும், பிள்ளை களைப் பார்த்துக்கொள்ளத் தாதிகளுக் கும் அவன் எங்கே போவான்?

ஆற்றாமை நெஞ்சுக்குள்ளே, புகுந்து ஏமாற்றப் பெருமூச்சாய்க் கீறுப்பட்டு வெளிவரத் தடுமாறுகி றேன். தடுமாறினால் மட்டும் முடிந்து விடக்கூடிய காரியமா? ஏற்ற சிலு வையை இறக்கும் வரையும் இன்னல் தான்! தொழுதாலும் அழுதாலும் போய்விடுமா என்ன?

யந்திரம்போல மாறிவிடுகிறேன். பாயைக் கழுவிக் கொடியிலே காயப் போடுகிறேன். பிள்ளையைக் கழுவிப் புதிய படுக்கையிலே கிடத்துகிறேன். சென்று அடுப்பை மூட்டுகிறேன்.

பெண்மையின் திறமையெலாம் இந்த அடுப்புக்குள்ளேதான் ஐக்கிய மாகி இருக்கிறது என்ற ஞானோ தயம் ஏற்பட அதிகநேரம் ஆக வில்லை.

அடடா! இந்தச் சின்னஞ்சிறிய தென்னை மட்டைக்குள்ளே இவ்வளவு புகை எப்படி ஒளிந்திருந்தது? எனது மூச்சுக்காற்றை எல்லாம் உறிஞ்சிக் குடித்துவிட்டு வெற்றி எக்காளம் இட்டு அது புகைவதைப்பார்!

சுமார் அரைப்போத்தல் மண் ணெய் ஊற்றி, ஒரு 'கல்கி' புத்தகத்தைக் கிழித்துப்போட்டு, இரண்டுபெட்டி தீக்குச்சிகளையும் சாம் பராக்கி..........

அப்பாடா! அடுப்பு எரியத் தொடங்கிவிட்டது. பரவாய் இல்லை யே!

5/53, I Floor W. E. A.
Karolbah
New Delhi-5
30-6-62.

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம். யான் புதுதில்லியிலிருக்கும் அனைத்திந்திய வானொலி செய்தித்துறை (தமிழ்) தன்னில் துணையாசிரியனாகப் பணியாற்றுகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்திலிருக்கும் செட்டிநாடு வட்டாரத்தினன். காரைக்குடி கொடைவள்ளல் அழகப்பர் கலைக்கல்லூரியில் தமிழ் M. A. பட்டம் பெற்றவன். தமிழக ஏடுகள் பலவற்றிலும் இலக்கியக் கட்டுரைகளும் கவிதைகளும் எழுதி வருகிறேன்.

"கலைச்செல்வி"பற்றிச் சிலசொற்கள்: இரண்டு மூன்று இதழ்களாகக் "கலைச்செல்வி" படித்துவருகிறேன். இந்த வதியும் என் எழுத்தாளநண்பர் ஒருவருக்குத் தாங்கள் அனுப்பி வருகிறீர்கள். அவரிடம் கேட்டுவாங்கிப் படித்துப் பயனடைந்தேன். எழுத்தாளர் மகாநாடுபற்றிய கட்டுரைப் பிணைப்பின் இன்றியமையாமையைக் காட்டுகின்றது. அந்தக் கண்கள் நன்ருக இருந்தது. "ஏன் காதலித்தாய்?" ஓரங்க நாடகம் மிக நன்று நடிப்பதற்கு ஏற்றது. உணர்ச்சிப்பிழியல்...... நல்ல தமிழ் ஏடுகள் தோன்றுவது வரவேற்றற்கு உரியதே! வளர்க!

அன்புள்ள
சொக்கு சுப்பிரமணியன்

"அந்தக் கண்கள்" எழுதிய "செங்கை ஆழியான்", "ஏன் காதலித்தாய்?"—செ. கதிர்காமநாதன் இருவரும் இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள்; புதிய எழுத்தாளர்கள். இவர்களது புகழைப் புதுதில்லி வரை பரப்பியதில் "கலைச்செல்வி" பெருமகிழ்ச்சியடைகின்ருள்,

—ஆசிரியர்

கோப்பி வைத்துவிட்டேன்! அவள் குடிக்கிருள். இனிக் கொஞ்சம் உதவிசெய்வாள்!

உண்மையிலே அவளைக்கொண்டு வேலைசெய்விப்பது படுபாவந்தான்! ஆனல் பாவத்தின்மீதுதான் இல்லறக்கோட்டை எழுகிறது என்ருல்... தற்பாதுகாப்புக்காவது அதனை அமைத்துத்தானே தீரவேண்டும்?

எப்படியோ அவித்துக் கரித்துத் தேங்காய் நெய்க்குப் பதில் மண்ணெய் ஊற்றி, கண்ணைக் கொவ்வைப்பழமாக்கி ஒருகறியும், குழம்பும் சோறும் காய்ச்சி விடுகிறேன்.

இனிப் பாடசாலை...! எங்கேயோ பிறந்தது எங்கேயோ வந்து யாருக்காகவோ கல்விக் சேவை செய்வதாகப் பாவனை செய்கிறது ஒருவகை வேதனை நிறைந்த விளையாட்டு. ஆனல் இந்த விளையாட்டுத்தானே எங்கள் வயிற்றிலே அரைவயிற்றுக் கஞ்சியாவது ஊற்றுகிறது?

இன்று வருடாந்தப் பரிசோதனை பரிசோதகர்கள் வருவார்கள், வீட்டு அதிகாரம், திமிரெல்லாம் ஒடுங்கிப் போய் அவர்கள் முன்பு கூனிக் குறுகிநிற்கத் தயாராக வேண்டும். இத்தனை வேலைகளுக்கு மிடையே எழுதாமல் விட்டிருந்த பாடக்குறிப்புப் பாக்கியை எல்லாம் ஒரு மாதிரியாக எழுதி முடித்துவிட்டது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது!

பல தொல்லைகளால் அவ்வப்போது எழுதி வைக்காமல், திரண்டு விட்ட பாடக்குறிப்புப் பளுவைக் கடைசிநேரத்திலே எழுதுகிற ஒன்றிருக்கிறதே? அப்பப்பா! இதற்குப் பதிலாக இரண்டு நாவல்கள் 'அலைஓசை' அளவில் எழுதி முடித்து, விமர்சன

கர்த்தாக்களின் நரி ஊளையையும் கேட்டுச் சகித்துக் கொள்ளலாம்!

எழுதி முடித்ததனல் மட்டும் நிம்மதி ஏற்படுகிறதா? பரிசோதகன் என்றமகானுபாவன் வகுப்பிலேவந்து என்ன என்ன திருவிளையாடல் செய்கிருனே, எங்கே பிழையைக் கண்டு ஆள்மீது பாய்கிருனே என்ற நடுக்கம் வேறு! ஆனல் நடுங்க இதுவா நேரம்! ஓடுகிறேன்; ஒரு காகக் குளிச்சல்! உடுப்பு மாற்றல். சாமி படத்திற்குமுன்னல் ஒரு சிறு சல்யூட்.

கோப்பி குடிக்கப் போகிறேன். இந்த மாதச் சம்பளப் பணத்தின் நினைவும், அதைப் பிய்த்துப் பிடுங்கி அவனுக்கும், இவனுக்கும் கொடுத்து விட்டு அவலப்படவேண்டிய நிலையும் விசுவரூபம் எடுத்துக் கோப்பியை விஷமாக்குகின்றன.

உனக்கு என்ன? ஊரிலே இருக்கிருய்! உழைத்ததில் ஒன்றுக்குப் பாதி மிச்சம்! தனிக்காட்டு ராஜா!

நான் அப்படியா? ஆண்டுக்கு ஒரு வனவாசமாகப் பாரதம் வாசிக்கிற நிலையல்லவா என்னுடையது? கடனும், கரைச்சலும் வராமல் என்ன செய்யும்? சென்ற வருடம் கொழும்பு. இந்தவருடம் மாத்தளை! அடுத்த வருடம் எங்கெங்கோ? யாரறிவார்?

நினைவுகள் தட்டாமாலை ஆடுகின்றன. எதிர்காலம் காலைப் பரிதியின் ஒளியிலேகூட 'மை' யிருளாய் நெஞ்சைச் சூழ்ந்து கொள்கின்றது. சேச்சே! இதுவும் ஒரு வாழ்வா?

இப்படி எல்லாம் எண்ணிக் கொண்டு மனைவியும், மகனும் படுத்திருக்கும் இடத்திற்கு அருகே செல்கிறேன்.

நண்பா! நண்பா! நண்பா!

என்ன சொல்வேனடா?

எரிந்து அணைந்து போய்ப் புகையும் குறைக் கொள்ளி போல-

கருகிய நிலையிலே என் மனைவி கிடக்கிருள்.

அவள் பக்கத்திலே......

பழந்துணி போலத் தொய்ந்து போய்க் கிடக்கிருன் என் மகன்!

அவர்கள் என்னைப் பார்த்துப் புன்னகை பூக்கிருர்கள்......

ஆ..........!

எனது வேதனைகள் தத்துவ விசாரங்கள் எல்லாம் மறைந்து போகின்றன. ஆடிக்காற்றிலே பறந்துவிடும் பஞ்சு போலத் தூரப் பறந்து விடுகின்றன. உண்மை விமர்சகன் முன் தேசிய இலக்கியம் பற்றிப் பேசும் கற்றுக்குட்டி எழுத்தாளன் போல அவை விலகி விலகி ஓடுகின்றன!

அவள் குறைக் கொள்ளிதான்!

ஆனல் அந்தக் குறைக் கொள்ளி புகையும்வரைதான் எனக்கு நிம்மதி அந்தக் கொள்ளியிலே ஜுவாலித்து எரிந்த ஜீவ ஒளிதான் என்வாழ்விலே தீபம், ஏற்றி வைத்தது! அவளுடைய சிரிப்பு ஒன்றிலே எனது தாம்பத்திய வாழ்க்கை தளம்பாது ஓடுகின்ற நம்பிக்கைச் சுடர் பிறக்கிறது

என்மகன் என்ற அந்தப் பழந்துணியிலேதானே, எனது ஆசைகள் கனவுகள் எல்லாவற்றையும் பொதிந்து வைத்திருக்கிறேன்?

நண்பா!

முதல் இரவின் உணர்ச்சிவேகத்தோடு அவர்களின் கன்னத்திலே செல்லமாகத் தட்டுகிறேன். என் செல்வத்தைக் தூக்கி ஆதுரத்துடன் முத்தமிடுகிறேன்.

அந்த அன்புத்தட்டலிலும், முத்தத்திலும் இருந்து ஏதோ ஒரு மின் சக்தி தோன்றி எனக்குப் புத்துணர்ச்சி ஊட்டுகிறது. கம்பீகரமாக பாடசாலையை நோக்கி நடக்கிறேன்...

என்னை அதிர்ஷ்டசாலி என்று நீ சொன்னதற்காக உன்னை மன்னித்துவிடுகிறேன்.

ஆம்! நான் அதிருஷ்டசாலி தான்! எனக்கு மனைவி இருக்கிறாள்; பிள்ளைகள் இருக்கின்றன!

அவர்களுக்காக நானும், எனக்காக அவர்களும் வாழ்வதிலேதான் உண்மையான அர்த்தம் இருக்கிறது.




கவர்ச்சியான படங்கள் பிடிக்க ஏற்ற ஸ்டுடியோ

"கலைச்செல்வி"மூலம் அறிமுகமான கவிஞர் பா. சத்தியசீலன் சென்ற ஆனியில் நடைபெற்ற இளம் எழுத்தாளர் சங்க ஆண்டுவிழாக் கவியரங்கில் கலந்துகொண்டார். எழுத்தாளர்கள், கவிஞர்கள், விமர்சகர்கள். வாசகர்கள் அடங்கிய சபையினர் அவருடைய கவித்திறமையைப் பாராட்டினர். எல்லாரது பாராட்டையும்பெற்ற கவிதையை மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்ருேம்.

# பாடிப் பயனென்?

## பா. சத்தியசீலன்

தாவாடும் சொற்கள் தழைத்தாடும் என்வாயிற்
பாவாட விட்டவளைப் பாடிப் பரவுகிறேன்.

காடெடுத்து மற்ருேர் கலையெடுக்கு முன்னர்
நாடெடுத்து நகரெடுத்து நாகரிகம் கண்டவளே,
காவிரியில் நீராடிக் காஞ்சிக் கலைகண்டு
பாவிரியும் கூடலிலே பாவாய் தமிழ்த்தாயே,
உன்னை நான் போற்றிடுவேன்; உறவைத் தெரிந்தவர்கள்
என்னையே போற்றலென்பார்; இதனுல் அதை விடுத்தேன்.

'பாடிப் பயனென்ன' என்ருேர் அருந்த லைப்பைத்
தேடிக்கொடுத்த திருவாளர் – சோடித்துக்
காலைக் கதிரின் கவினை, அதிற் தோய்ந்த
நீலக்கடலின் நிறத்தழகை - கோல ஒளிப்
பொங்கலிடைத் தங்கள் புது நீர்க் குடமணைத்த
தங்க உடலார் தளர் நடையை - அங்கு தவழ்
தென்றற் சுகத்தை, தேமாங்கினை நாடி
மன்றல் புரியும் மயிலினத்தை, – அன்றலர்ந்த
சோலைமலரைச், சுரும்பை, அவை சுமந்த
கோல எழிலின் குளுகுளுப்பை, – மாலையெனும்
மங்கை மருளை, மனைக்கு விளக்கேற்றும்
திங்கள் முகத்தார் திருவினையை, – அங்கு தவழ்,
பிள்ளைக்கனிகள் பேச்சுத் தமிழென்னும்
கள்ளை, குறுநடையை, கண்சிமிட்டை, – மெள்ள வந்து
கண்பொத்தி நிற்கும் காளை கரம் பட்டுப்
பண்பொத்தி நிற்கும் பாவையரை, - விண்தொத்தி
நீந்தும் நிலவை, நீலப் பசுஞ் சுனையை

மாந்தும் கவிஞர் மனத்தழகை, — ஏந்தித்
தொடுத்திடுக பாவென்று சொல்வார்கள் ஆயின்
கொடுத்திடுவார் வேறு தலைப்பன்றோ. - விடுத்திவற்றை
நெஞ்சத் தறி நெய்த நினைவாஞ் சிறு துகிலைக்
கொஞ்சம் விரிப்பேன் குணம் பார்ப்பீர்.

ஏடெடுத்து உங்கள் முன் ஏற்றமுடன் நின்றிடினும்
ஓடெடுத்தான் போலென் உள்ளம் தயங்கிறதே,
பீடெடுத்த இந்நகரப் பேரரங்கில் நின்றவர்கள்
நாடெடுத்த நாவலரும் நல்ல தமிழ்ப் பாவலரும்
என்றிங்கியம்பி எங்கோ ஒலிக்கின்றது,
நன்றுதான் இந்த நல்ல அவையோரே
சென்றுதான் பார்ப்போமே சிறுதூரம் சிந்தனையில்
பண்டைத் தமிழகத்துப் பாண்டியனார் கூடலிது
மண்டும் பெருமை மாத்தமிழ் ஆய் பேரவையில்
வேழமென விளங்கும் வெற்றிப் புலவரிடை
ஈழத்துப் பூதன் ஈதோ இலங்குகின்றான்.
கண்ணை எடுங்கள், கலைவளரும் யாழ்ப்பாண
மண்ணிற் பதிப்பீர்; மாவீரன் சங்கிலியன்
வீற்றிருந்தான், அவ்வவையில் வீரம் மணக்கிறது.
ஏற்றுத் தமிழ் வளர்ப்பார் எத்தனைபேர் ? எண்ணுங்கள்,
நேற்றிருந்தான் இன்றில்லை; நீண்ட தமிழுலகம்
போற்றும் நவாலிப் புகழ்ச் சோம சுந்தரனார்.
பண்ணைத் தமிழிற் பகரக் குழைத்தளிக்கும்
வெண்ணெய்க் கண்ணன் பா விளைத்த புகழறிவீர்.
சங்கத் தமிழின் சாற்றைக் கவி செய்ய
எங்கள் இளமுருகன் எம்மோடிருக்கின்றான்.
முல்லை மலர்ந்ததென முத்துக்கவி உதிர்க்க
வல்ல முருகையன் வாழுகிறான் எம்முடனே.
கூடிக்கிடக்கின்றார் கொற்றக் கவிமன்னர்
பாடிப் பயனென்ன பாலன் எழுந்திங்கு?

ஓடும் மனத்தை ஒருவாறு போய்ப் பிடித்து.
'வாடும் மனதே வருத்தம் மறந்திடுவாய்.
மழலை மொழிக்கும் மக்கள் மதிப்பளிப்பர்;
குழலையும் வெல்லுமெனக் குறள் வேந்தன் சொல்லி வைத்தான்'
என்ன மொழிந்து ஏக்கத்தைப் போக்குவித்து
இன்னல் பலபட்டு ஈரேழு இரா விழித்து
சின்னத் தமிழில் சில வரிகள் தான் கிறுக்கி
என்னைத் தெரிந்த ஏட்டுக்கனுப்பிவிட்டு
முன்னைத்தவமென்று மூச்சுவிடும் நேரமதில்

# மலாயா கபே

போன். 640

36, 38, பெரியகடை, யாழ்ப்பாணம்.

பலவித சிற்றுண்டி வகைகளும் பலகார வகைகளும்
சிறந்த தேநீர், காப்பி, பசும்பால், சுத்த சைவ போசனமும்,
சர்பத் மற்றும் குளிர்ந்த பானங்கள்
எந்நேரமும் கிடைக்கும்.

விசேஷ ஆடர்களும்
குறித்த நேரத்தில் தயார்பண்ணிக் கொடுக்கப்படும்.

எங்களிடம் பலவித சாய்ப்புச் சாமான்களும்
பெற்றுக்கொள்ளலாம்.

The Most up-to-date VEGETARIAN CAFE
*Run on very Hygienic Lines*
RICE AND CURRY WITH SPECIAL
Additional Dishes Served Daily.

*Now offers!*

A wonderful range of delicious varieties of
FRESH MILK, SHERBETS SWEETS
etc., etc.

ORDERS EXECUTED AT SHORT NOTICE.

Dealers in : TOILET GOODS, MILK FOOD, BISCUITS & CONFECTIONERIES.

Receip-ents of the First prize from the Jaffna Municipal Council for the years 1952 to 57.

# MALAYA CAFE

Prop: M. K. KATHIRAVELU

*36, 38, Grand Bazaar, Jaffna.*

சின்னதொரு கேள்வி சென்றென் அகமரிக்கும்.
பாடிப்புலவர் பாட்டை முடிக்குமுதல்
கோடி நிதியம் கொடுத்தார் தமிழரசர்.
வேர்த்த உடலோடு வேந்தன் அவை புக்கார்
பூத்த கொடிபோலப் பொலிந்தார்கள் அந்நாளில்.
பாரி அரசன் — பறம்பு மலைக்கிழவன் —
ஓரி — அனையர் ஓராயிரம் கண்டீர்.
முல்லைக்குத் தேரும், முட்டாள் அவனென்பீர்.
தொல்லை மயிலுக்குத்தூக்கித் தன் போர்வையையும்
வல்லே கொடுத்து வளர்த்தார்கள் வண்மையினை.
என்னும் வரலாற்றை ஏட்டில் படித்த மனம்
'என்ன பயன் பாடி? இன்று' என்றென்னைக் கேட்கிறது.
அன்னதொரு கேள்வி அவசியந்தான் அன்பர்களே.
பரிசளித்த பாரி பழைய கதை சொல்லி,
சிரசளித்த செல்வக் குமணன் தன் சீர் சொல்லி
'தரிசு நிலமேனும் தாரீரோ நீரென்று'
அரசு புரிவோரை அய்யோ நாம் கேட்கவில்லை
சிரசில் பிடித்துச் சிறைக்குள்ளே தள்ளா இப்.
பரிசளித்தால் போதும்; பாவளித்து நாம் மகிழ்வோம்.
குரிசில் என நாம் போற்றும் கொற்ற விமர்சகரே.




முனீஸ்வர கபே



சுத்தமான இனிய சைவஉணவு!

அன்பு நிறைந்த உபசரிப்பு!!

உங்கள் திருப்தி : எங்கள் மகிழ்ச்சி

உங்கள் அன்பான ஆதரவைத் தொடர்ந்து
கோருகின்றோம்

முனீஸ்வர கபே

[உரிமையாளர் :K. V. தம்பு]

வெலிங்டன் சந்தி யாழ்ப்பாணம்.

குரிசில் எமைவைத்துக் குத்தாதீர் ஆணிகளைப்
பரிசில் பிறவேண்டாம், படியாது விட்டுவிடும்.
பத்திரிகை மன்னவர்களே, பணமோ கணம் நினையோம்;
நித்திரை நீர்கொண்டு நேரம் கழியாது
புத்தம் புதிதாய் ஒரு பிரதி போதுமையா.

அடுத்த கருத்து, ஆக்கம் தழுவியது:
தொடுத்து முடித்திடுவேன் தூக்கம் கலைந்திடுக,
வாட்டும் வறுமைக்கு வயிற்றுப் பசிக்கெங்கள்
பாட்டுக் கலையுதவா, பண்டுதொட்டுக் கண்டதுதான்,
குலைக்காத நாய் போலக் கொடிது பசி என்றும்
நிலைத்த புகழில்லை; நீரறிவீர் எம் நெஞ்சை
அள்ளும் சிலம்பை ஆக்கியவன் மாப்புகழை
விள்ளும் பொழுது நயம் விஞ்சும் கவிவிடுத்து
துள்ளும் பசியை நுவல்வாரிங்காருண்டு ?
ஊதி, மருத்து மனை ஒழுங்காக ஓடுகின்ற
பூத உடல் வளர்க்கும் பொல்லாப் பொருள் வேண்டாம்.
நீதியாய் இங்கு நிலைத்த புகழ் வேண்டும்.
வட்டி வளரட்டும்; வாயில்கள் மூடட்டும்;
சட்டி அடுப்பில் சாம்பல் பறக்கட்டும்;
திட்டி மனையாள் திரியட்டும்; தென் தமிழ்ப்பா
கொட்டிப் புகழைக் கொள்வேனென் றேதில், கை
தட்டி மகிழ்வீர்; தமிழா சரி என்பீர்,
ஆனாலும், இங்கு அல்லும் பகலுமொரு
பேனாப்பிடித்தால் பெரும் புகழ் தான் கிட்டிடுமோ ?
இல்லை, ஆம் என்பீர், எதுவும் மொழியாது
தொல்லை ஆம் என்று தூக்கமும் போய்விடுவீர்,
நெஞ்சில் தமிழை நிறுத்திப், பொறுமையுடன்
கொஞ்சம் எழுத்துலகைக் கூர்ந்துதான் பார்ப்போமே.
கல்வியமைந்தவரைக் கண்டு களித்து அவர்
சொல்லும் கலையைச் சுவைக்கப் புகுந்தாலோ:
தீ வந்து தாக்கும உடல் தினவுக் கதை சொல்லும்,
பேய் வந்திளிக்கும். பெண் கற்பை உண்ட வெறி
நாய் வந்து சௌவும். நரி வந்து ஊளையிடும்.
தூய அவை அறியும் துப்பரவில் கற்பனையை.
கல்லாதவர்தான் கலையில் இயல்பமைந்த
வல்லார் எனச் சிலரை வநதடைந்தால், ஐயையோ.
கல்லால் எறிந்தவர்தான் கற்றவரைத் தாக்குகின்றார்
இல்லைத் தமிழென்று ஏழடுக்கு மாடி கட்ட
எல்லோரும் ஆங்கிலத்தை ஏற்ற ஒருநாளில்
தொல்லைபல தாங்கித் தூய தமிழ் காத்தளித்த
நல்ல தமிழ்ப் பண்டிதரை நையாண்டி பண்ணுகிறார்.
இன்ன தியாகிகளில் ஈடு இணையற்றவனை
கன்னித் தமிழ் காத்த காவலனை - நாவலனை
தென்னாடும் ஈழத்திருநாடும் கையெடுத்து
மன்னா எனப் பரவும் மாண்புடை சான்றோனை.
கல்வியிலே ஓர் கடலைக் கதையெழுதக் கேட்கின்றார்.

ஊகமெனும் வாகனத்தில் ஊர்ந்து நான் பேசவில்லை.
வேகச் சிலர் நெஞ்சம் விரித்துப் பொருத்தவில்லை.
இன்றைம எழுத்துலகில் எழுந்த சில மன்னவரின்
குன்றும் குணத்தைக் கூட்டாது காட்டி நின்றேன்
இந்த எழுத்துலகில் எனக்கென்ன வேலை என்று
சொந்தக் கவலை எண்ணேன்; சோம்பனல்ல: கோழையல்ல
நன்றிக் குணம் படைத்த நட்பாள, உன் முன்னோர்
சென்று வந்த பாதையினைச் சிறிது திரும்பிப் பார்.
சங்கப் புலவர் என்னும் சான்றோரை எண்ணிப்பார்.
எங்கும் நிறைந்த இயற்கையினைப் பாடியவர்;
மன்னவரைத் திட்டவில்லை மக்கள் நலம் பாடியவர்;
சொன்ன தமிழின் சுவையின் வரம்பமைத்த
பாவலர்தான் நண்பா பண்டைத் தமிழ்ப்பண்ணின்
காவலர்கள் அன்னோர்; கருதிப்பார் அன்னவரை
முரசணையில் போய்த் துயின்ற மூத்த புலவருக்கு
அரசன் விசிறி நின்ற அக்கதையை எண்ணிப்பார்.
பெண்ணொருத்தி கண்ணீர்க்குப் பெருங் காப்பியங் கண்ட
அண்ணல் இளங்கோவின் அருள் நெஞ்சை ஆழ்ந்துநினை
ஈரடியில் இன்ப இயல்பெல்லாம் பாடியவன்
ஓரடியும் ஆபாச ஓரம் மிதிக்கவில்லை.
இல்லா உலகங்கள் இயற்றிப் படைத்தவரும்
பொல்லாத்தனத்தைப் போக்கிடவே பா மொழிந்தார்.
வறுமை கொடுமையிலே வாடிய எம் பாவலர்கள்
சிறுமை மதி கொண்டு சில்லறைகள் பாடவில்லை.
மன்னவர் தம் ஈகை, மாறு மறம், செங்கோல்
கன்னியர் தம் கற்பு, காதல், இயற்கை, அருள்
இன்ன பொருள் அன்று ஏற்ற கரு. இன்று
தின்னும் உடல் தினவு, திட்டு, கவை அனைய,
என்ன இது என்றால் ஏ. ஏ. யதார்த்தமென்பார்.
அன்று யதார்த்தம் அகம் புறமாய் பூத்ததினால்
இன்றத் தமிழகத்தை எல்லோரும் பார்க்கின்றோம்.
என்றும் யதார்த்தம் எழுத்துலகை ஆளட்டும்.
ஒன்றெந்தன் தோழர்க்கு உரைக்க விழைகின்றேன்.
கண்ணகியின் கற்பைக் காட்டும் யதார்த்தமின்று
பெண் நலமாங் கற்பிழந்த பேய்களைப் போய்க் காட்டுவதேன்?
எண்ணிப்பார் நண்பர் இரண்டு நிலையினையும்,
உண்மையிலெம் கண்ணில் ஊத்தை இருக்கிறது.
யதார்த்தம் வளரட்டும்; யாருமதைச் சொல்லியுடற்
பதார்த்தத் திரிபுகளைப் பரக்க உரைக்காதீர்,

❁

அல்ல வழியில் செல்வார்க் கழுதிரங்கும்
நல்ல தமிழ் நாடே. நாமும் அவரல்லோம்.
ஏ. ஏ. இளைஞா எடு உந்தன் பேனாவை
தூய தமிழ் வழியில் தொடரட்டும் உன் படைப்பு.
போய் வருவேன் என் வணக்கம் பொழிந்து.

### நம் நாட்டுப்

# புத்தகங்களைப் படித்துவிட்டீர்களா?

### இல்லையேல்!

| | ரூ. ச. |
|---|---|
| மேற்கோளாயிரம் | 1-25 |
| மேடும் பள்ளமும் | 2-00 |
| தண்ணீரும் கண்ணீரும் | 2-00 |
| மத்தாப்பு | 1-00 |
| ஒரே இனம் | 2-00 |
| கதைப்பூங்கா | 1-50 |
| குழந்தை ஒரு தெய்வம் | 1-50 |
| கயமை மயக்கம் | 1-50 |
| சிலம்பொலி | 1-50 |
| இளங்கோவின் கனவு | 1-50 |
| தமிழன் எங்கே? | 1-25 |
| ஈழத்துச் சிதம்பரம் | 2-50 |
| திருமுறைக்காட்சி | 1-50 |
| கவிதைக்கன்னி | 1-00 |
| கவிதைச் செல்வம் | -75 |
| ஓவியக்கலை | 1-00 |
| ஈழத்தில் யான்கண்ட சொற்செல்வர்கள் | 1-25 |

**உடனே வாங்கிப் படியுங்கள்!**

விபரங்களுக்கு:

# பூபாலசிங்கம் புத்தகசாலை

27, பெரியகடை, யாழ்ப்பாணம்.

நமது வாழ்க்கைக்கு இன்றியமையாதது நீர். நீரைப்பற்றிய சில சுவையான செய்திகளைக் கூறுகின்றார் கொழும்பு றோயல் கல்லூரி ஆசிரியர் சர்மா.

# வாழ்வளிக்கும் தண்ணீர்.

அ. க. சர்மா

**நாம்** உயிர் வாழுவதற்குத் தேவையான பொருட்களுள் தண்ணீர் மிகவும் அவசியமானது. நீரின்றேல் உலகில் உயிரினம் இல்லை. நீரின் சிறப்பை உணர்ந்து தான் போலும ஆதி மனிதன் நீருக்குக் கடவுளாக வருணனை உருவகப்படுத்தி வழிபட்டான். வேதகாலத்திற்கு முன்பிருந்தே நீரின் அவசியம் நன்கு உணரப்பட்டிருந்தது. நீரின்றேல் நிலவுலகில், நாகரிகமுடன் வாழமுடியாது என்ற உண்மையை உணர்ந்துதான், பழங்கால மக்கள் ஆற்றங்கரைகளையடுத்து வாழ்ந்து சிறப்புற்றார்கள். பொய்யாமொழிப் புலவனும் நீரின்சிறப்பை, 'வானம்பொய்த்தால் உயிர்வாடும், வானின்றி ழியும், அமிழ்தம், துப்பார்க்குத்துப்பாயது,'' என்றெல்லாம் வியந்து பாடினார். நீருக்காகப் போர்முரசங்கொட்ட இன்றும் நாடுகள் தயாராக இருக்கின்றன. தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் பாயவிடாது கேரளம் அணைபோட்டால் சட்டசபை ஐக்கியநாடுகள் சபை வரை விவகாரம் போகின்ற அளவிற்குத் தண்ணீர் முக்கியத்துவம் பெறுகின்றதல்லவா. இலகுவாகவும், பெருமளவிலும் நீரைப் பெறுகின்றமையின்' அதன் அருமையை நாம் நன்கு உணரவில்லை. நீர் இல்லாவிட்டால் என்ன நிகழும் என்பதை எண்ணிப்பார்க்கவே அச்சமாக இருக்கின்றதல்லவா?

உயிரியல் அறிஞர்கள் உலகில் ஆதி உயிரின்தோற்றம் நீரின்மேல் நிகழ்ந்தது என நம்புகின்றனர். சூரியனிலிருந்து பிரிந்து வந்து அனற்பிழம்பாக இருந்த பூமி, காலப்போக்கில் குளிர்ந்தபொழுது நீர் தோன்றிற்று. சூரியனின் ஒளிக்கதிர்கள் நீரின்மீது மோதித் தெறிக்க இயற்கையின் எல்லையில்லா அதிசயங்களுள் தலைசிறந்த ஒன்றாக, உயிர் தோன்றிற்று இது கால வெள்ளத்தில், பல்வேறு மாற்றங்களுடன் பலுகிப் பெருகி, இன்று உலகில்நாம் உயிரின வர்க்கமாக உருவெடுத்து. உலகில் உயர்

தோற்றத்திற்கு காரணம் நீர் தான் என்பதை அறிந்துதானே நம் முன்னோர், உயிரையும் உலகையும் காக்கும் திருமாலை, பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமனுகக் கற்பனை செய்து சிறப்பித்தார்கள் அதனுல் பண்பினுற் சிறந்தார்கள்.

உலகிலே காணப்படும் பொருள்களெல்லாம், நிலம் நீர் காற்று, தீ, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களாலானவை என்ற கொள்கை, வேதகாலத்தில், கிழக்கே இந்தியாவிலும், மேற்கே, கிரேக்க நாட்டிலும், நிலவிவந்தது, இது "பஞ்ச பூதக்கொள்கை" என்று சிறப்புடன் அழைக்கப்பட்டது. "பஞ்ச பூதங்களும் முழங்க இறைவன் ஊழி நடம் புரிகின்ருன்'' என்ற கருத்து வேதகாலத்தில் நிலவிவந்தது. ''நீரும் ஒரு பூதப் பொருளே என்ற தவருன கொள்கை 19ம் நூற்ருண்டு வரை ஆத்ம விசாரணையில் ஈடுபட்ட தத்துவ ஞானிகளிடையேயும், பொருள் விசாரணையில் ஈடுபட்ட பொருள்நூலறிஞர்களிடையேயும் நிலவிவந்தது.


# K. ஆறுமுகம்பிள்ளை அன் ஸன்,

ஆரம்பம்: 1900

நகை இரத்தினக்கல்
விற்பனையாளர்.
64, கன்னுதிட்டி ரேட்
யாழ்ப்பாணம்.



புதிய டிசைன் சிறந்த தரம்
நுட்பமான வேலைப்பாடு
இவற்றுடன் கூடிய நகைகளுக்கு
நினைவில் வைத்திருங்கள்

"யப்பான்"

வடமாகாணத்தில் அதிக நம்பிக்கைக்குப் பாத்திரமான நன்கு நிர்வகிக்கப்படுகின்ற பழம்பெரும் ஸ்தாபனம்.

உங்கள் திருப்தி உத்தரவாதம்.

தந்தி: யப்பான்
தொலைபேசி: 518

K. A. கனகசபை
உரிமையாளர்.

நீர் ஒரு கூட்டுப் பொருளே. அதன் பகுதிமூலகங்கள், நீரகமும் (Hydrogen) தீயகமும் (Oxygen) ஆகும் என்ற சிறப்பான உண்மையை உலகிற் கெடுத்துரைத்தவர் கவெண்டிஷ் (Cavendish) என்னும் ஆங்கில அறிஞரேயாவர். அறுவு வளர்ச்சி எவ்வளவு மந்தமாக நடந்திருக்கிறது பார்த்தீர்களா? இன்று கல்லூரியில் விஞ்ஞானம் கற்கும் எந்த மாணவனும் "நீர் என்பது, எரியும் இயல்புள்ள நீரக வாயுவும் எரிதலுக்கு உதவிபுரியும் தீயக வாயுவும் இரசாயனச் சேர்க்கையின்மூலம் அவற்றின் தன்மை அறவேயிழந்து, இணைந்து திரவமான ஓர் இரசாயனக் கூட்டுப்பொருள்" என்று பளிச்சென்று கூறிவிடுவான்.

நாம் தண்ணீரைப் பல வழிகளில் பெறுகின்றோம். இயற்கையில் கிடைக்கும் நீர் மழை நீர். பூமியின் மேற்பரப்பிலுள்ள நீர் கதிரவனின் வெப்பத்தால் ஆவியாகி மேலெழுந்து, மீண்டும் குளிரும்போது மழையாகின்றது. இந்தமழை நீரில் தூசித்துணிக்கைகள் வாயுக்கள் கரைந்திருக்கும். எனவே மழைநீரை அப்படியே பருகுவது நல்லதல்ல. மழை மலைப்பிரதேசங்களிற் பெய்வதனால் ஆறுகள் தோன்றுகின்றன. உயர்ந்த இடங்களிலிருந்து தாழ்ந்த பிரதேசங்களுக்கு ஆற்றுநீர் பாய்ந்தோடும்பொழுது, மழைநீரின் அசுத்தங்களுடன், ஆற்றுப்போக்கிலே அடித்துச்செல்லப்படும் சேதன, அசேதனப் பொருட்கள் சில கரைந்தும், சில கரையாமலும் காணப்படும். இந்நீர் ஈற்றில் கடலைச் சென்றடைகின்றது. ஆற்று நீரை, அப்படியே அள்ளிப் பருகுவதும் ஆபத்தானது என்பது புரிகிறதல்லவா?

சேமிக்கப்பட்டு நிலையாக நிற்கும் நீர் குளம், வாவி, கிணற்றுநீராகும். இவற்றுள் கிணற்றுநீர் மிகவும் சுத்தமானது. மழைநீர் பூமியினுள் பல அடுக்குகளினூடும் வடிகட்டப்பட்டுச் செல்லுகின்றமையின், கரையாதிருக்கும் அசுத்தங்கள் நீக்கப்பட்டுவிடுகின்றன. "மண்ணின்" தன்மையைப் பொறுத்தே கிணற்றுநீர் "நல்ல நீராக" அல்லது "உப்பு நீராக" காணப்படுகின்றது. சுண்ணும்புத்தன்மையுள்ள நிலத்தில் காணப்படும் நீர், சுண்ணும்புச் சத்தையும், உலோகத்தன்மையுள்ள நிலத்திற் காணப்படுவது, உலோகச் சத்தையும் கொண்டிருக்கும்.

இவை நீருள் மறைந்திருந்தாலும் உடல் உறுதியாக வளருவதற்கு உதவுகின்றன. இவை இல்லாவிட்டால் உடல் பூரண வளர்ச்சியை எய்தாது.

கடல்நீரைச் சுவைக்கமுடியாத அளவிற்கு, அதில் "உப்புக்கள்" கரைந்திருக்கின்றன. சாதாரண சோடியவுப்பு (Sodium Salts), மக்னீசியவுப்பு (Magnesium Salts), பொற்றுசியவுப்பு (Potassium Salts) ஆகியவை கடல்நீரில் பெருமளவில் கரைந்திருக்கின்றன.

உலகின் மேற்பாகத்தில் முக்காற்பாகம் கடலால் மூடப்பட்டுள்ளது. வாழ்வையளிக்கும் குடிநீரைக் கடல்நீரிலிருந்து பெறமுடியாதா? என்ற பிரச்சினை உலகின் பல்வேறுநாட்டு விஞ்ஞானிகளாலும் ஆராயப்பட்டு வருகின்றது. இது குறித்து அமெரிக்கா பெரும் சிரத்தையுடன் கோடிக்கணக்கில் பணத்தைச் செலவு செய்து ஆராய்ச்சிகளை நடத்துகின்றது. இஸ்ரவேல் நாட்டு விஞ்ஞானிகள் கடல்நீரிலிருந்து குடிநீரைப் பெறுவதற்கான முறையொன்றினை வகுத்து உலகப் புகழ்பெற்று உயர்ந்துவிட்டார்கள். இம்முறை அபிவிருத்தி செய்யப்பட்டால் உலகில் குடிநீருக்குப் பஞ்சமே கிடையாது.


# கம்பனும் பாரதியும்

ஆசிரியர் :
சு. கணபதிப்பிள்ளை

G. C. E. தேர்வுக்குரிய
காட்சிப் படலம்
நிந்தனைப்படலம்
பாரதி பாடல்கள்
ஆகியவையும் அவற்றின்
கருத்துரை, விளக்கவுரை
விசேடவுரை
ஆகியவையும் கொண்டது.
மாணவர்களும் மற்றையோரும்
படிக்கவேண்டிய நூல்.
தனிப்பிரதி: 3-50

**வள்ளுவர் கலைமன்றம்**
**அல்வாய்.**


நாம் பெறுகின்ற நீரில் கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய விஷக்கிருமிகள் உறைந்து உயிருக்கு ஆபத்தை விளைக்கும் பயங்கர வியாதிகளைப் பரிசாக அளிக்கின்றன. வயிற்றுப் போக்கு, "நெருப்புக் காய்ச்சல்" எனப்படும் சுரவியாதி, "காலரா" எனப்படும் கொடியநோய் ஆகியன, அந்நுண்ணிய கிருமிகளின் விஷத்தன்மையால் உண்டாகின்றன. எனவே குடிநீர் "சுத்தமாக" இருப்பது மிகவும் அவசியம். குடிநீரில் இருந்து இவ்விஷக் கிருமிகளை அழிக்க இரு மார்க்கங்களைக் கையாளலாம். நீரைக் கொதிக்க

வைத்து, குளிரவிட்டு உபயோகிக்கும் பௌதிகமுறை ஒன்று. இரசாயனப்பொருட்களை நீருள் விட்டுக் கிருமிகளையழிப்பது மற்றொன்று. குடிநீரின் சிறிய அளவு உபயோகத்திற்குப் பௌதிகமுறை சாலச்சிறந்தது. யாவராலும் கையாளப்படத் தகுந்தது. பெரிய அளவில் ஒரு நகரின் குடிமக்களுக்கு நீர் வழங்குவதாயின் இரண்டாவது முறையே வசதியானது; சிறந்தது, நீருள் "குளோரின்" என்ற நச்சு வாயுவைச் சிறிது நேரம் செலுத்தினால் சில விநாடிகளில், எல்லா விஷக்கிருமிகளும் இறந்தொழிகின்றன. இம்முறையே கொழும்பு போன்ற நகரங்களில் கையாளப்படுகின்றது.

வாழ்வளிக்கும் நீர்வகையாக அமைய இவ்வளவு கைங்கர்யங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். நீர் முக்கியமானது என்றால் அதைவிட முக்கியமானது அதைச் சுத்தமாக உட்கொள்ளுதலேயாம். நீர் எவ்வளவு சுத்தமாயிருந்தாலும் சில இடங்களிலிருந்து பெறும்பொழுது துவர்ப்பாயும் சில இடங்களில் உவர்ப்பாயும் வேறு சில இடங்களில் சுவையுள்ளதாகவும் இருக்கின்றதே என்று நீங்கள் கூறுவது காதில் விழுகின்றது. அதற்கான காரணங்களை அடுத்த கட்டுரையில் ஆராய்வோம்.



## தங்க நகை மாளிகை

உரும்பராய்.

உள்ளம் மகிழும் உயர்ந்த தங்கப்பவுண்


நகைகளுக்கு

உத்தரவாதத்துடன் கூடிய



நம்பிக்கை நாணயம்

நயமிக்க ஸ்தாபனம்



ஒருமுறை பரீட்சித்தால் உண்மை விளங்கும்.

உரிமையாளர்:-

**K. S. கந்தையாப் பத்தர்**

நகைவியாபாரமும் தொழிற்சாலையும்.

உரும்பராய் தெற்கு, உரும்பராய்.

சந்தா நேயர்களுக்கு

# இலவச தென் இந்தியப் பிரயாணம்

1962ம் ஆண்டு புரட்டாதிமாதம் 30ந் திகதி வரை ''கலைச்செல்வி" யின் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளும் அன்பர்களுள் அதிர்ஷ்ட சாலியான ஒருவருக்குத் தென் இந்தியா செல்லும் வாய்ப்பு உண்டு

கலைச்செல்வி"யின் ஆண்டுச்சந்தாவாகிய நான்கு ரூபாவினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டை அன்பர்கள் கவனமாக வைத்திருக்கவேண்டும். ஐப்பசி மாதம் முதலாந் திகதி, சந்தா நேயர்களின் பெயர்கள் குலுக்கிப் போடப்பட்டு, அதிர்ஷ்டசாலி பொறுக்கி எடுக்கப் படுவார்

நேயர்கள் முன்னிலையில் இத்தேர்தல் நடைபெறும். தேர்ந்தெடுக்கப் படுபவரை எமது செலவில் தென் இந்தியாவிற்கு அழைத்துச் சென்று சரித்திர, சமய சம்பந்தமான இடங்களைக் காட்டுவதுடன், சிறந்த எழுத்தாளர்களையும் சினிமா நடிகர்களையும் அறிமுகம் செய்தும் வைப்போம்.

மறந்துவிடாதீர்கள். நீங்கள் செலுத்த வேண்டிய பணம் ஆக நான்கே நான்கு ரூபா தான். இந்தப்பணத்தை அனுப்பினல், 12 மாதங்களுக்குத் தொடர்ந்து ''கலைச்செல்வி' யைப் படித்துமகிழ்வதுடன் தென் இந்திய இயற்கை அழகுகளையும் பார்த்து மகிழலாம்,

இன்றே உங்கள் சந்தாப் பணமாகிய நான்கு ரூபாவையும் காசுக் கட்டளை அல்லது அஞ்சற்கட்டளையில்

காசு பெறுபவர் : நிர்வாகி, கலைச்செல்வி
காசு பெறுமிடம் : செட்டிகுளம்

என்று தெளிவாக எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்
அனுப்ப வேண்டிய முகவரி:-

**கலைச்செல்வி**
பாலன் வெளியீட்டு நிலையம்,
செட்டிகுளம், இலங்கை.

# என்னைக் கவர்ந்த என் கவிதை

டுப்படியில் வேலையாக இருந்த என்மனைவியைக் கூப்பிட்டேன். ‘ஏன இப்போ என்ன அவசரம்? அடுப்பில் சோறு பொங்குகிறது. சொல்வதைச் சீக்கிரமாகச் சொல்லுங்கள்’ என்று திருவாய் மலர்ந்தபடியே அருகில்வந்து நின்றுளவள். கையிலோ அகப்பை! எப்படிக் கேட்பது? பயந்துபோய்க் கேட்காமல் விட்டால், இலக்கிய சர்ச்சை என்றில்லாமல் — நமக்கு நாமே முதுகைச் சொறிந்துகொள்ள, ‘கலைச் செல்வி’யில் கிடைத்த இந்த அருமையான வாய்ப்பினை இழந்துவிடுவதா?என்று நினைத்த பொழுது, அந்தஅகப்பை ஒன்றும் பெரிய அபாயமானதாகப்படவில்லை.

## “நீலாவணன்”

‘ஏனப்பா...... நம்முடைய குழந்தைகளுள் உன்னை மிகமிகக் கவர்ந்த குழந்தை எது? வேந்தனு? அரசியா? அல்லது சின்னப்பயல் விநோதனு? யார் உன்னைக் கவர்ந்த குழந்தை’ என்று கேட்டேன்.


‘இதென்ன விளக்கெண்ணெய்க் கேள்வி! தாயைக் கவராத குழந்தை எங்காவது பிறந்திருக்கிறதா என்ன? நான் ஒருதாய்; என் குழந்தைகள் எல்லாருமே என்னைக் கவர்ந்தவர்கள்தாம். இதைக் கேட்கத்தானு ஏதோ தலைபோகிற அலுவல்போலக் கத்தினீர்கள்?’ என்று சிணுங்கிக் கொண்டு அடுப்படிப்பக்கம் போகத் திரும்பிய அவளிடம் கலைச்செல்வி ஆசிரியர் எழுதியிருந்த கடிதத்தை நீட்டினேன்

கடிதத்தைப் படித்துவிட்டு என்னைக் கவர்ந்த என்கவிதையைப் பற்றிக் கேட்டால், நீங்கள் என்னைக் கவர்ந்த என்குழந்தையைக் கேட்கிறீர்களா? நல்ல வேடிக்கைதான் என்று சிரித்தாள் அவள்.

‘ஆமாம்; அதற்கு நீ கூறிய பதிலையே நானும்எழுதி அனுப்பட்டுமா? ‘அது உங்கள் வேலை···!’ அவள் போய்விட்டாள். மீண்டும் பத்திரிகை நறுக்குகளைப் புரட்ட ஆரம்பித்தேன். அங்கே ஒவ்வொரு பக்கத்திலும் என் கவிதைக் குழந்தைகள்! என்னைப் பார்த்துச் சிரிக்கின்றன. நான் தாய்; என்மனைவியைப் போல.

கருவுற்று, நெடுநாட்கள் கவலையுற்று, காத்திருந்து பிரசவித்து, உடல்பிடித்து - குளிப்பாட்டி - அழகு செய்து, பட்டிலே சட்டையிட்டு-பொட்டிட்டுப் பார்ப்பவர்தம் நெஞ்சைப் பறிக்கட்டுமென்று, இரவல் பத்திரிகைத் தொட்டில்களில்போட்டு அழகு பார்க்கும்-கவிதையைப் பெற்றெடுக்கும் தாய்தான் நான்.

ஒன்று நொண்டியாக, மற்றொன்று குருடாக-ஊமையாக, இன்னுமொன்று குச்சியாக-கோரமாக, பிறிதொன்று உடையின்றி புளுதிபடிந்த உடம்போடு. மூக்கில் சழிவழிய நாக்கைக் கடவாயினூடு செலுத்தி, அதை நக்கியபடி பச்சையாக. புத்தபிரானின் நீண்ட மூக்கும், வட்டமுகமும் தாமரை விழிகளும் சேர்ந்து, சாந்தம் ததும்பி அருள்பொழியும் பாலமுருகனைப்போல அழகாக இருக்கலாம். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தத்துவம். ஆயினும் அவை என்குழந்தைகள். காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு.



புதுமையான உவமைகளைச் சிறப்பாகக் கையாள்பவர் கவிஞர் நீலவாணன். பெரியநீலாவணை அரசினர் பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிகின்றார். நாம் தொடங்கும் இப் புதிய கட்டுரைத் தொடரில் தனக்குப் பிடித்த தன் கவிதையைப்பற்றிச் சுவையுடன் கூறுகின்றார்.

ஒருதாயைப் பொறுத்தவரையில்மேற்படி விளக்கம் சரியாக இருக்கலாம். இலக்கியத்தைப் பொறுத்தவரையில் பெற்றோரெல்லாம் பிள்ளைகளல்லர்' என்ற கூற்றே பொருத்தமானது என்பது என் அபிப்பிராயமாகும். தன்னுடைய சிருஷ்டிகளைத் தானே தரம் காணக்கூடிய திராணி தன்னம்பிக்கை ஓர் இலக்கியகர்த்தாவுக்கு இருக்கவேண்டிய முதுகெலும்பு. என்னைக் கவர்ந்த என்கவிதையைக் குறிப்பிடும்பொழுது, ஏனைய என் கவிதைகள் கிளப்பக்கூடிய பிரச்சினைகளையோ...... அவற்றின் தத்துவத்தையோ நான் ஒப்புக்கொள்ளவில்லை என்று கருத்தாகாது. என்றாலும், இலக்கியத்தில் தாய்மையின் முதுகுதடவலுக்கு இடமில்லை.

.........' என்ற தலைப்பில் தீபாவளி மலருக்கு உங்கள் கவிதை ஒன்றையும் விரும்புகிறோம். கவிதையை 24 வரிகளுக்கு மேற்படாமல் எழுதி 20-ந் திகதிக்குள் அனுப்பி வைக்கக் கோருகிறோம்.'

ஈழத்து வார இதழ் ஒன்றின் ஆசிரியர் எழுதிய கடிதம் இது. 'இம்' என்னும் முன்னே இருநூறும் நானூறும் 'அம்' என்றால் ஆயிரமும்பாடிக் கிழிக்கக்கூடிய அசுர சாதனை ஒன்றும் எனக்குக் கிடையாது. இந்த நிலையில் மிகக் குறுகிய காலத்துள் கவிதை கேட்டெழுதிய ஆசிரியரை உள்ளூரச் சபித்தாலும் படியாதார் கூடப் பார்த்துமகிழும் தீபாவளி மலரில் இடம் தந்துவிட்டாரே, (பணம் தராவிட்டாலும்) நாம் என்ன புகழை விரும்பாத புளுகிணிப் புலவனா?... அதனால் பிறந்த நன்றி உணர்ச்சியும் இல்லாமல் இல்லை.

நாளை எப்படியும் கவிதை அனுப்பியாகவேண்டும். கடைசி நாள்

நானே ஒருவரிகூட இன்னும் எழுதவில்லை. தொடர்ந்து நான்குநாட்கள் தோல்விதான். அன்று பின்னேரம் நண்பர் ஒருவருடன் கடற்கரைக்குப் போயிருந்தேன்.

சின்னஞ்சிறிய நீரோடை ஒன்று கடலில் கலக்கும் கழிமுகம்; அதன் பசுமையான இருகரையிலும், நன்ருகச் செழித்துவளர்ந்த இளந்தெங்குகள். கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்த மணல்பரப்பு; ஆங்காங்கே புருக்கூட்டங்களின் குறுகுறுப்பு; கரையோரத்தில் வரிசையாக மீன்பிடித் தோணிகள். தென்னை மரங்களுக்கு முன்னல் கடலோரத்தில் ஒற்றைப் பனைமரமொன்று; தவநிலையை ஞாபகப்படுத்தும் பாங்கில்! இளம் பனைதான்; 'நல்ல வாழிப்பு; பெரிய நீலாவணைக் கடற்கரையின் மிகச் சாதாரணமான தினசரிக் காட்சிகள்தாம் இவை.

தனிமையும் இருளும் ஒன்றிக் கலந்த மெல்லிய அந்திப்போதின் மயக்கம்; அந்த நேரத்தில், கடல் காற்றின் நேரடித் தாக்குதலுக்குத் தன் உடலை ஈடுகொடுத்து நிற்கும் அந்த இளம்பனை யாருடைய வரவுக்காக ஏங்கித் தவம் கிடக்கிறது? காலை மலருமுன் படகில் ஏறி மீன் பிடிப்பதற்காக, கடலில் வெகுதூரம் சென்றுவிட்ட அவளுடைய ஆசைக் கணவன் இன்னும் திரும்பிவரவில்லையா? இத்தனை தோணிகளும் திரும்பிவிட்டனவே; இவற்றுள் அவள் எதிர்பார்த்துக் கிடக்கும் அந்தத் தோணிமட்டும் திரும்பவில்லையா?

அந்தப் பனைமரத்தைப் பார்க்கும்பொழுதெல்லாம் என் நெஞ்சில் பிறக்கும் எண்ணங்கள் இவை.

'டட்....டட்ட்ட்...டட்'

'இது என்னபறவை? இப்படிக் கத்துகிறதே!' நண்பர் கேட்டார்.

'நானும் பலரிடம் கேட்டுப்பார்துவிட்டேன். யாருக்குமே இதன் பெயர் தெரியவில்லை. நிலவு காலங்களில் இது பாடும் சோக இசை மிக உருக்கமானது. நானுகப் பார்த்து இதற்கு ஒரு பெயர் வைத்திருக்கிறேன்'

'அது என்ன பெயர்'?

'அம்மிக்குருவி' அதன் ஓசையைக் கேட்டீர்களா? அம்மியில் ஏதாவது கடினமான பொருளை வைத்துத் தட்டிவிட்டு, குளவியை அதன் பாட்டில் விட்டுவிட்டால் ஏற்படுமே ஓசை, அதைப்போல இல்லையா அது?

என் பதிலைக் கேட்டுச் சிரித்த நண்பர், பொருத்தமான பெயர்தான்; ஆனாலும் வேறு ஏதாவது பெயர் இந்தக குருவிக்கு இருக்காமல் போகாது என்ருர். இருந்துவிட்டுப் போகட்டுமே! யாருக்கும் தெரியாத அந்தப் பெயரையிட்டு நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?

நன்ருக இருட்டிக் கொண்டு வந்தது, வீட்டுக்குத் திரும்பும் வழியில், பாதையோரமாக நிற்கும் அந்த வேம்பு மரத்தில் தென்றல் காற்றின் சம்போகம் ஏற்படுத்திய சலசலப்பு. நண்பருக்கு பேயை ஞாபகப்படுத்தியிருக்க வேண்டும், எனக்கோ நாளை அனுப்ப வேண்டிய கவிதையைப்பற்றிய எண்ணம்-தவிப்பு.

என்ன திடீரென்று மௌனியாகிவிட்டீர்கள்? என்கிருர் நண்பர் எனக்கு கவிதையின் முதலடி பிறந்து கொண்டிருக்கிறது. - 'மன்

ளிடை இரவுக் கன்னியின் ஆட்சி'......

ஓகோ! கவிதை வந்துவிட்டதா? நல்லது போய் எழுதுங்கள் நான் வருகிறேன். விடை பெறுகிறார் நண்பர்.

வீட்டுக்குப் போனதும் முதலடியைத் தொடர்ந்து கவிதை முழுவதையும் எழுதி முடித்தேன் வாய்; விட்டுப் பலமுறைகள் படித்துப் பார்த்தேன் மனைவியைக் கூப்பிட்டு வாசித்துக் காட்டினேன். வழக்கமாக ஏதாவது 'நொட்டை' சொல்லும் அவளே 'நன்றாக இருக்கிறது' என்று முகத்துக்கு நேரேயே சொன்னாள். எனக்கும் திருப்திதான். வாடுகிறாள் என்ற பெயரில் இருக்கவேண்டிய இக்கவிதையை ஆசிரியரின் தலைப்புக்குள் அடைத்து அனுப்பிவைத்தேன்.

மஸ்ளிடை இரவுக் கன்னியின் ஆட்சி இன்னும் தேயவில்லை — இளம்
தெல்லையின் ஓலை பண்ணிய இன்பப் பாட்டுகள் ஓயவில்லை
என்கடை வாயில் உன்னிதழ் தோய்ந்த ஈரம் காயவில்லை — எழில்
மின்னிடும் என்றன் மென்முலை தானும் பின்னே சாயவில்லை!

குறுமணல் மீது கொண்டல் தவழ்ந்த சுவடும் மாறவில்லை — இங்கு
பறவைகள் வந்து பவளக் காலால் கோலம் கீறவில்லை!
இரவில் அல்மிக் குருவிகள் இன்னும் இல்லம் சேரவில்லை — என்னை
இடை வெளியற்றே இறுக அணைத்த இதமும் தூரவில்லை


பருவப் பெண்ணும் இரவுக்கன்னி தவறிப் பெற்றபயல் - இளம்
பரிதிக் தஞ்சைக் கனகத் தெருவின் முடிவில் போட, அவன்
உருவப் பொலிவின் உதயத் தொளிமுன் உறவை வெட்டுகிறாய்-பொல்லா
உதிரக் கடலின் நடுவில் படகில் நடையைக் கட்டுகிறாய்!

'விண்ணின் தாரை எண்ணிப்பொழுதை வீணாக்கிடவல்ல-அணு
விஞ்ஞானிகள் போல் மண்மேல் உயிர்கள் நீறாக்கிடவல்ல!
உண்ணீர் என்றே மீன்கொடு வந்திவ் வுண்ணா உலகத்தின்-பசி
ஓட்டப் போகின்றே'னென் றேசொன் னாய்என் உயிரத்தான்.

வேம்புக்குமரி தென்றற் காற்றின் வெறியைச் சாடுகிறாள் - அந்த
விம்புக் காரன் விரகப் பேயோ டவனைக் கூடுகிறான்!
தேம்பிக் கொண்டே ஆடையை அள்ளி மார்பை மூடுகிறாள்-உன்னைத்
தேடித் தேடி ஆழிக்கரையில் ஒருபெண் வாடுகிறாள்!

சின்னஞ்சிறிய கவிதைதான்; இதன் புதிய உருவம், சந்தநாதம் - குதித்து ஓடும் நடை அழகு, நறுக்கென்று தறித்தாற்போல் பொருத்தமாக விழுந்துள்ள இசைதோய்ந்த சொல்லடுக்கு, உருவகங்கள்-உவமை வாழ்வுப் பிரச்சினையை மிகமென்மையாகத் தொட்டுச்செல்லும் கலைப் பண்பு, இவையெல்லாவற்றிற்கும் மேலாக நான் வாழும் நெய்தல்நிலச் சூழ்நிலையை-என் கிராமத்தின் வாசனையை, அகத்துறை இலக்கணமரபு பிறழாவாறு இக்கவிதையில் காண்கிறேன். இக்கவிதையின் சிறப்பை இதற்குமேல் விபரிக்கவேண்டிய அவசியம் இல்லை என்றே நினைக்கிறேன்.

1961-ம் ஆண்டு 'புதினம்' தீபாவளிக் கவியரங்கில் போகிறேன் என்றே சொன்னாய்' என்ற தலைப்பில் இக்கவிதை பிரசுரமானது. இக்கவிதையில் என்னுடைய தனித்துவ முத்திரை மிக அழுத்தம் பெற்றிருப்பதாகவே நான் உணர்கிறேன்: நண்பர்களும் சொல்கிறார்கள். எனினும் இது தற்காலிகமானதே. 'ஏன்'? என்றால் என்னைக் கவர்ந்த என்கவிதையை நான் இன்னும் எழுதவில்லை.




காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி விலங்கியல் விரிவுரையாளர் ச. இராமலிங்கம் M. A. அவர்கள் "கலைச்செல்வி"க்கென எழுதிய விசேடகட்டுரை இது. தேனைப் பற்றிய உண்மைகளையும் அதற்கிருக்கும் அபார சக்திகளையும் தேன் தமிழில் கூறுகின்றார்.

---

அன்று மாலை கல்லூரி முடிந்ததும் வீடுவந்து, மாலைக் கடன்களை முடித்துவிட்டு, சிறிது ஓய்வெடுத்துக்கொள்ளலாம் என்று மாடிக்குச்சென்று அமர்ந்தேன். அயர்ந்தபடியே நான் கல்லூரி மாணவனாக இருந்த அந்தக்காலத்தை என் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்தி, தேனின் இன்சுவைபோல் அவைகளை எண்ணி எண்ணி ரசித்துக்கொண்டிருந்தேன். அந்நேரத்தில் திடீரென்று ஏதோ அரவம் கேட்கவே திரும்பியபோது என் தோழன் மதிவாணன் கேரள நாட்டுப் பிரயாணத்தை முடித்துவிட்டு என்னிடம் அவனுடைய சுவையான அனுபவங்களையும், கண்ட எழில்மிகு காட்சிகளையும் சொல்லி என்னை வியப்புறச் செய்யவேண்டும் என்று வந்திருந்தான். வந்திருந்த மதிவாணனை அமரச் சொல்லிவிட்டு அவன் அனுபவங்களைப்பற்றிக் கேட்டேன்.

அவன் கண்ட எழில் காட்சியையெல்லாம் சுவைபடக் கூறிக்கொண்டே வந்தவன் திடீரென்று நிறுத்திவிட்டு "அண்ணா! ஓர் அதிசயம் தெரியுமா!" என்றான். "என்ன?" என்று கேட்டேன். "நான்

ஒருநாள் திருவனந்தபுரத்திற்கு போகும் வழியில் உள்ள சில மலைவாசிகளுடன் காலம் கழித்தேன்! அவர்கள் என்னிடம் காட்டிய அன்பும் நடைமுறையில் காட்டிய பண்பும் என்னை ஈர்த்தன. அவர்கள் எனக்கு அளித்த உணவைப்பற்றி சொன்னால் நீ விந்தையாக கேட்பாய். உனக்கு விந்தையோ இல்லையோ! எனக்கு மட்டும் ஒன்று விந்தையாக இருந்தது! அவர்கள் உடலில் காணப்படும் வனப்பும் உரமும் நம்முடைய உடலில் ஏனோ இல்லை!" என்றான்.

"அப்படியா! அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை தம்பி. அவர்கள் நம்மைப்போல் செயற்கைக்கு அடிமையாக வில்லை! இயற்கையோடு இயைந்து வாழ்கிறார்கள் அல்லவா! அதோடு அவர்கள் உணவு தான அந்த கட்டுடலுக்கும், வனப்புக்கும் நோயற்ற நிலைக்கும் காரணம்!" என்றேன்.

"அப்படி என்ன அண்ணா அதிசய உணவு சாப்பிடுகிறார்கள்! எனக்கும் தான் தந்தார்களே. பகல் உணவை மரக்கிழங்கையும் தேனையும் சேர்த்துத்தந்தார்கள் - ஆனால் அந்த தயாரிப்பு கேட்டாலே மிகவும் புதுமையாகவே இருக்கும்! நம்மைப்போல் அவர்களுக்கு எந்தப் பாண்டமும் இல்லை உணவு தயாரிக்க! ஒரு தடிப்பான மூங்கில் துண்டை இரண்டாக வெட்டி அதன் உள்ளிருக்கும் பொருளை எல்லாம் எடுத்துவிட்டு இந்த மரக்கிழங்கையும் மலைத் தேனையும் நன்றாக பிசைந்து அந்த மூங்கினுள் வைத்துவிட்டு மறுபடியும் பழையபடியே முழு மூங்கில் போல் செய்து நன்றாகக்கட்டி அதன் மேல் களிமண் பூசி நன்றாக மெழுகி தீயிலிட்டு சுடுகிறார்கள்! குறிப்பிட்ட நேரம் சுட்டபிறகு அதை எடுத்து மறுபடியும் உடைத்து அதன் உள்ளிருக்கும் அந்தத் தேனில் பிசைந்த மரக்கிழங்கை எடுத்து தான் புசிக்கிறார்கள்! எனக்கும் தந்தார்கள்! என்ன ருசி தெரியுமா! அந்தச்சுவையை நான் இதுவரை எவ்வளவோ வகை வகையான இனிப்புப் பண்டங்கள் சாப்பிட்டிருக்கிறேன், எதிலுமே கண்டதில்லை! என்றான் "சுவை மாத்திரம் அல்ல தம்பி - தேன் இனிப்புக்காக சேர்க்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறாய் - இல்லை, தேன் ஒரு சிறந்த உணவு" என்றேன்.

"என்ன! தேன் சிறந்த உணவா? ஆச்சரியமாக இருக்கிறது!" என்றான்.

"ஆச்சரியமில்லை! இது பழங்காலத்திலிருந்து எல்லோருக்கும் தெரிந்த உண்மை! ஆகவேதான் மலை வாசிகள் அதிகமாக தேனும் திணைமாவும் சாப்பிட்டதாக நாம் படித்திருக்கிறோம் ஏன்! கந்தப்பெருமானுக்கு வள்ளி அம்மையார் தந்ததுகூட அந்தத் தேனும் திணைமாவும் தானே!

நாகரிகத்தின் பிறப்பிடமாய் விளங்கிய கிரேக்கநாட்டிலே அன்று எழில் மாதர்கள் தங்கள் மேனியை தங்கஅவிர் மேனியாக்க இந்தத் தேனைத் தான் உபயோகப்படுத்தியதாக தெரிகிறது. இப்போகிரீடிஸ் என்பவர் இந்தத்தேனை, கட்டி, வெட்டுப்புண் போன்றவைகளை குணப்படுத்த உபயோகிக்குமாறு சொல்லி இருப்பதாக தெரிய வருகிறது அந்த நாளிலேயே.

நம் நாட்டிலுள்ளவர்போல் அன்றி இளையவயதிலேயே மரணத்தை அணைத்துக்கொள்ளாமல் 109 ஆண்டுகள் நோயற்று வாழ்ந்து மறைந்தவர் கிரேக்கப் பெரியார் டெமாகிரிடிஸ் என்பார்; அவர் அவ்வளவு நாட்கள் உயிருடன் வாழ்ந்ததற்குக்கூட காரணம் அவர் எப்போதும் சரியான தேவையான உணவையே சாப்பிடுவாராம்! அப்படி அவர் சாப்பிட்ட அந்த உணவில் அதிகமாக இருந்தது தேன் தான்!

இயற்கையிலிருந்து பல பொருட்களை (Nectar) எடுத்து தேனாக மாற்றித்தயாரிக்கும் திறமையும், தகுதியும் உடையது தேனீயேதான்! அந்தத் தேன் சாதாரணமாக, மருந்தாகவும் அதிகமாக உபயோகப் படுத்தப் படுகிறது! காரணம் அதில் அதிகமான தாதுப்பொருள்களும், வைட்டமின்களும் ஹார்மோன்களும் இருக்கின்றன தேன் சாதாரணமாக உடலுக்கு ஒருவித சக்தியையும் அளிப்பதோடல்லாமல் பலஹீனத்தையும ஒழிக்கக்கூடிய தன்மையும் உடையது.

தேன் தேன்கூட்டினில் தேனீக்களால் தயாரிக்கப்படும் போது பல தாதுப்பொருள்கள் சேர்க்கப் படுகின்றன. அப்படி சேர்ககப்படுகின்ற பித்தளை, மாங்கனீஸ், கால்சியம், பொட்டாசியம், இரும்பு, சோடியம, பாஸ்பரஸ் போன்றவைகள் சிறந்த உணவுப் பொருள்களாகின்றன இந்தத் தேனில்தான் வைட்டமின் C. E. B. ஆகிய மூன்றும் இருக்கின்றன. அதோடன்றி நாம் சாப்பிடுகின்ற பாலைவிட இது ஆறுமடங்கு சிறந்த உணவாகும்.

தேன் உணவாக மாத்திரம் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. அது உடலை பலவித விஷக்கிருமிகளிடமிருந்து காத்துக்கொள்ளக் கூட உபயோகப் படுத்தப் படுகிறது! சாதாரணமாக பாக்டீரியாக்கள் தேன் இருக்கும் இடத்தில் வாழா. டைபாயிட் விஷ ஜுரத்தை உண்டுபண்ணும் கிருமிகளும் 48 மணி நேரம் தேனில் வைத்திருந்தால் இறந்துவிடுமாம். அதேபோன்று நிமோனியா விஷக்கிருமிகள் 4 நாட்களுக்கு மேல் வாழா. பேதியை உண்டு பண்ணும் பாக்டீரியாக்களோ 10 மணி நேரம் கூட உயிருடன் இருப்பதில்லை.

இன்றைய நாளில், தேனின் அருமையும், பெருமையும் கண்ட பல மருத்துவர்கள் தேன் இப்போது இருதய நோய்களுக்கு அதிகமாக உபயோகப் படுத்துவதாகக் கூறுகின்றனர்! ஏனெனில் இந்தத் தேன் வலிவு இழந்த இருதயத் துடிப்பை ஊக்குவித்து மனிதனை அதிக நாட்கள் வாழச் செய்கிறது!

இன்றைய தினம் தேனின் சிறப்பு இந்த அளவோடு நின்று விடாமல், தேன் இரத்த மின்மையும் ஆஸ்த்துமாவும் குணப்படுத்த உபயோகப்படுகிறது. இன்று ரீடிங் என்ற ஊரிலுள்ள மருத்துவச்சாலையில் வெட்டுப் புண் காயங்களைக் குணப்படுத்தவும் இந்த தேனை உபயோகப்படுத்துவதாக தெரிய வருகிறது.

ஆகவேதான் நீ பார்த்த அந்த மலைவாசிகள் கட்டுடலுடனும், வனப்புடனும் காணப்படுகிறார்கள். தேன் குழந்தைப் பருவம் முதல் வயோதிகப் பருவம்வரை அருந்தக்கூடிய ஒரு சிறந்த உணவு மாத்திரமல்ல -அரு மருந்துகூட,' என்றேன்.

"அவ்வளவு சிறந்ததா தேன்?... அப்படியென்றால் தேன் ஒரு அமிர்தம் தான" என்றான் தம்பி மதிவாணன்.

அந்த நேரத்தில் என் மனைவி "என்ன அமிர்தம் என்று என்னைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறீர்கள்" என்று கேட்டுக்கொண்டே வந்தாள் அன்னநடை பயின்றபடி.

உடனே தம்பி திடுக்கிட்டான். நாங்கள் உன்னைப்பற்றிப் பேசவில்லை அமிர்தம்! தேனின் அருமை பெருமைகளைப்பற்றிச் சொன்னேன். அதன் உயர்ந்த சக்தியைக் கண்டு "தேன் ஓர் அமிர்தம் என்றான் தம்பி" என்றேன.

"அதனால்தான் நீங்கள்கூட தேனைத் தினம்........" என்று கண்களில் ஜாடை காட்டியவா

றே சொல்ல, "என்ன அண்ணு எனக்கும் சொல்லுங்களேன். என்ருன் மதிவாணன்.

"இப்போது அவசரமில்லை உனக்கும் திருமணமாகட்டும் அமிர்தமே......" என்றவுடன் வெட்கப்பட்டுக்கொண்டு மதிவாணன் எழுந்து போய் விட்டான்.

அவனுக்குப் புரிந்ததோ இல்லையோ உங்களுக்குப் புரிந்திருக்கும் என நினைக்கிறேன். புரியவில்லையா. தேன் ஆண்மைச் சத்திக்கும் ஒருதுணையாக நிற்கிறது. அதோடு மாத்திரமன்றி அதுவே இன்று நம் நாட்டில் வெகு விரைவாக பரவி வரும் கருத்தடைக்கும் சில நாடுகளில் அன்றும் இன்றும், உபயோகப்படுத்துவதாகத் தெரிகிறது.

மது அருந்த விரும்புவோரின் வெறியை தணிக்கவும் இந்தத் தேன் பெரிதும் பயன் படுவதாக விஞ்ஞானிகள் கண்டறிந்திருக்கின்றனர்.


**யாழ்ப்பாணத்தில்**

உங்களுக்குத் தேவையான

**மருந்துச்சரக்கு வகைகள்**

**கோவில் அபிஷேகத் திரவியங்கள்**

சுத்தமான, நறுமணம் மிகுந்த

**பசுநெய் - தேன் - நல்லெண்ணெய்**

முதலியவற்றிற்கு எங்களிடம் வாருங்கள்.


**நாதா மின்சார மருந்து**

மண்டையிடி, ஜலதோஷம், வாய்வுக்குத்து

முதலிய பல வியாதிகளைக் குணமாக்கும்.

**க. செ: கணபதிப்பிள்ளை அன் சன்ஸ்**

51, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்



# பிறை

முருகையன்

பங்கு பற்றும் கவியரங்குகளில் எப்போதும் முதலிடத்தைப் பெறுபவர் கவிஞர் முருகையன். கொழும்பு உத்தியோக மொழி இலாகாவில் பணிபுரிகின்றார். B. A., B. Sc. -பட்டதாரி

ஆலம் விழியென அறைபவர் உளரே!
ஆணின் பகை அவை என அவர் மொழிவார்.
பாலின் மொழிஉன தெனும் அதை உணரின்
பாவம் புரிகிற பழியுரை பகரார்.
சாலம் நெடிதடி! அதைவிடு 'தமிழே'!!
சாவின் பிடியினை அகல்வழி அருள்வாய்

சிந்தும் முறுவலும், அதனையும் அருகச்
செய்யும் குறுகிய தொழில்களும் ஒழிக.
முந்தும் மனவெறி மொழிகளில் அமையின்
முன்பிங் கிலை எனும் ஒருகலை மலரும்.
கந்தம் படுமலர் சொருகுவை எனினும்
கண்டம் படஉயிர் திருகுதல் பிழையே.

இனியும் பொழுதினை அரிவதென்? இளமை
எரியும் படிசெரு புரிவது நினைவோ?
கனியும் பழுதென அமைகிற சுவையே!
கலகம் தனை ஒழி 'அது' செய இசைவாய்.
மனிதன் படுகிற துயரினை அறியா
மடம் என் பதுபிழை. வருக என் அருகே.

# மனிதன்...............?

'தூருவன்'

சுந்தரம் நடந்துகொண்டிருந்தார்.

நடக்கும்போது அவரைப் பார்த்தால் நடக்கிறாரா? நிற்கிறாரா? என்றே தெரியாது. காலை மெதுமெதுவாக எடுத்துவைத்து அவர் நடப்பதைப் பார்த்தால் பரிதாபமாகத்தானிருக்கும்.

காலம் உடம்பிலே பதித்துவிட்ட முதுமைத் திரைகள் அவருடலெங்கும் தெளிவாகத் தெரிந்தன. குழிவிழுந்த கண்கள்; அதிலும் குழியான நெஞ்சு. என்றோ ஒருநாள் அவரும் அழகாகத் தானிருந்திருக்க வேண்டும்.

ஆனால் இப்போது அவரைப் பார்ப்பவர்கள் முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொள்கிறார்களே? சேற்றுநிலம் வெயிலால் கீலம் கீலமாக வெடித்திருக்குமே, அப்படித்தான் அவருடலெல்லாம் வெடிப்புக்களாக இருந்தன, சின்னப் பையன்கள் அவருக்கு வைத்திருக்கும் பட்டப்பெயர் —

பொருக்கர்!

யார் கேலிசெய்தாலும் அவர் கவலைப்படுவதில்லை. கவலைப்படுவதால் மட்டும் தனது உடல் வேறு மாதிரியாக மாறிவிடும் என்று அவருக்கு நம்பிக்கையில்லை. சுந்தரம் மற்றவர்களைப்போல் இளமைச் சுகங்களை அனுபவித்துக்கொண்டு ஓடியாடித் திரியவேண்டியவர்தான்: ஆனால்—......

கையிலே ஒரு தடியையும் ஊன்றிக்கொண்டுதான் அவர் இன்று நடக்கிறார். நடக்கிறாரா?

அசைகிறார்.

சின்ன வயதிலிருந்தே அவருக்குத் 'தொய்வு'. அப்போதெல்லாம் ஆடிக்கொருமுறை அமாவாசைக்கொருமுறையென்றுஎட்டிப்பார்த்த நோய் திருமணமானபின் இடைக்கிடை பார்ந்து...... அடிக்கடி பார்த்து...... இப்போது தொய்வே அவராய்; அவரே தொய்வாய் ஆகிவிட்டது.

வீட்டுக்குள் நுழைகிறார். தடியை ஒரு மூலையில் சாத்திவிட்டுக் கிழிந்துபோன சாக்கிலே மெதுவாக இருக்கிறார். வீடென்று பேர்படைத்த அந்தக்கூடு முடமாவடியில் — நெடிதுயர்ந்த அந்த அரசமரத்தடிக்குப் பின்புறமாக அமைந்திருந்தது.

அவரைப்போலவே இளமையிலேயே ஒட்டலாகிப்போய்விட்ட நாய் அவரது காலைச் சுற்றிச் சுற்றி நக்கிவிட்டு அதே சாக்கிலேயே சுருண்டு படுத்துக்கொள்கிறது. சுந்தரம் நாயைத் தடவிவிடுகிறார்; அது வாலைப் பலமாக ஆட்டுகிறது — சாக்கிலிருந்து புழுதி பறக்கிறது.

அடுப்பிலிருந்து சுருண்டு சுழன்று வந்துகொண்டிருக்கும் புகை அவரைத் திக்குமுக்காட வைத்தது. இரண்டு மூன்றுமுறை இருமினார். காறிப் பனைமட்டையால் சுற்றி அடைத்திருந்த அடைப்புக்குள்ளால் வெளியால் துப்பினார்.

அடுப்புப் புகைந்துகொண்டே இருந்தது!

அவரது மனைவியை அந்தப் பக்கமே காணவில்லை. கொஞ்சநாட்களாக அவள் வீட்டிலேயே அதிக

மாக இருப்பதில்லை. அடிக்கடி வெளியே எங்கேயெல்லாம் போய்விட்டு வருவாள்; ஆனால் சுந்தரம் அவற்றையெல்லாம் பெரிதுபடுத்துவதில்லை. முன்பு அவள்மீது வைத்திருந்த அதே அன்பு அவருக்கு இன்னமும் மாறிப்போய்விடவில்லை. அவளைச் சந்தோஷமாக வைத்திருக்க முடியவில்லையே என்று பலதடவைகளில் அவர் கவலைப் பட்டிருக்கிறார் கண்ணீர் விட்டிருக்கிறார்.

புகை அதிகமாகியது; எழுந்துசென்று அடுப்பை ஊதினார் கண்கள் எரிந்தன. தொடர்ந்து ஊதிவிட்டுத் தொடர்ந்து இருமினார். அடுப்பிலிருந்த பானையின் மூடியைத் திறந்து பார்த்தார்—


சோறு வெந்து கொண்டிருந்தது!

புகையின் கொடுமை தாங்காமல் முற்றத்துக்கு வந்தார். அப்போதுதான் மனைவியும் எங்கிருந்தோ வந்தாள். அவளுக்கும் அப்படியொன்றும் வயதாகிவிடவில்லை. இளமைக் கவர்ச்சி அவளிடம் இன்னமும் அப்படியே இருந்தது. அவர்தான் இப்படியாக.........

"செல்லம் அடுப்பிலை சோத்தை விட்டுவிட்டு எங்கையெல்லாம் லாத்திப்போட்டு வாறாய்? சோறு அடிப்பிடிச்செல்லேபோம்." அவர் சாந்தமாகத்தான் சொன்னார்; அவள்தான் சீறினாள்.

"கேள்வி கேக்கிறதிலை மட்டும் ஒண்டும் குறைஞ்சுபோகேல்லை...... நான் நாலுவீடும் திரிஞ்சு உப்புப் புளி, முழகாயெண்டும் சேர்க்க வேண்டியிருக்கு"

"என்ன செய்யிறது செல்லம்? மேடிருந்தால் பள்ளமும் இருக்கத்தானே செய்யும்!"



"கலைச்செல்வி" வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான "துருவன்" இப்பொழுது இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மாணவராயிருக்கின்றார். ஒரு புதுமையான கதையைத் தன் வழமையான சுவையோடு சொல்கின்றார்.

அவள் விறுக்கென்று உள்ளே புகுந்துகொண்டாள். அவர் தடியை எடுத்துக்கொண்டு மெதுமெதுவாக வெளியே நடந்தார். மனைவியின் பேச்சு அவர் உள்ளத்தை உறுத்தியது. அத்தனைக்கும் அவர் 'உழைச்சுக் கொட்டாமலும்' இல்லை, நோய் அதிகமாக இல்லாத நேரங்களில் சுருட்டுச் சுருட்டப்போவார். இயலாதவர் என்ற காரணத்தால் அரசாங்கமும் ஏதோ கொஞ்சம் பணம் கொடுத்தது. மனைவியை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டுமென்பதில் அவருக்குக் கொள்ளை ஆசை. தான் அழுக்கு வேட்டியுடுத்தாலும் மனைவி நன்றாக உடுத்தால்தான் அவருக்குத் திருப்தி.

அவர் நடந்தார்.

வாசிகசாலைக்குப் பக்கத்திலிருக்கும் அந்த உருளைக் கல்லிலிருந்து

கொண்டபின் அவருள்ளத்தில் பெரும் உளைச்சல்; வேதனை. அந்த உருளைக் கல்லில்தான் அவர் எப்போதும் இருந்துகொள்ளுவார். வீட்டிலிருந்து தொய்வு 'இழுத்து' மனைவிக்கு அதிக தொல்லை கொடுக்கக் கூடாது என்பதுதான், அடிக்கடி அவர் அதிலிருந்துகொள்வதற்கு முக்கிய காரணம்.

'செல்லம் ஏன் இப்படி ஒரேயடியாய் மாறிப்போனாள்? பாவம் அவள், இப்பெல்லாம் அவளுக்கு என்ன சுகத்தை என்னாலை குடுக்க முடியுது?... கடவுளே அவள் நல்லாயிருக்கவேணும். மற்றப் பொம்பிளையளைப்போலை சந்தோஷமாய் இருக்கவேணும்; ஒரு குறையும் அவளுக்கு வரக்கூடாது!'

அந்த நல்லமனம் எண்ணிக் கொண்டது!

அன்றும் சரி, இன்றும் சரி செல்லம் சந்தோசமாக இருந்தாலே அவருக்குப்போதும். அரசமரத்திலிருந்து உதிர்ந்த சருகுகள் அவருடலில் விழுந்தன. அவர்கூட இப்போது உதிர்ந்த சருகுதானா? உதிர்ந்த சருகும் உபயோகப்படுகிறதே.

அவருக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. தடியை எடுத்துக்கொண்டு மீண்டும் வீட்டைநோக்கி நடந்தார். தூரத்தில் அவரைக் கண்டபோதே 'ஒட்டல்' நாய் ஓடிவந்து காலைச்சுற்றி நக்கியது. குனிந்து நாயைத் தடவிவிட்டார்.

∴ ∴ ∴

செல்லம் சோறுபோட்டாள். உண்மையிலேயே சோறு அடிப்பிடித்துத்தான் போயிருந்தது. அவர் பேசாமற் சாப்பிட்டார். சாப்பிடும்போதே செல்லம் ஏதோ முணுமுணுத்தாள். அடுத்தவீட்டுக்காரர்கள் படம்பார்க்கப் போகிறார்களாம்......... எல்லாரும் கொஞ்சக் கொஞ்சக் காசுபோட்டுக் கார்பிடித்துப்போகிறார்களாம்...... தானும் அவர்களுடன் போகப்போகிறாளாம்.

இதுதான் அவள் முணுமுணுத்த மந்திரம்.

சாப்பிட்டு முடிந்ததும் தட்டத்திலிருந்த வாடல் வெற்றிலையை எடுத்துப்போட்டுக்கொண்டார். பின் வேட்டித் தலைப்பில் முடிந்துவைத்திருந்த மூன்று ரூபாவையும் கொஞ்சம் சில்லறையையும் எடுத்துச் செல்லத்தின் கையிற்கொடுத்தார்.

"அவையளோடை நீயும் போட்டுவா செல்லம். என்னாலை உன்னைப் படத்துக்குக் கூட்டிக்கொண்டு போகேலாது. நான் வருத்தக்காறன். நீ சந்தோஷமாய்ப் போட்டுவா...ம் ...கெதியாய் வெளிக்கிட்டுப்போ"

∴ ∴ ∴

சுந்தரம் வீட்டைநோக்கித் தள்ளாடித் தள்ளாடிப் போய்க்கொண்டிருக்கிறார். ஒருகையிலே தடி. இன்னொரு கையிலே ஏதோ சரைகள். தெருவில் வைத்து வண்டிக்காரனிடம் வாங்கிய பொரிகடலையும் ஓமப்பொடியும் அவற்றுள் இருந்தன.

செல்லத்துக்கென்றே ஆசையோடு வாங்கப்பட்டவை அவை!

அவளின்ரை ஆசையொண்டையும் நிறைவேற்றாமல் விடக்கூடாது. 'ஆசைப்பட்டாள்—அண்டைக்குப் படத்துக்கும் போட்டுவந்திட்டாள்.'

மனைவியின் மகிழ்ச்சியில்தான் நிறைவு காண்கிருர் அவர்.

கையிலிருக்கும் சரைகளைப் பார்த்துக்கொண்டே நடக்கிருர். இடையே ஒரு இருமல். அடிவயிற்றிலிருந்து இழுக்குமாப்போல் இழுத்து வேலியோரத்தில் சளியைத் துப்பிவிட்டுத் தொடர்ந்து நடக்கிருர்,

காகமொன்று அவர் கையில் வைத்திருக்கும் சரைகளைக் கொத்த சுற்றிச் சுற்றிப் பறந்தது. அவர் தடியை வீசிக் காகத்தைத் துரத்துகிருர்,

குடிசைக்குக்கிட்ட வந்துவிட்டார்,

நாய் காலைச்சுற்றி நக்கியது. கால்களை மேலே தூக்கிப்போட்டுப் பிருண்டியது. சரையைப் பிடுங்கி விடவேண்டும் என்கிற அவா அதற்கு. சுந்தரம் சரையை மேலே உயர்த்திப் பிடித்துக்கொண்டார்.

வீட்டுக்கதவு சாத்திக்கிடந்தது. செல்லம் எங்கேயோ போய் விட்டாளாக்கும் என்று எண்ணிக் கொண்டே சுந்தரம் பின்புறமாக நடந்தார். அவளை எங்குமே காண வில்லை. ஆனல்......

குடிசைக்குள் இருந்து கீச்சுக் கீச்சென்று ஏதோவொரு ஒலி...... சிரிப்பொலி மட்டும் அவருக்குத் தெளிவாகக் கேட்டது. பனைமட்டை அடைப்புக்கூடாக உள்ளே பார்த்தார். அங்கே—

செல்வம்—அவர் மனைவி — முடமாவடிப் பொன்னையாவின் மூத்த மகன்...... சீ! கேவலம்.

ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. உடம்பு முழுவதும் நடுங்கியது.

அதற்குமேல் அவர் பார்க்க வில்லை, அப்படியே ஓசைப்படாமல் திரும்பிவிட்டார்,

சிறிதுதூரம் நடந்து செல்ல, அந்த நல்லமனம் சிறிது சிறிதாகச் சமாதானம் அடைந்தது,

'அதுக்கென்ன? அவள் நல்லாயிருக்கவேணும், நான் வருத்தக் காறன். அதுக்காகத் தன்ரை ஆசைகளெல்லாத்தையும் அவள் ஏன் அடக்கிக்கொள்ளவேண்டும்? அவள் சந்தோஷமாய் இருந்தாற் சரிதானே!

நாய் அவரைச் சுற்றிச் சுற்றி நக்கியது, சரையைப் பறிக்கப் பார்த்தது. சரையை அவர் மேலே உயர்த்திப் பிடித்துக்கொண்டார், அந்தக் காகமும் இன்னும் முயற்சிசெய்து தான் பார்த்தது; அவர் தடியைவீசிக் கலைத்தார்.

இப்போது அவர் அந்த உறுளைக்கல்லை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிருர், மனதிலே வேதனைக்குப் பதிலாக — கோபத்துக்குப் பதிலாக— ஒரு மகிழ்ச்சி !

இன்னும் கொஞ்ச நேரத்தில் செல்லத்துக்கென்றே வாங்கிய பொரிகடலையுடனும், ஓமப்பொடியுடனும் திரும்ப வீட்டுக்குப் போகப்போகிருர்,

ஏனென்ருல்—

அவர் மனிதரில்லை; தெய்வம்,

அடுத்த இதழில்

**புதிய தொடர்கதை**

பொது மராமத்து இலாகாவின் பொறி இயல் அறிஞரான கட்டுரையாளர் வைத்திலிங்கன் (இவன்) வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றுகின்றார். விஞ்ஞான வளர்ச்சி மக்களுடைய மனத்தில் ஏற்படுத்தியுள்ள அலைக்கழிப்பை இலகுவான தமிழில் இனிமையாகக் கூறுகின்றார் — இந்த உரையாடலில்.

# விஞ்ஞான மாயை

'இவன்'

அந்திவேளை. இரு உருவங்கள் கடற்கரை ஓரமாக தவழ்ந்து வந்து விளையாடும் அலைகளைப் பார்த்துச் சிந்தித்துக்கொண்டிருந்தன. எங்கும் நிசப்தம். அலை ஓசை மட்டும் 'சோ'வென்று இடைக்கிடை கேட்டுக்கொண்டிருந்தது. விசும்பில் விண்மீன்கள் பிரகாசிக்கத் தொடங்கின. அருகில் சென்று பார்த்தால் வேறுயாருமில்லை; விஞ்ஞானி லிங்கனும் மகள் மேகலாவும்தான் இரு உலகங்களிற் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று ஒரு விண்மீன் வானத்திலிருந்து மேல்நோக்கிப் போவதுபோல் தெரிந்தது. ஆச்சரியத்திலுல் உந்தப்பட்ட மேகலா, "அது என்ன அப்பா?" என்று கட்டிப்பிடித்துக் கொண்டு கேட்டாள்.

"அதுதான் அமெரிக்காவின் செயற்கைக் கிரகம் கண்ணே" என்றார் விஞ்ஞானி லிங்கன்.

மே-ஏனப்பா இதை ஆகாயத்தில் விட்டிருக்கின்றார்கள்?

லி. மனிதனின் அண்ட வெளியை ஆய்வு செய்வதற்காக எடுக்கும் முயற்சிதான் இது.

மே-எதற்காக மனிதன் அண்ட வெளிக்குப்போக முயற்சி செய்கின்றான்?


லி- மனிதனின் சரித்திரத்தில் இந்த இருபதாம் நூற்றாண்டில் மக்கள் பெருகியது போல் எந்தக் காலத்திலும் பெருகியதில்லை. இந்த 62 ஆண்டுகளுக்குள் 16000 கோடியிலிருந்து 29000 கோடியாக மக்கள்தொகை பெருகிவிட்டது. இன்னும் 50 வருடங்களில்60000 கோடியாகப் பெருகிவிடுமென்று மதிப்பிடுகின்றார்கள். இப்படியாகப் பெருகிக்கொண்டேபோனுல் இந்த உலகில் இருப்பதற்கு இடம் இல்லாமல் போனுலும் போகலாம். மனிதன் வேறு உலகங்களை

நாடவேண்டிவரும் என்று இப்பொழுதே சிந்திக்கின்றான். அன்றியும் இந்தப் பரந்தவெளியில் என்ன இருக்கிறது என்று நேரில் பார்க்கவும் ஆசைப்படுகின்றான்.

மே-ஏனப்பா, நான் மகாபாரதம் படித்திருக்கின்றேன். அதில் மக்கள்தொகை பூமியில் அதிகரித்துவிட்டது என்று பூபாரம் தீர்க்கவே கண்ணன் அவதரித்துப் பாரதயுத்தத்தை நடத்தி, பூபாரத்தைத் தீர்த்துவைத்தான் என்று சொல்லியிருக்கின்றார்களே, அப்படி ஏன் இனிமேலும் நடக்காது? இயற்கை தன்னைத்தானே திருத்தி அமைத்துக்கொள்ளாதா?

லி-இது பரமரகசியம். விஞ்ஞான மூளைக்கு எட்டாதது. நடந்து முடிந்தால்தான் தெரியும். அப்படி நடந்தாலும் நாங்கள் இருக்கின்றோமோ தெரியாது.

மே-சொல்லுங்கள் கேட்டுக்கொண்டுதான் இருக்கின்றேன். இந்த மக்கள் தொகை அதிகரிக்கின்ற விஷயம் ஒரு பெரிய கேள்வியை எழுப்புகின்றது. நீங்கள் நான் கேட்கும் சாமான்கள்வேண்



கோடைக்கேற்ற
குளிர்பானம்
விஜயா ஸ்பெஷல்
சோடா பானங்கள்
தாகத்தைத் தீர்க்கிறது
ஆரோக்கியத்தைக்
கொடுக்கின்றது.
எங்கும் புகழ் பெற்றது

விஜயா சோடாத் தொழிற்சாலை
உரும்பராய்
உரிமையாளர் : S. பஞ்சலிங்கம்

டித் தருவதில்லை. ஏனென்றால் சாப்பாட்டுக்கே பணம் போதாமல் இருக்கு என்று. சனங்கள் கூடினால் எல்லாரும் நன்றாக வேலைசெய்து கமம் முதலியன செய்தால் எல்லாச் சாமான்களும் மலிவாகவன்றோ கிடைக்க வேண்டும்.

வி- சுலபமாகக் கேட்டுவிட்டாய். ஆனால் உண்மை அதுவன்று. மக்கள்தொகை அதிகரிக்கும் விதத்துக்கு மிகக் குறைவான வீதத்திலேயே உணவு உற்பத்தி அதிகரித்திருக்கின்றது. எல்லாவித இயந்திர சாதனங்களைக்கொண்டும், நவீன விஞ்ஞான முறைகளைக் கையாண்டும உற்பத்தி முன் வருடங்களிலும் பார்க்க இப்பொழுது பெருகியிருந்தாலும், இந்தப் பெருக்கம் ஜனப்பெருக்கத்துக்கு ஈடாகவில்லை. ஆனதினால்தான் உலகில் எல்லா இடங்களிலும் உணவுப் பொருட்களின் விலை உயர்ந்தே இருக்கின்றது.


மே-ஏன் நவீன இயந்திர சாத


**யாழ்ப்பாணத்திற்கு**

வரும்போது எங்களிடமும்
வாருங்கள்.

**கேக்: பிஸ்கற்: மஸ்கற்:**

குளிர்ந்த பானங்கள்
சர்பத் வகைகள்
தேசீய ஆஸ்பத்திரி சுவீப்
சி. ரி. சி. 50 சத சுவீப் டிக்கட்
ஆகியவைகள் எந்நேரமும்
பெற்றுக்கொள்ளலாம்.



**சிவசக்தி கூல்பார்**


58, பெரியகடை :: யாழ்ப்பாணம்.

ணங்கள்,பயிர்நோய் ஒழிப்பு மருந்துகள், சாகுபடியைக் கூட்டுவதற்குப்போடும் உரங்கள் முதலியனவற்றின் செலவினுல்தான் உணவு விலைகள் கூடுகின்றது என்று சொன்னுல் என்ன?

லி- அதுவும் ஓர் காரணந்தான். ஆனுல் தேவைக்கு ஏற்ற வருவாய் இல்லாவிட்டால் விலை ஏறத்தான் செய்யும்— அன்றியும் முன்னேற்றம் என்று நாங்கள் கருத, ஒரு பக்கத்தால் இந்த பூச்சி ஒழிப்பு மருந்துகள் முதலியன பாவிப்பதால் மனிதனின் சுகாதாரத்தையும் பாதிக்கக்கூடும் என்றும் கருதுகின்றுர்கள். முற்காலத்தில் மனிதன் தன்னுடைய தேகத்தைக் கொண்டே பிழைத்து வந்தான். ஆனுல் இக்கால மனிதன் தன் மூளையைக்கொண்டே பிழைக்க விரும்புகின்ருன். எல்லோரும் மூளை கொண்டுபிழைப்பதற்கு எங்கே தொழிலுக்குப்போக முடியும்! மேலைத்தேசங்களிலும் சரி, கீழைத்தேசங்களிலும் சரி விஞ்ஞான அறிவைக்கொண்டு சுகமாகவே வாழ விரும்புகின்ருன் மனிதன். ஆனுல் பெரும்பான்மையர்ன மக்கள் சுகத்தை அடைகின்றுர்களா? சுதந்திரத்துடன்தான் இருக்கின்ருர்களா? பெருகிவரும் அறிவு பெரும் பெரும் பிரச்சினைகளையே உண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றது. உதாரணமாக விஞ்ஞான சாதனங்களிலேயே மனித வாழ்க்கையை முழுக்கத் தங்கவைக்க வேண்டிய சிக்கலான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. மனிதனின் தனிச் சுதந்திரம் ப்றிபட்டுக்கொண்டே போகின்றது. சுதந்திரமாக, இன்பமாக திருப்தியாக இருக்க மனிதன் விஞ்ஞான சக்தியை உபயோகிக்க முயன்ருன். ஆனுல் நாளடைவில் தனிச் சுதந்திரத்தை இழந்து இன்பம் கானல்நீராக, திருப்தி அற்று இருக்கவேண்டிய நிலைமைதான் ஏற்படுகின்றது.

மே-கர்னல்நீர் என்றீர்களே அது என்னப்பா?

லி. நீ காரில் போகும்போது நல்ல மத்தியானவேளையில் ரோட்டில் தூரத்தில் பார்த்தால்மழைபெய்து நனைந்து



# விகர்பில்ஸ்

இளமையிலேயே நரம்புத் தளர்ச்சியினாலும். மற்றும் ஆண்மையின்மை ஏற்படுவதால் வெட்கப்பட்டும், வாழ்க்கையில் வெறுப்புற்றும் கழியும் வாலிபர்களுக்கும் வயதானவர்களுக்கும் இழந்த வாலிபத் தன்மை திரும்பவும்பெற இம் மருந்தை ஒருமாதம் சாப்பிட்டால் போதுமானது மூத்திரக்கோளாறுகள், ஸ்வப்ன ஸ்கலிதம், மூலம் பவுந்திரம், பசியின்மை, மாதவிடாய்க் கோளாறுகள், விதைவாய்வு, காமாலை, பாண்டு, மூச்சுமட்டு, மலச்சிக்கல் முதலிய வியாதிகளைக் குணப்படுத்தி நிரந்தரமான ஆரோக்கியத்தை அளிக்கும் திறமையும் இம்மருந்துக்கிருக்கிறது.

**30 மாத்திரைகள் விலை**
**ரூபா 4-50**

**எஸ்.என்.குரு மெடிக்கல் ஹோல்**
**80 புதுச்செட்டித் தெரு**
**கொழும்பு 13.**


தண்ணீர் இருப்பதுபோல இருக்கும், அதை நீ கண்டு இருப்பாயல்லவா? ஆனால் அருகில் சென்று பார்த்தால் ஒன்றையும் காணாது ஏமாந்திருப்பாய். அது தான் கானல் நீர். ஒரு குறிப்பிட்ட சூழ் நிலையில் உள்பொருள் போல தோன்றும் ஒன்று உண்மையான நிலைமையில் பார்த்தால் இல்பொருளாக இருக்கும். இதைத்தான் "மாயை" என்று மெய்ஞானிகள் கூறுவார்கள்.

மே. இதெல்லாம் வெறும் ஊகம் தானே.

வி. இல்லை. இப்பொழுது முக்கியமாக அமரிக்கா, ருசியா முதலிய தேசங்களில் உள்ள சமுதாய அமைப்பையும், பொருளாதார வாழ்க்கையையும் எடுத்தால் எங்கள் நாட்டிலும் பார்க்க செல்வம் கொளிக்கும் நாடுகளாக சீரும், சிறப்பும் பொருந்திய மனிதர்கள் வசிக்கும் நாடுகளாகவும் காணப்படுகின்றன. ஆனால் சென்ற வருடம் அமரிக்காவிலிருந்து குடும்ப சேவா சங்கம் வெளியிட்ட அறிக்கையில் அமரிக்காவில் உள்ள பெரிய வியாதி "குடும்ப பிரிவினை"

என்று வெளியிட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு வருடமும் 2 லட்சம் பேர் பயித்தியக்கார ஆசுபத்திரிக்கு அனுப்பப்படுகின்றார்களாம். ஒவ்வொரு நாலில் ஒரு விவாகமும், விவாகப் பிரிவினையில் தான் முடிகின்றதாம். 1900 ஆண்டிலும் பார்க்க ஏழு மடங்கு விவாகரத்து அதிகரித்து விட்டதாம். பாலிய வயதினர் செய்யும் குற்றங்கள் 1940 க்கு பின்பு 3 மடங்கு அதிகரித்து விட்டதாம். இதனால் பாதிக்கப்படுபவர்கள் சிறுபிராயத்தினர்கள், அதன் விளைவு, பின்வரும சந்ததியாரையும் பாதிக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமைக்குக் காரணம், பொறுப்பற்ற குடும்ப வாழ்க்கை, பண்பாடற்ற கொள்கைகள், மன வருத்தங்கள், குடி, வெறி, உணர்ச்சிவசப்பட்ட பெரும் துயரங்கள் முதலியனவே, என்கின்றார்கள். எங்கே சாந்தி, அமைதி, இன்பம் என்று தேடுகின்றார்கள்.


மே. அப்பா நீங்கள் சொல்


தமிழ்ப்பெருங்குடிமக்களே !

நாம்
நவீன முறையில்
நல்ல பவுணில்
நகைகள் செய்துகொடுப்போம்

ஓடர் நகைகளை
ஒப்படையுங்கள்.

குறித்த தவணை
குறைந்த செலவு
சிறந்தமுறை
உத்தரவாதம்



நா. வ. கந்தையா அன்ட் சன்ஸ்
நகை வைர வியாபாரிகள்
76/1, 76/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வதைப் பார்த்தால் எங்கள் கிராமத்தில் கூடிய அமைதியும் இன்பமும் இருப்பது போல் அல்லவோ தெரிகின்றது.

லி. ஆனுல் நீ கிராமத்துக்குச் சென்று உன்னுடைய சுற்றத்தாருடன் பேசிப்பார் அவர்கள் என்ன சொல்லுகின்ருர்கள் என்று. மேனுட்டவர்களைப்போல் நாஙகள் காரிலேயோ விமானத்திலோ பறந்து திரிகின்ருேமா? மின்சாரவசதிகளிருக்கா? ஓய்வு நேரத்தைச் செலவளிக்க நாடகம் சினிமா இருக்கா? ஏன் ஓய்வுதான் இருக்கா? பளிங்கு மாளிகைகள் உண்டா? என்று, மற்றவர்களைப் போல் தாங்கள் இல்லையே என்று ஏங்குகின்ருர்கள்,

மே. அப்போ எல்லாம் கானல் நீர் போலத்தான் அப்பா தோற்றுகின்றது. மேலும் சொல்லுங்கள் பார்க்கலாம்.

லி. எந்த நாட்டை எடுத்தாலும் அதன் வருவாயில் முக்கிய பாகத்தைத் தன் தன் தேசப் பாதுகாப்புக்கென்றே செலவிடுகின்றது. வேள்விக்கு என்று வளர்க்கும் ஆடுகளைப் போல் லட்சக் கணக்கான மக்களை வளர்க்கின்ருர்கள். யுத்த விமானங்கள், அணுகுண்டுகள், தானே இயங்கி வெகுதூரம் சென்று எதிரியைத் தாக்கும் அணு ஆயுதங்கள் முதலியனவற்றை ஏராளமாகத் தயாரிக்கிருர்கள். மனிதனுக்கு மனிதன் பயந்து கொண்டே கத்தியைத் தீட்டிக் கொண்டிருக்கிருன். பெரிய தேசங்களாயினும், சிறிய நாடுகளாயினும், ஒரே நாட்டில் உள்ள வெவ்வேறு இனங்களாயினும் நிலைமை ஒன்ருகவே இருக்கின்றது

மே. ஏனப்பா, தீட்டிய கத்தியை கூர்பார்க்க மாட்டார்களா?

லி. உலக சரித்திரத்தைப் புரட்டினுல் நெடுகிலும் கூர்பார்த்திருக்கின்ருர்களே ஒளிய பேசாமல் போட்டு விட்டு இருக்கவில்லை! ஆனுல் இப்பொழுது இருக்கும் நிலையில் எல்லாம் அழிந்துவிடுமென்று யோசிக்கின்ருர்கள்.

மே. ஏன்,எல்லாம்அழிந்துவிடும் என்ற பயம் வேறு ஆக்கத்திற்குத் திருப்பி விடாதா?

லி. நன்ருகக் கேட்டாய். ஒவ்வொருவனும், தான் செய்வது குற்றம், அதற்குத்

தண்டனையும் உண்டு என்று தெரிந்து கொண்டே பல தவறுகளைச் செய்து கொண்டிருக்கின்றான். ஆனபடியால் பயம் அறிவுக்கு ஊக்கம் தரும் என்பது ஐமிச்சம் தான்.

மே மனிதன் இப்படிப்பட்ட முரண்பாடான நிலைமையில்தான் இருக்க வேண்டுமோ?

லி- இயற்கையை நோக்கி உயிர் இனத்தின் கதையைப் பார்த்தால் ஒரு அணு உயிரிலிருந்து பல அணுக்கொண்ட விலங்குகள் ஈறாக மனித இனம்வரை முரண்பட்ட எதிரிடைச் சக்திகளுக்கிடையே உள்ள சூழலுக்கு ஏற்றவாறு மாறிக்கொண்டே வந்திருக்கின்றது. இப்பொழுது உள்ள பிரச்சினைகள் நெடுக இருந்தே வந்திருக்கின்றன, ஆனால் வேறு வேறு உருவத்தில் காலத்திற்கு ஏறறவாறு தோன்றியிருக்கின்றன.

கடல் உள்ள மட்டும் அலை ஓயாது. ஆனால் ஆழ் கடலின் மேல் பரப்பில் இருந்து கீழ் நோக்கிச் சென்றால் உள் அமைதியைக் காணலாம். அவ்வண்ணமே புறவாழ்வில் அமைதி தேடுவது கானல் நீரை நாடி ஓடும் கதையாகத்தான் இருக்கும். ஆனால் அகவாழ்வின் ஆழத்தில் புகுந்தால் அமைதி சாந்தம் இன்பம் காணலாம்.

மே அப்பா கடற்கரையில் வெகு நேரமாக இருந்து விட்டோம் அம்மா தேடுவா' வாங்க போகலாம்.

❁

அடுத்த இதழில் ஆரம்பமாகின்றது

# பலதும் பத்தும்

நீங்கள் இதுவரை படித்திராத பல புதிய சுவையான செய்திகள், குறிப்புகள் நிறைந்தது.

# இலக்கிய பரம்பரை

## 4. சிறுகதை இலக்கியம

**வ. நடராஜன்**

மனித உடல் வளர்ச்சியில், நாகரிக வளர்ச்சியில் எவ்விதம் ஒரு சர்வதேசப் பொதுமை காணப்படுகிறதோ, அதேபோல இலக்கிய வளர்ச்சியிலும் ஒரு சர்வதேசப் பொதுமையுண்டு. ஒருமொழி இயல்பாக வளர்வதுபோல, மற்றொரு மொழியும் வளரலாம். ஒரேகாலத்திய மொழிகள் ஒரே போக்கில் முன்னேறல் முடியும். இராமாயண பாரத காவியங்கள் உருவாகினபோது, கிரேக்க நாட்டிலும் இராமாயண பாரதகாவியங்களைப்போன்ற 'இலியட்', 'ஒடிசி' முதலிய காவியங்கள் தோன்றின. அவை இலக்கியப் போக்கொருமைப்பாடுடையனவாக இருப்பதைக்கொண்டு, 'இலியட்', 'ஒடிசி' என்பன இராமாயண பாரத காவியங்களுக்கு வழிகாட்டி, அவைதோன்றக் காரணமாயினவென்றே, அவ்விராமாயண பாரத காவியங்கள், கிரேக்க காவியங்கள் தோன்றக் காரணமாயினவென்றே கூறல் பொருந்தாது. மனித சமுதாய முன்னோடிகளின் போக்கொருமை இலக்கியத்திலும் காணப்படுவது புதுமையன்று.

மொழி சில அத்திவாரங்களின் மீது ஆக்கப்பட்டது. அந்த அத்திவாரப்போக்கை மற்றொரு மொழியினால் மாற்றிவிட முடியாது. ஆயின் இடையிடை சில மாறுதல்களை அது ஏற்படுத்திவிடமுடியும். அவை மூலாதார அடிப்படைப் போக்கை மாற்றாது ஏற்புடைய சில நவீன தோற்றங்களை ஏற்படுத்தலாம்,

ஒரு மொழியிற் காணப்படும் ஒரு நவீனதோற்றம் மற்றொரு மொழி வளர்ச்சிக்கு உதவலாம். இவ்வாறே, இக்காலம் தமிழில் சிறுகதை இலக்கிய எழுச்சிக்கு, ஆங்கிலமொழி வழிகாட்டியிருக்கலாம், அவ்வாறு வழிகாட்டினும் அவ்வழி இயைபுடையதாயிருக்கத்தக்க அடிப்படையியல்பு தமிழில் இல்லையேல், சிறுகதை இலக்கியம் தோன்றியிருக்கமுடியாது.

கதை இல்லாத மொழியே இல்லை. அங்ஙனமாக மிகப்பழையதொரு மொழியாகிய தமிழில் சிறுகதை அந்நிய மொழிமூலம் வந்தது என்று கூறல் அறிவீனம். கேட்காதனவற்றைக் கேட்குநபோலவும், பேசாதனவற்றைப் பேசுநபோலவும் கதை செய்வதற்குத் தொல்காப்பியம் வழி செய்திருக்கும்போது சிறுகதை இலக்கியம் தமிழுக்குப் புதிதெனல் புதுமையே!


தமிழிலுள்ள தனிச்செய்யுள்கள் சிறுகதை முன்னோடிகள் எனல் சாலும். பண்டைக்காலத்திற் செய்யுளே தமிழ் இலக்கியத்தின் உருவமாயிருந்தபடியால் நாவல்களும் சிறு

கதைகளும் செய்யுள்களாக இருந்தன எனல் தகும்.

சிறுகதைகள் இலக்கிய விருட்சத்தின் ஒரு பூவாக ஒரு இலையாக இருக்கலாம் என முன்னர் கூறினோம். இலக்கியப் பல்பொருளில், ஒரு சிறு பொருள் பூரண வடிவமெடுத்துக் காட்சிதருவது சிறுகதை இலக்கியம். காவியம், கதா நாயகனின் பூரணவரலாற்றைக் கூறி இலக்கியப்பெருவிருட்சமாக; சிறுகதை ஒரு கதாபாத்திரத்தின் ஒரு நாளையவோ அல்லது ஒரு நிமிடத்தையவோ இயல்பை விளக்கி அதன் மூலம் இலக்கியப் புனித இயல்பு புலப்படநிற்பது. சிறுகதை, வாழ்வின் ஒரு சிறு அம்சம். ஆனால், இலக்கியப் பொருள் அச்சிறு அம்சத்தினூடே தன்னொளி வீசி நிற்பதைக் காணமுடியும்.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்" என்னும் சங்கச் செய்யுள் ஒரு சிறுகதை. அச்சிறு கதைமூலம் கணவனின் மகிழ்ச்சி மனைவியின் பெறற்கரும்பேறு, என்னும கற்புடைமை பிரகாசிக்கிறது.

சங்கச் செய்யுள்களும் பிற செய்யுள்களுமாக எத்தனையோ தனிச் செய்யுள்கள் எத்தனையோ தன்மை வாய்ந்தனவாக இருப்பதுபோல சிறுகதைகளும் மிக அதிகமாய் வேறு வேறு இயல்புவாய்ந்தனவாய் இருப்பதைக் காணலாம்.



ஆழமான தமிழறிவும் நுண்ணிய இலக்கிய நோக்கும் உடையவர் பண்டிதர் நடராஜன் அவர்கள். ஈழத்தின் சிறந்த இலக்கிய விமர்சகர்களுள் ஒருவர். இப்போது சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியராக இருக்கும் இவர் நல்ல பேச்சாளர்; பாட புத்தகங்களின் ஆசிரியர்.

சிறுகதைப் பொருள், இலக்கியத்தின் மிகச் சிறு சம்பவம். அப்பொருளை வெளியிடும் சிறப்பே சிறுகதையிற் பிரதான இலக்கியப்பொருளைத் தெரிந்தெடுத்து விட்டால் அங்கு பலபிரச்சினைகளுக்கு இடமில்லை அதனை ஏற்ற வழியிற் கொண்டுசெல்வதுதான் அதிலுள்ள அடுத்தவேலை நாவலைப்போல பல சிக்கல்கள் ஆங்கில்லை. மொத்தத்தில் சிறுகதை அமைப்பது இலகு என்றே [illegible] வேண்டும். இதனாலே தான் இன்று பலர் சிறுகதைமூலம் தமது எழுத்தைத் தொடங்குகின்றனர்.

தமிழிலுள்ள தனிச் செய்யுள்கள் பலவகைத்தானவை எனக் கூறினோம். தனிச் செய்யுள்களில் உள்ளுறையுவமம் என ஒரு பகுதியிருப்பது இலக்கியப் பயிற்சியுடையவருக்கு தெரிந்த ஒன்றே. இச்செய்யுள்களை அடியொற்றியே உருவகக் கதைகள்

தோன்றின. மேற் கூறப்பட்ட செய்யுள்களை மனத்திற் கொள்ளும்போது 'சுடர்த்தொடீஇ கேளாய்'' என்ற காதற் பிரதிபலிப்பின் தன்மையைக் காட்டும் கவிதையும், முல்லைக்குத் தேர் உதவிய, பாரியின் கொடைச் சிறப்பைக்காட்டும் கவிதையும் 'வாழ்த்துதிரு நாகை வாகான தேவடியாள்" என்ற காளமேகத்தின் தனிச்செய்யுளும், 'ஆறும் பதினாறும் ஆமூரில் வேங்கட்டன் ஏறும் பரிமாவே ஏற்றமா, மாற்றமா, வெந்தமா, சும்மா, வெறுமா, களிகிற வந்தமா, சந்தமாமா என்ற தனிப்பாடலும் வெவ்வேறியல்பு பெற்றிருத்தல் போலவும் "கன்னி நறும்தேறல் மாந்திக் கமலத்து மன்னித்துயின்ற வரிவண்டு பின்னையும் போய் நெய்தற்கவாவும் நெடுநாட" என்னும் நளவெண்பாச் செய்யுள் வண்டின் மூலம் இருதுபன்னன் காமுகன் என உள்ளுறையுவமம் தெரிவித்தல் போலவும சிறுகதைகளும் உருவகக்கதை முதலிய பல்வேறு உருவங்கள்பெற வழிகாட்டுகின்றன எனக்கொள்வது பொருந்தும்.

இவ்வாருக மேற்கூறிய அகநானூற்றுப் புறநானூற்றுத் தனிச்செய்யுள்களை எவ்வாறு "வாழ்த்துதிரு நாகை." "அப்பனிரந்துண்ணி!" முதலிய தனிச் செய்யுள்களைக் காட்டிலும் மேலான இலக்கியமாகக் கொள்கிறோமே. அவ்வாறே இன்று தோன்றியுள்ள சிறுகதைகளையும் நாம் தரம்பிரித்து வகுத்து இலக்கிய வரிசை கூறிவிடலாம். இவ்வாறு சிறுகதை இலக்கிய விமரிசனம் செய்யும் மரபு ஈழநாட்டில் இன்னும் எழவில்லை. சென்ற மாசிமாத 'உமா' இதழில் 'வெள்ளிப்பாதசரம்' என்ற இலங்கையர்கோன் கதைக்கு ஓரளவு சிறந்த விமரிசனம் எழுதப்பட்டுள்ளது.

சிறுகதை இலக்கியத்துக்கு வேண்டிய பொருள்கள் அளவின்றிக் கிடக்கின்றன. திருக்குறள் சங்கநூல்கள், வாழ்க்கைமுறை என்பவற்றுள் உள்ள எத்தனையோ அம்சங்கள் இலக்கியப் பொருளாகற் பாலன' அவற்றை விளக்கத்தக்கவொரு உடல் அமைப்பதே சிறுகதையாசிரியனின் வேலை. சிறுகதையாசிரியனால் எடுத்துக்கொள்ளப்பட்ட இலக்கியக்கரு எது? அது எத்தகையது? அதற்களிக்கப்பட்ட உருவம் முறையாகச் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளதா? அமைப்பு விசேடமென்ன? குறைபாடியாது? இத்தலையங்கங்களின்கீழ் சிறுகதைகள் விமரிசனம் செய்யப்படல்வேண்டும். இத்தலையங்கங்களின்கீழ் விமரிசனம் செய்யப்பட்டால் இன்றுள்ள எத்தனையோ சிறுகதைகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

'ஈழத்துச் சிறுகதைகள்' (1) என்றதொருநூல் வெளிவந்த போது அதிலுள்ள இரண்டு கதைகளையாவது வாசிக்கலாமென எண்ணி வாசித்தேன். முதலாவது கதை இலங்கையின் பிரபல சிறுகதையாசிரியரான 'இலங்கையர்கோன்' அவர்களது 'கடற்கரைக்கிளிஞ்சில்' என்பது, அக்கதையில் உள்ள 'இலக்கியக்கரு' எது என்பதை அறிவது இலகுவாகத் தென்படவில்லை. இவைகளும் சிறுகதை இலக்கியங்களாகுமா? என்று எண்ணி மற்றொரு பிரபல எழுத்தாளரான சி, வயித்திலிங்கம் அவர்களின் "கங்கா கீதம்" என்னும் கதையைப் படித்தபோது சிறுகதை இலக்கியம் இலங்கையிலுமுண்டு என்ற நம்பிக்கை ஏற்பட்டது. இவற்றை நன்கு விமரிசனம் செய்வதற்குக் காய்தல் உவத்தலற்ற சிறந்த அறிவாளரான சிறுகதை இலக்கிய விமரிசகர்கள் முன்வரல்வேண்டும்.

கிண்டல் கவிதைகள் மட்டுமல்லாது, பண்புக் கவிதைகளும் எழுதுவதில் வல்லவர் ஆம்பலூர்க் கவி அருணகிரிதாசர். வேறொரு புனை பெயரில் சிறுகதைகளும் காரமான இலக்கிய விமர்சனமும் எழுதி வரும் அன்பர் ஓர் பள்ளியாசிரியர்.

# கவிதைப் பெண்!

ஆம்பலூர்க்கவி
அருணகிரிதாசர்

சேலையெடுத்து விழியமைத்தாள், தன்
செங்கையெடுத் தெனிதயம் வைத்தாள்
மாலைக் கொடுத் தெனுளம் நிறைத்தாள்
மதி, நாணமுகத்து மலரமைத்தாள்
சோலை வனத்துக் கிளிமொழியாள்
சொக்கெனப் பேச்சுக் குரல் கொடுத்தாள்
வாலைக்குமரி யென்றுருகி நின்றுளென்
வாழ்வின் வனப்புக் குருக் கொடுத்தாள்!

தெங்கிள நீரினைக் கொங்கையென்றாள் தேமல்
சேர்ந்ததன் விம்மலைக் கண்டிடென்றாள்
பொங்கும் மதுவினிற் போதை தந்தாள் இன்ப
போகமே பேரின்ப மென்றுரைத்தாள்
கங்குலிருளினைக் கூந்தல் வைத்தாள் வெய்ய
காமத்தின் வெம்மை யெனக் களித்தாள்
எங்கும் அவளுக்குக் கண்டிடுமெல்லையில்
இன்பப் பெருவெளியாகி நின்றாள்

காதலின் காவியமாகி நின்றாள், கவி
கண்டிடும் கற்பனைக் கன்னி என்றாள்
போதவிழ் தாமரைப் பொய்கையிலே பூம்
பாதங்கள் பெற்றனள், மெல்லிடையைச்
சீதனச் சந்தன மேனியிற்
சில்லிடும் மின்னலாய்க் கொண்டிடுவாள்
காதளவோடிய கண்களினால், கலைக்
காட்சியனைத்தையுந் தந்திடுவாள்!

ஊனிலுயிரிலுறைந் திடுவாள், ஒளி
யுள்ளளவு மெனைத் தேற்றிடுவாள்
மானிடம் பெற்ற பெருமையினாளென்
வாழ்வின் முழுப் பொருளாகிடுவாள்
கூனிச்சிறு நடை கொள்ளுகிலேன் எக்
கொள்கையும் லட்சியஞ் செய்யுகிலேன்
மானினிகர்த்த மருளுடையாளவள்
மஞ்சத்துறு சுவை வீறிடவே!

ELECTRIC WELDERS

# STAR GARAGE

நவநாகரீக யன்னல்கள்

மின்சாரத்தால் ஒட்டித் தருபவர்கள்!

சகல உலோகப் பொருட்களாலான


உடைந்துபோன இயந்திர வாகன உறுப்புக்களை

மின்சார சக்தியினால் ஒட்டித் தருபவர்கள்!!

நெல் அவிக்கும்

**இரும்புத் தாங்கிகளை**

ஓடருக்குச் செய்துகொடுப்பவர்கள்.



எம்மிடம்

உடைந்துபோன இயந்திர உறுப்புக்களை

மின்சாரத்தினால் ஒட்டிப்

பணத்தை மிகுதிப்படுத்துங்கள்.

# ஸ்ரார் கராஜ்

(வெலிங்டன் சந்திப்பு)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: கே. டானியல் – சிறில்

[சகோதரர்கள்]

# குறி தவறவில்லை

**கனக. செந்திநாதன்**

விமர்சனத்தின் மூலம் ஈழத்து எழுத்தாளர்களையும் அவர்களது படைப்புக்களையும் வாசகர்கட்கு அடிக்கடி அறிமுகம்செய்து வருபவர் கனக. செந்திநாதன். கவிஞர் "அம்பி" யின் கவிதைகளின் விமர்சனக் கட்டுரை இது.

ஈழத்துப் பேனாமன்னர்கள் என்ற வரிசையை நான் எழுதிக் கொண்டு வருகையில் (1955ல்) ஒரே ஒரு இளஞ்சந்ததி எழுத்தாளரை மற்ற முதியவர்களுடன் சேர்த்திருந்தேன். 39 ஆவது ஆளாக அவரை நான் அறிமுகப்படுத்தியிருந்தேன். தமிழில் விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதுபவர் என்ற சிறப்பு அதற்கொரு காரணம். ஆனால் அந்த ஒரு காரணம் மாத்திரமல்ல. அருமையானசிறுகதைகள்பலவற்றையும்அவர்படைத்திருந்தார். அவர் நடையில் கவிதை மணம் நிரம்பியிருந்தது. எனவே அவர் பாடியன இரண்டொரு கவிதைகளையும் விமர்சித்துவிட்டு இறுதியில் "ஈழகேசரி இலக்கியப் பண்ணையில் பக்குவம் பெற்றுவரும் இளைஞராகிய இவருடைய எதிர்காலம் மிகச் சிறப்பாகஇருக்கும் என்று இப்போதே கூறிவிடலாம்" என்று முடித்திருந்தேன்.

என் குறி தவறவில்லை: இதயம் பூரிப் படைகிறேன். அந்தப் பழைய இளம் எழுத்தாளரும் தற்போது வேகமாக முன்னேறி முன்னணிக் கவிஞராக விளங்கி வருபவரும் யார்? அவர்தான் 'அம்பி' என்ற அம்பிகைபாகன்.

சமீபத்தில் வேலணையில் நடந்த திருவள்ளுவர் விழாக் கவியரங்கத்தில் பிரபல கவிஞர்களாகிய மு. செல்லையா, யாழ்ப்பாணன் மஹாகவி, முருகையன், தில்லைச்சிவன் என்பவர்களோடு 'அம்பி'யும் சேர்க்கப்பட்டிருந்தார். வள்ளுவர் வகுத்த அரசியல் என்ற கடினமான தலைப்பில் அவரைப் பாடும்படி கேட்டிருந்தார்கள். எப்படிமுடியப் போகிறதோ? என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். 'இரந்தும் உயிர் வாழ்தல்' என்ற குறளுக்கு அரிய விரிவுரையை கவிதைக் கனிபிழிந்து கற்கண்டுச் சொல்லாலே அருமையாகப் பாடினார், அவையோர் முகம் மலரகை

தட்டி வரவேற்றனர். ஆம், என் குறிதவறவில்லை. 'அம்பி அம்பியாக இராமல் அண்ணலாக உயர்ந்து விட்டார்.

பாரதிபாட்டின் சாயையிலே பாரதிதாசனின் போக்கினிலே, 'தேவி'யின் அடா, புடாப்பாணியிலே ஐந்தாறு கவிதைகளைப் பாடிப் பத்திரிகைகளிலே வெளியிட்டுவிட்டு 'என்னை மிஞ்சிய கவிஞர்' யார்? என்று மேனி மினுக்கித் திரியும் கவிஞர்களை எனக்குத் தெரியும். அவர்கள் தங்களைப்பற்றி 'நாலு வார்த்தை' விமர்சகர்கள் எழுதவில்லையே என்று குறைபடுவதும் நான் அறியாததல்ல. வளராத முளைக்கு நீரூற்றும் வேலையை விமர்சகர்கள் ஏன் செய்யப் போகிறார்கள்? இதோ! இது வளரும் முளை என்று காட்டுவதும் வளர்ந்து வருவதை அவதானிப்பதும் வளர்ந்து பூத்துக் காய்க்கும்போது நான் வளர்த்த செல்வம் என்று பொங்கிப் பூரிப்பதும் விமர்சகனின் கடமை. அந்தக்கடமையில் 'அம்பி'க்குக் கை கொடுத்து உதவினேன். தன் காலிலே நின்று தளிர் மரமாகிக் குளிர்மை தருகிறார் அவர்.

சென்ற ஆறு ஏழு ஆண்டு கட்கிடையில் அவர் பாடியிருக்கும் ஐம்பது பாட்டுகளை (1) அழகும் காதலும் (2) தமிழுரிமைப்பாடல்கள் (3) கவியரங்கப் பாடல்கள் என மூன்றாக வகுத்துக்கொண்டு ஆராய்ந்தால் அவர் வளர்ந்து வந்த விதம் தெற்றெனப் புலனாகும். தெள்ளுதமிழ்க்காரிகை, நினைவு வாழ்வுத்தேன், அவள், கவியமுதம், தவிப்பு, இதயஊற்று, முழுமதி, சிந்திப்பாயா? மாங்குயிலே கூவு, மனிதப்பண்பு, பாரதி, தேவசுதன், கவிஞன் கனவு, அந்தப் பார்வை, புத்தாண்டு என்ற பதினாறு பாடல்களும் முதலாம் பகுதியில் முதலிடம் பெற்றுத் திகழ்கின்றன.

''கம்பர்முதலான
கவிஞர் திலகங்கள்
அம்புவியில் என்றென்றும்
அழியா துயிர்வாழத்
தேடிவந்த செல்வம் நீ!
தேனூறும் செந்தமிழில்
ஆடிவநது சேர்வாயேல்
அமரகவி யாவேன் நான்.''

என்று கவிதைக் கன்னியை வேண்டி அழைத்துக்கொண்டு கவிஞர் புறப்படுகிறார். அவர் மனதில் தான் 'அமரகவி ஆக வேண்டும் என்ற குறிக்கோள் தான் நிரம்பிவழிகிறது.

இன்னும் இதைச் சற்று அழுத்தமாகக் கூறுவதைப் பாருங்கள்.

''பொங்கும் என் துணர்வைப்
பொதிந்து கவிச் சுவையால்—நான்

சங்கப் புலவர்களைச்
சாகடிக்கும் வேளையிலே
கானக் குயில் போலக்
கனிவாய் இசைபாட – நீ
வானில் குதித்தோடி
வாராய் என் காதலியே.
வாராய் என் காதலியே!
வண்ணப் பசுங்கிளியே
தீராத தாபமதைத் தீர்த்
தமைதி தாராயோ"

புறப்பட்ட கவிஞர் பலப்பல காட்சிகளை எமக்குக் காட்டுகிறார். காதலன் வராத ஏக்கத்தாலே தவியாய்த் தவிக்கும் பெண்ணைத் தாமரையின் ஏக்கத்துக்கு உவமித்திருக்கும் அழகைப்பாருங்கள்.

"தங்கமெனத் தகதகவென்
றொளிரும் பந்தாய்த்
தன்பதி போய்த்
தன்கடலில் தாழ்ந்த பின்பு
பங்கஜப் பெண் பரிதவித்துப்
பாசத்தாலே
பானுவையே
பார்த்திருத்தல் போலப் பாவை
குங்குமப் பூஞ் செவ்விதழ்கள்
சோபை மங்கக்
குளிர் வதனம்
ஒளியிழந்து உலர்ந்திருக்க
அங்கமெலாம் அழகிழந்து
அயர்ந்து நின்று
அவன் வரவைப்
பார்த்திருந்து தவி தவித்தாள்

ஏக்கத்தோடு அமர்ந்துதவிக்கும் பெண்ணைக் காட்டிய கவிஞர் மேலே - ஆகாயத்தில் தண்ணிலவுபொழியும் வண்ண முழுமதியைப் பக்கத்தில் வைத்துக் காட்டுகிறார். அதில் கூட அவர் ஒரு புதிய எண்ணத்தை நமக்கு எழுப்புகிறார். சந்திரனில் தெரியும்கறை ஔவைக் கிழவி எனவும், சந்திரன் சிவபிரான் தலையில் அழகுற அமர்ந்திருக்கின்றனென்றும் குழந்தைகளுக்கு நாம் சொல்கிறோமல்லவா? ஆகவே அவற்றை வைத்துக்கொண்டு கற்பனை செய்கிறார் கவிஞர். குழந்தைப்பாடல்களில் அருமையாக உள்ள இப்பாடல் சிறுவர்களுக்கு மிகவும் ஏற்றது "வானப் பெருங்கடலின் வளரும் வண்ணமுழுமதியே; தேனில் விழுந்தனையோ! தமிழின் செல்வம் நிறைந்தனையோ" என்று தொடங்கும் இக்கவிதையில் தான் ஒளவையும், பரமனும் வருகிறார்கள்,

தெய்வத் தமிழ் தெளியும் - இனிய
தென்றல் நிலவு பெற
ஒளவைக் கிழவியை நீ - சுமந்து
ஆசி பெற்றுள்ளனையோ?
சொட்டும் அழகு பெறச் – சொரியும்
சோதி நிறைவு பெறப்
பட்டு நிலவு பெறப் – பரமன்
பாதந் தொழுதனையோ?

தவிப்பையும் முழுமதி அழகையும் பார்த்து விட்டோம். இனிச் சிந்திக்கத் தூண்டுகிறார் கவிஞர் "மாடு போல் செல்லுகின்ற மனிதனை"ப் பார்த்துச் சிந்திக்கச் சொல்லுகிறார். எவற்றை

யென்றால் சாதிப் பாகுபாடு, சமூகப் பிளவு இவற்றைப்பற்றித்தான் .பஞ்சம் பசிபட்டினியைப் பற்றித்தான்.

கஞ்சியு மின்றி உண்ணக்
கவளமுமின்றி நித்தம்
பஞ்சமும் பசியுமேயிப்
பாரினிற் கண்டாராகிக்
கெஞ்சியும் இரந்தும் நின்று
கேவல நிலேயில் வாழ்வோர்
சஞ்சலந் தீர்த்து வைக்கச்
சற்று நீ சிந்தித்தாயா?

இந்தச் சிந்தனை தமிழ் மறையாகிய திருக்குறள் வழியாகச் செல்லவேண்டும் என்று வற்புறுத்தும் கவிஞர் முடிக்கும் போது "அகத்திருள் அகலும்! உந்தன் அல்லல்கள் அகன்று போகும்; பகுத்தறி வாளனுவாய்! பண்புள்ளமனிதனுவாய்" என்று சபாஷ் பெறும்படி முடிக்கிருர். முற்போக்கர்களுக்கெல்லாம் முற்போக்காய் அடிஎடுத்து வைக்கிருர். ஆனுல் இவர் இங்குள்ள முற்போக்குப் பேசுவோரால் வகுப்புவாதக் கட்சி என்று பேசப்படும் தமிழரசுக்கவிஞர் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

கவிஞருக்குப் புதுமைக் கவி பாரதியின் மேலுள்ள பறறு அலாதியானது. பாரதியாரைப் பற்றி பலபாடல்களை அவர் பாடியுள்ளார். அழகான பாடல்கள் அவை.

பாரதி வகுத்த பாதையிலே ஒரு கவிதையைப் பாருங்கள்:.

"உள்ளமதில் ஊறுகிற
தமிழ்த் துளியை
உலகத்தோர் வாழ்நாளெல்லாம்
அள்ளிநித மருந்தி மன நிறைவெய்த
அமுதகவி தந்தான்! ஆங்கு
தெள்ளுதமிழ்ச் சுவை சிந்தும்!
தேன்சிந்தும்!
சிலேகளுமே உணர்வு எய்தும்
வள்ளுவனும் இளங்கோவும்
வளர்ந்து தினம்
வாழ்வதுபோல் வாழ்கின்ருனே"

சிந்திக்காத மனிதனேயும் சிந்திக்கச்செய்து சிந்தித்துத்தெளிந்த கவிஞர் பாரதியையும் காட்டி விட்டு ஆசிரியர் மகா சக்தி என்ற தெய்வப் பெரும் பாடலே நமக்குத் தருகிருர். தமிழிலே விஞ்ஞானம் எழுதிய ஆசிரியரா இக்கவிஞர் என்று நம்பமுடியாமல் இருக்கிறது. ஆம் அவரது நல்ல - சிறந்த - மிகச் சிறந்த பாடல்களுள் இது ஒன்று என்று கூறலாம்.

"தாழ்வு மனச் சுமைச்
சஞ்சலத்தில் – சக்தி
தாங்கு மனப்பலம்
நல்கி நிற்பாள்
வாழ்வுப் பொருள் விளங்காது
நிற்பின் - அவள்
வண்ணப் பொருள்மிகச்
சொல்லி நிற்பாள்
பூதங்கள் ஐந்திலும்
பூத்து நிற்பாள் – சக்தி
புன்மை யழித் துளங்
காத்து நிற்பாள்

நாதங்க ணீரென
மீட்டு நெஞ்சில் – அவள்
நல்ல பணிக் கருச்
சேர்த்து நிற்பாள்.

அம்பி அவர்களது கவிதை தஎல்லாவற்றிலும் உள்ள 'தெளிவு' என்னை மிகவும் கவர்ந்திருக்கிறது. எந்தக் கவிதையிலும் ஓசை நயம் குறையவில்லை 'அசை'ப்பிழையில்லை. எண்ண உயர்வும் சொற்களின் செழுமையும் உண்டு. பலவகையான கவிதைகள் ஆனபடியால் வாசிப்போருக்கு சோர்வுண்டாக மாட்டாது.

ஆக ஒரே ஒரு குறை. ஆழம் இல்லை என்று விமர்சகர்கள் கருதலாம். ஆனுல் அவரது தமிழுரிமைப் பாடல்களையும், கவியரங்கப் பாடல்களையும் நான் தொட்டுக் கூடக் காட்டவில்லை. அவற்றில் அவரது உணர்ச்சி கொப்புளிக்கிறது. ஆழம் தாராளமாக உண்டு. அவற்றை இன்னொரு முறைக்கு வைத்துக் கொள்ளலாம்.

நான் காட்டிய ஒன்பது பாடல்கள் ஒருதுளி. அவற்றை நன்ருக உணரவேண்டுமாயின் 'அம்பி பாடல்கள்' அச்சில் நூலாக வரல்வேண்டும். அது என் ஆசை. அப்போதுதான் என்குறி தவறவில்லை என்பதை நீங்களும் நிச்சயம் உணர்வீர்கள்.

**கலைச்செல்வி**
சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா ரூபா 4.
தனிப்பிரதி சதம் 30
விபரங்களுக்கு :
பாலன் வெளியீட்டு நிலையம்
செட்டிகுளம்.

ஆனுல் அவர் கேட்பது வேறு. "அருமையாகத் தமிழில் விஞ்ஞான பாடங்களை எழுதியுள்ளேன். அதுதான் தற்காலத் தமிழ்ச்சமுகத்துக்குத் தேவை என்று". உண்மை. அதைவிடத் தமிழில் விஞ்ஞானத்தை வளர்க்க உதவியவர்களைப்பற்றி - முக்கியமாக மிஷனரிமார் செய்த விஞ்ஞானத் தொண்டைப்பற்றி-அதிலும் கிறீன் பாதிரியார்செய்த தமிழ் விஞ்ஞானத் தொண்டைப்பற்றி அவர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிவைத்திருக்கிருர். அதன கதி என்ன? சிறுகதையும் கவிதையும், நாடகமும், நாவலுந்தான் தமிழ்த்தொண்டா? இதையாவது வெளியிடவேண்டாமா? தமிழ் எழுத்தாளர் சங்கங்களும், இலக்கியப் பெருமன்றங்களும சிந்திக்கவேண்டும்.

# நம்பிக்கை

லதிகா

சாட்டிமாதாகோயில் மணி அடிக்கிறது. அலையோசையுடன் கலந்து வரும் அந்த மணி ஓசை அவள் காதுகளில் இனி என்றுமே ஒலிக்காது. ஆனல் அவள் இதயத்தில் அது சதா ஒலித்துக்கொண்டேதான் இருக்கும். இருபத்தைந்து வருடங்களாகப் பழக்கப்பட்டுவிட்ட ஊரையும், பழகிவிட்ட மனிதர்களையும் விட்டுப் பிரியவேண்டிய நிலையில் அவள் உள்ளம் வேதனையில் துடித்துக்கொண்டிருந்தது. அந்த வேதனை மூழ்கி அழுதபோது இருண்டுகிடந்து ஆதரவு தந்தது இந்த அறைதான.

அந்தச் சுவர்களைத்தான் எத்தனை ஆசையுடன் அலங்கரித்து மகிழ்ந்திருப்பாள். அந்தக் கூரையிலிருக்கின்ற ஓடுகளை எத்தனை நாட்கள் எண்ணி இருப்பாள்; அவற்றில் பொறித்திருக்கும் எழுத்துக்களை எத்தனை முறைகள்தான் படித்திருப்பாள். அதோ தெரிகிறதே வேம்பு, அந்தத் தென்னை, அந்த மா, அந்த

---

இம்மலரில் ஒரு புதிய பெண் எழுத்தாளரின் கதையை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்ருேம். அறிமுகத்தை விரும்பாத 'லதிகா' யாழ்ப்பாணத்துப் பிரபல கல்லூரி ஒன்றில் ஆசிரியையாக இருக்கின்ருர். B. A. பட்டதாரி. மனதைக் கவரும் வசனங்கள் இக்கதையின் தனிச்சிறப்பு. "நம்பிக்கை"— நம்பிக்கையைத் தருகிறது

---

துன்ப அலையாகப் பொங்கிப் பெருமூச்சாக வெளியேறியது.

பதிந்துவிட்ட பாதங்களைப் பெயர்த்து எடுத்துவைக்க முடியாமல், முயலாமல் நின்றுகொண்டிருந்தாள் அவள். நிலைத்துவிட்டிருந்த பார்வையில் ஏக்கம் தேங்கிநின்றது. அதோ அந்தச்சுவர், அந்தக்கதவு, இந்த ஜன்னல், இந்த நிலம் எல்லாமே அவள்தான். அவளின் ஒருபகுதிதான். கால் நூற்ருண்டு காலமாக அவையோடு வாழ்ந்துவிட்டவள் அவள். அவள் இதயத்தோடு உறவாடி, அவள் சிரித்தபோது ஒளியில் எலுமிச்சை அவையெல்லாம் இனி அவளுக்காகப் பூக்கமாட்டா, காய்க்கமாட்டா. இன்று கண்முன்னே காய்த்துக் குலுங்கிக்கொண்டிருக்கும் இவை நினைவாகி அவள் மனத்திடலில் நின்றுதான் பூக்கவேண்டும்; காய்க்கவேண்டும்.

நினைவுகளால் நிறைந்து கிடக்கும் அந்த அறையைவிட்டு அகலவே முடியவில்லை அவளால். அந்த வீட்டோடு, அந்தச் சுவர்களோடு ஒன்றிவிட்ட நினைவுகள் அவை. பிரிந்துபோய்விட்ட தந்தையைப்பற்றிய நினைவுகள்; மறைந்துபோய்

விட்ட வருடங்களைப்பற்றிய நினைவு கள். பிரித்துவிட முடியாத நினைவு கள் பிரிந்துபோகவிடாத நினைவுகள்.

'மீனு'.

அவள் பெயரை, தாயின் குரலைக் கடைசிமுறையாக அந்தச் சுவர்கள் எதிரொலித்தன. மீனுவின் கண்கள் அந்த அறையின் ஒவ்வொரு மூலையையும் ஆரத்தழுவி அணைத்தன. இரண்டு பெரிய கண்ணீர்த் துளிகள் அவள் இமைகளுக்கிடையே திரண்டு உருண்டு நிலத்தில் விழுந்தன.

நிலைத்துவிட்ட பாதங்களைப் பெயர்த்தெடுத்துக்கொண்டு வெளியே ஓடினாள் மீனு.

விட்டுப்பிரிந்து போகவேண்டிய அந்த வீட்டையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த தெய்வானை மகளின் காலடி ஓசைகேட்டு அப்பால் நகர்ந்தாள். இந்தவீடு அவளது உயிர். அதைவிட்டுப் பிரிவது உயிரையே விட்டுப்பிரிவது போலிருந்தது. நினைக்காதவை நடப்பதே நியதியாகிவிட்ட வாழ்வில் நினைத்ததையெல்லாம் அடைந்து இன்பமாக வாழ்ந்தவள் தெய்வானை. அருளம்பலத்தை மணந்த அவள் உண்மையிலேயே பாக்கியசாலிதான். மனதிற்குப் பிடித்த கணவனோடு மனம் நிறைந்த வாழ்வு. அவர்களின் அன்பு வாழ்வின் சின்னம் அந்த வீடு, அன்பே பிரதானமாக, அன்பிலே ஒருவர் குறையை ஒருவர் மறந்து நிறைவுகண்டு வந்த இரு உள்ளங்களின் உழைப்பிலே உருவானது அது. மறைந்துபோய் விட்ட அந்த நல்லவரின் நினைவை, அவர்களது இன்பவாழ்வின் நிழலை அந்தவீட்டின் ஒவ்வொரு மூலையிலும் கண்டுவந்தாள் தெய்வானை. இருபத்தைந்துவருட அன்புவாழ்வின் இன்ப நினைவுகளையும் மூன்றுவருடத் தனிவாழ்வின் துன்ப நினைவுகளையும் நிறைத்து நிறைத்து வைத்திருந்தது அந்தவீடு, அதைவிட்டுப் பிரிந்து போகவேண்டி வந்துவிட்ட வேதனையை என்னவென்பது.

ஆனால் தெய்வானைக்கு வீடு பெரிதல்ல. அவளது அன்புமகள் மீனுவின் வாழ்வுதான் பெரிது. அந்த மகளின் வாழ்வுக்காக, அவள் வாழவேண்டுமே என்ற ஆசையில் அந்த வீட்டையே இருபது ஆயிரம் ரூபாய்களுக்கு விற்றுவிட்டாள். இனி என்ன எல்லாமே முடிந்தமாதிரித்தான். 'சீதனத்தைக் காசாய் எண்ணிவைச்சா நாளைக்கே கலியாணம்' என்றாரே தரகர் சுப்பையா. தெய்வானையின் முகத்தில் புன்சிரிப்பு அரும்புகட்டியது. மகளின் மணக்கோலத்தை மனக்கண்ணில் கண்டுவிட்டதால் ஏற்பட்ட நிறைவோ அது! அவள்மனம் சாட்டி மாதாவை வேண்டுக்கொண்டது.

கொழும்புத்துறை வீதியில் தபால்கந்தோருக்கு வடக்கேயிருந்த அந்தப் புறுக்கூட்டில் இருந்து புழுங்கிக் கொண்டிருந்தாள் மீனு. அதை வீடு என்று கொள்வதற்கே மனம் ஒப்பவில்லை. மாதம் எண்பது ரூபாவை வாடகை என்ற பெயரில் விழுங்கிக்கொண்டிருக்கும் கூடுதான் அது. பரந்த வெளியில் நிமிர்ந்துநின்ற அந்த முந்தியவீடு, அவள் சொந்த வீடு.. அதெங்கே, வீதியை நெருக்கி

பாலக்காடு

# ஆர்.வி.ஜி. பீடிகள்

# ආර්.වී.ජී. බීඩි

பீடிகளில் மிகச்சிறந்த

# R. V. G.

## பீடிகளையே உபயோகியுங்கள்.

இலங்கை மக்களின் உள்ளத்தில்
என்றும் அழியாப்புகழை ஈட்டியிருப்பது
எமது
**பாலக்காடு R. V. G. பீடிகள்**

தொழிலாளியின்
வாழ்க்கை ஏட்டிலே என்னுளும் இடம்பெற்று விளங்குவது
எமது
பாலக்காடு R. V G. பீடிகளே.

குணத்திலும் மணத்திலும் தரத்திலும் சிறந்த
பாலக்காடு R. V. G. பீடிகள்
எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள் :

## ஆர். வி. ஜி. பீடி கம்பெனி

34, மானிப்பாய் ரோட்,
யாழ்ப்பாணம்.

ஒடுங்கி நிற்கும் இந்தக் கூடெங்கே! ஆசைக்கு ஒரு மரத்தைவைத்து வளர்க்க ஒரு அடி நிலம் இல்லை. மென்காற்றில் அசைந்தாட ஒரு இலை இல்லை. ஜன்னலூடே எட்டிப்பார்த்து சிரிக்க ஒரு பூவில்லை. மூச்சுவிடக் கூட இடம் இல்லையே.

''அம்மா நாம அந்த வீட்டை வித்திருக்கவே கூடாதம்மா" அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்த தெய்வானை நிமிர்ந்தாள்.

''அப்படிச் சொல்லாதே மீனு, நீ வாழாம இருக்க, அந்த வீட்டை வைச்சுக்கொண்டு நான் என்ன செய்யுறது?''

''ஏம்மா அப்பிடியெண்டா இவ்வளவு நாளும் நான் வாழவில்லையோ? செத்தா போயிருந்தேன்?"

''அவச்சொல் சொல்லுறதைப் பார், கழுதை. அதுசரி, உனக்கு அந்தப் பொடியனைப் புடிச்சிருக்கோ?

''எந்தப் பொடியனைச் சொல்லுறீங்க? நம்ம பக்கத்து வீட்டு சேகரையா? பெரிய மனுசன் மாதிரிக் கதையெல்லாம் சொல்லுகிறானே அவன்!''

''சும்மா கணக்கு விடாதே, அண்டைக்கு உன்னைப் பார்க்க வந்துதே சுப்பையாவோட அதைப்பற்றித்தான் கேக்கிறன்."

''ஓ! அதுவா. சும்மா போங்கம்மா, உங்களுக்கு வேற வேலையே இல்லை"

''சரியடி அம்மா, நான்போறன் உலை கொதிச்சிடும்''.

மீனு தனக்குள் சிரித்துக் கொண்டாள். உதட்டில் மென் நகை நெளிந்தது. மனத்துள் பொன் வண்டு பாடியது. மனக் கண் முன் அவனது சிரித்த முகம் வந்து நின்றது.

அவள் நெஞ்சக் கேணியில் நினைவுமலர் ஒன்று மலர்ந்த அந்த நாளை அவளால் என்றுமே மறக்க முடியாது. அவள் மனதில் புது நினைவுகள் பிறந்த நாள் அது. அன்றுதான் அவள் அவனை, அவளது வருங்காலக் கணவனை' அவளுக்கு 'வாழ்வு தரப்போகிறவனை' முதன் முதலில் கண்டாள். அவன் குரலை முதன் முதலாகக் கேட்டாள். அந்தக் குரல் நினைவிருப்பது போல் அவன் முகம்கூட அவளுக்கு நினைவில்லை அந்த முகத்தை நிமிர்ந்து பார்க்கவே அவளுக்குத் துணிவில்லை. ஆனால் அந்தக் கைகளை மட்டும் நன்றாகப் பார்த்தாள், அவற்றுக்கு கண் இல்லையல்லவா?

அவன் வந்தபோது தானாகவே வந்தான், தனியாகவே வந்தான், அவளைப்பார்த்துச் சிரித்தான், பெயரைச் சொல்லி அழைத்தான், பேசினான். என்ன பேசினானே அவளுக்கென்ன தெரியும், அவள் அவளாகவா இருந்தாள்? ஆசை, அவசரம் பயம், படபடப்பு, நடுக்கம் தடுமாற்றம் இவையல்லவா அவளாக உருவெடுத்திருந்தன!

வவுனியாவில் ''கலைச்செல்வி'' கிடைக்குமிடம்

ஸ்ரீ
சுத்தானந்த பவான்
வவுனியா

கண்ணகி புத்தகசாலை
வவுனியா

அவன் சென்றபோது அவள் மனதில் அவன் உருவம் குடிபுகுந்தது.

அவள் மனதில் அவன் புது வித்தாக விழுந்தான், நினைவாக முளைத்தான், கனவாக அரும்பினான் ஆசையாக மலர்ந்தான், அவள்மன திலிருந்து மணம் வீசிக்கொண்டே இருந்தான்,

ஆனாலும் அவள் மனதில் ஒரு உறுத்தல் வண்டாகக் குடைந்து கொண்டிருந்தது, எப்படி முயன்றும் அதை அகற்றிவிட முடியவில்லை,

அவளுக்குத் தெரியும், அந்த இருபது ஆயிரம் ரூபாவும் இல்லை யென்றால் அவன் அவளை மணந்து கொள்ளச் சம்மதிக்க மாட்டானென்பது, அந்த நினைப்புத்தான் கசப்பாக இருந்தது. அந்த ஏமாற்றத்தைத் தான் அவளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அந்த நினைவுதான் வேதனை தந்தது,

கடல்நிறைய நீரிருந்தாலும் வானம்பாடியின் தாகம் அடங்குவதற்குப் பனித்துளிதானே வேண்டி இருக்கிறது. அத்தகையதுதான் பெண் மனத்தின் தாகமும். அது அடங்கு வதற்கு ஒருசொட்டுத் தூய பனித் துளி, அன்புத்துளி. அதுதான வேண்டுமே தவிர ஆயிரமாயிரமாக வரும் பணமல்ல.

அமெரிக்க நாவலாசிரியர் ஸ்டீன் பெக் எழுதிய நாவல் ஒன்றில் கருத்தைப் பறிகொடுத்திருந்த மீனு நிமிர்ந்தாள், தன் தாய் அத்தனை அவசரப்பட்டு அவள் கண்டதே யில்லை.

''மீனு கேட்டியோ இந்த அநியாயத்தை?"

''என்னம்மா இப்படி அவசரப் படுறீங்க, ரஷ்யா அமெரிக்காமீது குண்டு போட்டுட்டுதா என்ன?"

''அமெரிக்கா போட்டான்ன, ரஷ்யா போட்டான்ன. நான் ஏன் அதுக்கு இப்பிடி அலசரப்படப் போறன், இப்ப அந்தச் சுப்பையா போட்டுட்டுப்போற குண்டுதான் பெரிய குண்டாயிருக்கு."

''என்னவாம், விஷயத்தைச் சொன்னாலல்லோ விளங்கும்.'' விஷமும் விளங்கிறதும்தான். இந்த நாசமாப்போனவங்க இப்பிடிச் செய்வாங்கள் எண்டு யாரு நினைச்சது? அந்தப் பொடியனுக்கல்லே வேற இடத்திலை கலியாணம் நிச்சயமாப் போச்சாம் கொக்குவில்லையாம். நாளைக்கு எழுத்தாம். சுப்பையர் சொல்லுறார். அவை ஐம்பதாயிரம் சீதனம் குடுத்தினையாம் பொம்பிளை படிக்கேல்லியாம் சீதனத்துக்காகத்தான் செய்யினமாம். அப்பப் பாத்தியா இந்த உலகத்திலை மனுசர் இருக்கிற மாதிரியை,''

''ஆருக்கம்மா, சிவகுமாருக்கோ?"

''சிவகுமாரோ என்ன குமாரோ, அவனுக்குத்தான் இப்பிடிப்பட்டவன் ஏன் இஞ்ச வந்து உன்னைப் பார்த்தானோ தெரியாது. உலகத்திலை ஆரத்தான் நம்புறது'' தெய்வானையின் குரலில் அழுகை தேங்கியது. ஆற்றாமை மிதந்தது.

''போனாப் போகட்டும் அம்மா நீங்க துக்கப்படாதீங்க இவையை நம்பித் தானா நாம வாழுறம்.''

''அது சரி நாம நினைச்சாப் போலை என்ன, விதி எங்கை எங்கை இருக்கோ. அப்பிடித்தானே நடக்கும்.

நாம அவசரப் பட்டாப்போல என்ன? கடவுள் விட்ட வழிதான்."

கடவுள் மீது பாரத்தைப்போட்டு அமைதி கண்டது அந்தத் தாயுள்ளம். மீனுவின் உள்ளத்திலிருந்து அமைதி விடைபெற்றது. ஏமாற்றம் தந்த இதயத்து எரிவில் கண்ணீர் சிந்தியது அந்த இளம் உள்ளம். அவள் இதழ் கோடியில் ஒரு வரட்டுப் புன்னகை அரும்பி மலராமலே உதிர்ந்தது.

காலத்தோடு மாருத நினைவை அவள் மனதில் விதைத்தவன் கேவலம் காசுக்காக இன்று அவற்றைக் கலைத்துவிட்ட கொடுமையை என்னவென்பது. முன்பு என்றுமே மலராத புதுமலர்களை மனதில் பூக்கவைத்தவன் அவற்றை மிதித்துக் கசக்கி எறிந்துவிட்டானே. அந்த ஈரமற்ற நெஞ்சை எதற்கொப்பிடுவது? அந்த இளம் உள்ளத்தில் ஆசையை வளர்த்து நம்பிக்கையை ஊட்டிப் பின் அவற்றைப் பறித்துக் கொண்டதைப் பற்றி அவனுக்கு அக்கறையே இல்லை. அவள் வேதனை அவனுக்கு ஒரு பொருட்டாகவே இல்லை. அவனோ இளைஞன், படித்தவன் படிப்பு — என்ன படிப்போ அது, பணக்காரன், அத்தோடு அழகனும் கூட. நல்லவன் என்ற முத்திரை வேறு. எத்தனையோ பெண்கள் அவனை விலைபேசக் காத்து நிற்பர். அந்த வெள்ளத்தில் இவள் மனமும் ஒரு சிறுதுளி. இவள் நினைவு ஒரு சிறு குமிழி. அது வேதனைப்படுவதையோ வெந்து போவதையோ பற்றிச் சிந்திக்க அவனுக்குப் பொறுமையில்லை. ஏன் தேவையுமில்லை.

அவனைப் பொறுத்த மட்டில் வாழ்வு ஒரு பணவேட்டை. காற்று வீசிக் கொண்டிருக்கும்போதே தூற்றிக் கொள்ள வேண்டியதின் அவசியத்தை உணர்ந்தவன் அவன்.

மீனு அன்பு மழையிலே நனைந்து வளர்ந்தபயிர். அவள் மீது உயிரையே வைத்திருந்த தாயும் தந்தையும் அவள் பிரிந்து வந்தாளே அந்த வீடு—அதுவும்தான் அவள் உலகம். அந்த அன்பு உலகிலே ஏமாற்று இல்லை, போலி இல்லை, சுயநலம் இல்லை. அவள் எதிர்நோக்கிப் போகப்போகும் வாழ்விருக்கிறதே அங்கு பணத்தைத் தவிர வேறெதுவுமேயில்லை. இந்த ஏமாற்றத்தைத் தாங்குகின்ற சக்தி அன்பு மழையிலே வளர்ந்த அவள் உள்ளப் பயிருக்கு இல்லை.

இனி வாழ்வு ஏமாற்றந்தானா?

இந்த நிலையை ஏற்க அவள் மனம் மறுத்தது.

'உனக்கும் வாழ்வு உண்டு உன் பணத்துக்காக அல்ல, உன் அழகுக்காக அல்ல, உன்னை உனக்காக தனக்காக விரும்பி உன்னை மணம் செய்ய இருப்பவன் ஏற்கனவே பிறந்து எங்கேயோ வாழ்கின்ருன்.'

மீனுவின் அடி மனத்தின் ஓர் மூலையில் இந்த நம்பிக்கைத் துளி ஜொலித்தது.

அவள் கைகள் மீண்டும் நாவலைப் புரட்டத் தொடங்கின.

# பொத்தல்

--- இராஜநாயகன் ---

வாளித் தண்ணீருள் அமிழ்ந்து, 'க்ளுக் ளுக் ளுக்க்ளுக்" என்று அதிதுரித காலத்தில், சின்னஞ்சிறுசிறு குமிழிகள் ஆயிரமாயிரத்தைச் சிருஷ்டித்துக்கொண்டிருந்தது சைக்கிள் ரீயூப்.

ஒன்று, — இரண்டு, — மூன்று நா ......

அதற்கு மேல் எண்ண, அவனிடம் மூச்சில்லை. அந்த ரீயூப்பைப் போலவே, அவனிலும் பொத்தல்கள் அநேகம்.

அதைக் கையிலே தூக்கி, பொத்தல் கண்ட இடமொன்றைத் துடைத்து, பழைய 'பிளேட்' ஒன்றினால் 'க்ஷவர'ஞ் செய்ய ஆரம்பித்தான். அழுக்கேறிக் கிடந்த ரீயூப்பிலே, பிளேட்பட்ட அந்த இடம் சிவப்பாகி மினுமினுத்து—

உள்ளே, உள்ளத்தினுள்ளே, காதலாய், பாசமாய், பூசலாய், நமைச்சலாய் நின்ற பாசி, புழுதி, என்ற அழுக்குகள் படிந்துஞ் சிந்தனைக்குமிழ் விட்ட பொத்தல் ஒன்று, ஏனோ மெது மெதுவாய் மினுமினுத்து மேலெழுந்து, —

"சீ, நாய்களோடு நாயாகப் போட்டியிட்டுக்கொண்டு – அதை எறிந்துவிடு".

ஏக்கமும் ஏமாற்றமும் இரும்புக் கைகளாய், எதிர்பார்ப்பின் குரல்வளையிற் பிடிக்க, சிறுவன் திணறிப் போனான். கையிலெடுத்த இலை அவனறியாமலே நிலத்துக்கு நழுவியது. அதை இழுத்துப் பிய்த்துக்கொண்டு இரண்டு நாய்கள் எதிர்த் திசையில் ஓடின.

சிறுவனை அதட்டிய மனிதர் அவனை நோக்கிவந்தார். கிலி பிடரியிலே பிடித்துத்தள்ள, சிறுவன் இருளை நோக்கி ஓட ஆரம்பித்தான். பெரிய



அழகு தவழும் சிறிய சொற்கள்; கனிவு சிந்தும் தமிழ் நடை; மென்மையான உணர்ச்சிகள் நிறைந்த கதைக்கரு— இவற்றுடன் கூடிய கதைகளைப் படைக்கும் இராஜநாயகன் பரமேஸ்வரக் கல்லூரியில் ஆசிரியராக இருக்கின்றார். 'ரியூப்' ஓடடும் தொழிலாளியின் மனத்தில் ஏற்பட்ட பிளவைக்கூறும் இக்கதையில் ஆசிரியரின் தனித்துவமுத்திரை பதிந்திருக்கிறது.

வரின் நடை ஓட்டமாகி விட, சிறுவ னின் வேகமும் அதிகரித்தது.

பெரியவர் கூவினர். 'தம்பீ ! நில்'.

தம்பி நின்ருல்தானே ! அவன், பின்னும் வேகமாக ஓட ஆரம்பித் தான்

இரைக்க இரைக்க அவர் கத்தி ஞர். "நான் உன்னை ஒன்றும் செய் து விட மாட்டேன். நில். உனக்குச் சாப்பாடு தருகிறேன்.

ஆவல் அவன் தலையைக் கௌவி இழுத்துப் பின் புறம் திருப்பிற்று. ஆயினும், அவன் கால்கள் ஓடுவ தை நிறுத்தவில்லை.

பெரியவரின் கைகள் ஆதரவு காட்டி, அவனைத் தன்னிடம் அழைத் தன.

'நிற்போமா?'

சிறுவனை, ஒரு தீர்மானத்துக்கு வரவிடாமல், வழியில் கிடந்த கல் லொன்று அஷ்டாங்க நமஸ்காரமிடச் செய்தது.

"ஐய்..."

அந்த மெல்லிய நிலவிலும், சிறுவனின் துடிதுடிப்புப் பெரியவ ரின் கண்களைக் காரை முள்ளாய்த் தைத்தது. அவன் முனகல், அவருள் ளே அக்கினியாய் இறங்கிற்று.

'அவன் இப்படித் துடிப்பதற்கு நான் தான் காரணமோ?"

அவர் மனசு கரைகிறது.

ஓடிச்சென்று அவனை மெதுவா கத் தூக்கி அணைத்துக் கொள்ளு கிருர்.

பத்துவயது. அகன்ற நெற்றியின் திகழ்ச்சியிலே கன்னங்களில் விழுந்த குழி அதிகமாகத் தோன்றுகிறது. எண்ணெய் காணுச் சுருள் காடாய்க் கிடக்கிறது கேசம்.

அடுத்தவீட்டுப் பையனை, இன்று தான், கண்ணாலும், மனத்தாலும் பார்க்கிருர் பெரியவர்.

"அம்மா"

"தம்பி!"... கருணையின் பந்துக் களான உணர்ச்சிகள் எல்லாவற்றை யும் ஒன்றுசேர்த்து, உருக்கி, வார்த் தையாய் வடிக்கிருர் பெரியவர்.

அவனுக்கு அது கேட்கவில்லை. காயமில்லாவிட்டாலும், அதிர்ச்சியும் நோக்காடும் (பட்டினியுமா?) அவன் ஸ்மரணையைப் பறித்து விட்டன.

விழித்துப் பார்த்தபோது, பெரி யவர் அவனது பாயின் முன்னல் உட்கார்ந்திருக்கிருர். அம்மா கொஞ் சம் தள்ளி, அவனையே பார்த்துக் கொண்டிருக்கிருள்.

பெரியவர் குவளையில் பாலை வார்த்து (பால் ஏது?) அவனுக்குப் புகட்டுகிருர்.

அவனுக்குத் தெம்பு வருகிறது.

"அம்மா"

படுத்திருந்தபடியே அவன் தலை யைச் சரித்துத் தன் தாயைப் பார்க் கிருன்.

கிட்டவந்து, கண்பனித்துக் கரைந்து, அவன் தலையைத் தடவு கிறது தாய்மை,

"ராசா என்னடா செய்கிறது?" பெரியவர் பெருமூச்சுக்களை உதிர்த்துக் கொண்டே வெளியேறி ஞர்.

மறுநாள் காலை, தாயும் மகனும் மௌனமாகப் பெரியவரைப் பின் தொடர்ந்து, பெரியவர் வீட்டுக்குப் போகிருர்கள்.

## உங்களுக்கு மட்டும்!

ஈழத்தில் நல்ல தமிழ் மாத இதழ் வெளிவர வேண்டும் என விரும்பும்

**நீங்கள்**

சென்ற நான்கு ஆண்டுகளாக இலக்கியப் பண்புடன் "கலைச்செல்வி" வெளிவருவதை யறிந்த

**நீங்கள்**

இலங்கை எழுத்தாளர்களின் திறமையை எட்டுத்திக்கும் எட்டவைக்கும் "கலைச் செல்வி"யின் சேவையைப் பாராட்டும்

**நீங்கள்**

எக்காரணத்தைக் கொண்டும் இடையிலே நிறுத்தாதீர்கள், தொடர்ந்து "கலைச் செல்வி"யை வெளியிடுங்கள் என அடிக்கடி வேண்டுகோள் விடுக்கும்

**நீங்கள்**

தயவுசெய்து

**உங்கள் சந்தாப்பணத்தை**

உடனே அனுப்புவீர்களா?

உங்கள் நண்பர்களையும்

சந்தாதாரராகச் சேர்த்துதவுவீர்களா?

ஆண்டுச் சந்தா: ரூபா 4 மட்டும்.

அனுப்பவேண்டிய முகவரி:-

**நிர்வாகி**

**கலைச்செல்வி**

**பாலன் வெளியீட்டு நிலையம்**

செட்டிகுளம் P. O.,

இலங்கை.

'ஏன் போகிறேம்? நான் நித்திரையாய் இருந்தபோது (மயக்கமாகவும் கிடந்தேனு?) அம்மாவும் பெரியவரும் ஏதாவது பேசிக்கொண்டார்களோ? எப்படியிருந்தாலும், என்னை நாயாக்கி விடுகிற —சீ! இனி உயிர் போகட்டும், நான் நாயாகமாட்டேன்.

பெருமூச்சொன்றேடு நடராஜன் நனவு நிலைக்கு மீளுகிறுன். கையிலிருந்து, நழுவிவிட்ட பிளேட்டை எடுத்து, மறுபடியும் ரியூப்பில் கவனஞ் செலுத்த ஆரம்பித்தான். முதல் பொத்தலை ஒட்டிவிட்டு, மறுபடியும் காற்றடித்து, வாளித்தண்ணீருள் ரியூப்பை அமுக்கினுன். அடுத்த பொத்தலை அடையாளமாய்ப் பிடித்து—

மனப் பொத்தல் சிந்தனைக் குமிழி விட ஆரம்பித்து விட்டது.

## 2

பெரியதம்பிப்பிள்ளையின் வீட்டில் கலகலப்பு ஏறிவிட்டது. நடராஜனும் தாயாரும் வந்து போகத் தொடங்கிய கால்ராசியோ என்னவோ, வீட்டைத் தேடிச் செல்வம் வந்து குவிந்தது. தாயை இழந்து புழுங்கிய பராசக்திக்கும், கல்யாணிக்கும் இவர்களின் வருகை இதஞ் செய்தது.

'நிலம் பிளக்கிறது; அந்தப் பிளவினுள்ளே நான் பலவந்தமாக இறக்கப் படுகிறேன். பயங்கரத்தை நோக்கி" என்ற உணர்வில் மரத்துக் கிடந்த பெரியதம்பிப்பிள்ளை கூட தம் மனைவியின் மறைவையே நாளடைவில் மறந்து விட்டார்,



குழந்தைகள் படிக்கிருர்கள், வளருகிருர்கள், நடராஜனின் தாயாரின் தாய்மை நிழலிலே "மானிடம்" பெறுகிருர்கள்,

"அத்தை, நான் பாஸாகி விட்டேன்."

"அத்தை, நானும் பாஸ்."

"அம்மா, நான் பாஸ்."

அத்தையாய், அம்மாவாய், (தங்கையாய்) நின்ற தாய்மையின் உள்ளம் இதற்கெல்லாம் பனித்துப் பரவச மடைகிறது,

"அத்தோய், அத்தை! இதோ, எனக்குப் பாட்டுக்குக் கிடைத்த பரிசு."

"இது எனக்குப் பேச்சுப்போட்டியில் கிடைத்த பரிசு அத்தே!"

அத்தையின் அணைப்பும் அவர்களுக்குப் பரிசாகக் கிடைக்கிறது.

வருடா வருடம், குழந்தைகளின் வளர்ச்சியும் சித்திகளும் வீட்டிலே மங்கலம் முகைத்து மலரச் செய்கின்றன.

நடராஜன் பட்டதாரியாய்ப் பரீட்சை முடிவுகள் வெளியானபோது அவன் கண்ணீர் பெரியவரின் கால்களைக் கழுவுகையில், அவரின் உடல் புல்லரிக்கிறது. உள்ளே, மறைந்திருந்து இக் காட்சி கண்ட அவன் தாய்க்கு, உயிரெல்லாம் புல்லரித்திருக்கும்,

ஒரு வருஷம்.

அடுத்த வாரம் ...! நடராஜனுக்கு, உள்ளே அமிர்தம் ஊற்றெடுக்கிறது. பராசக்தி பாடசாலையிலிருந்து, விடுமுறைக்காக வீட்டுக்கு வந்துவிடுவாள்.

வந்தபிறகு...?

பேரிகைத் தோலின் துடிப்பாய் அவன் இதயந் துடிக்க, அத்துடிப்பிலே சுகங்காணும் ரகஸ்யம் ஒன்று அவனுள்ளே மலர்கிறது.

இன்னும் மூன்று நாட்கள்.

காலையில் கடிதங்கள் வருகின்றன.

''என் ராஜா, மேகத்தையும், கிளியையும், வண்டையும் தூதாக்கி காவியங்கண்ட கவிஞர்களின் வரண்ட கற்பனையில், 'கனவு' ஏன் தான் அகப்படவில்லையோ! இரவிலோ, பகலிலோ என் கண்கள் மூடியதும், என்னுள்ளே முளைக்கிற கனவுகள் உங்கள் தூதல்லவோ? இந்தக் கனவுக் குவியலிற் கிடந்து புரளுகிற பூரணத்தைக் காளிதாசனின் காவியத் தேவிகளே கண்டிருக்கமுடியாது.

''உங்கள் தூதுக் கனவுகளை, 'வாழ்க' என்று வாழ்த்தி வரவேற்கிறேன்''—

உங்களவளேயான பராசக்தி

அநர்த்தம் விளைந்துவிட்டது! பெரியதம்பிப்பிள்ளைக்கு வந்த உறையினுள் இக்கடிதம் கிடந்து, 'செய்தி' சொல்லிற்று.

''அப்பாவுக்கு, என் கோடாநு கோடி வணக்கங்கள்...... என்று தொடங்குகிற கடிதத்தைப் படிக்க ஆரம்பித்த நடராஜன், அதைச் சட்டைப் பையினுள்ளே சொருகிக் கொண்டு ஓடிவருகிறான்.

நரம்பெல்லாந் தீக்குருதி பாய, அனற்கோளங்கள் விழிகளாய்ப் பிதுங்க, ருத்திர மூர்த்தியாய் வெளிப்படுகிறார் பெரியதம்பிப்பிள்ளை, நடராஜனைக் கண்டதுமே, வார்த்தைகளாய் எரிமலையைக் கக்குகிறார்.

''நன்றிகெட்ட நாயே, போ— போய்விடு. என்னைக் கொலைகாரனாக்காமல் ஒழிந்துபோ, துரோகி.''

அவரால் அவரையே தாங்கமுடியாத நிலையில் உள்ளே போய் விட்டார்.

அதிர்ச்சியால் அங்கு நிலவிய பயங்கரப் பேரமைதி. அவரை எதிரொலித்து ஊளையிட்டது.

'நன்றி கெட்ட நாயே!'

'போ!'

'போய்விடு!'

'துரோகி!'

உள்ளம் வெடித்து, உணர்ச்சிகள் சிதறி நின்ற நடராஜன், அவற்றைத் தன் கால்களின் கீழே மிதித்துச் செலலுகிறான். இந்த அதிர்ச்சி அவன் தாயைக் கொள்ளை கொள்ள இரண்டு வாரம் செல்லவில்லை. நமைச்சல் கசப்பாகி, வைரமாகிறது.

பெருமூச்சுக்கள் பீறி அடித்து, நடராஜனை ரியூப் பொத்தலில் விழிக்கச் செய்தன.

அத்தப் பொத்தலையும் ஒட்டிவிட்டு, மறுபடியும் காற்றடித்து, நீரிலமுக்கி, அடுத்த பொத்தலைக் கண்டுபிடித்து'—

மீண்டும் சிந்தனைக் குமிழிகள் மேல் எழுகின்றன.

## 3

சிருஷ்டிக் கடவுள் சமுத்திரங்களைப் படைத்துக் கொண்டிருக்கிறார். சமுத்திரக் குட்டிகள், வானத்திலிருந்து கூட்டங் கூட்டமாய்ப் பூமியை நோக்கி வந்து, மரங்கள் கூரைகள்

தெரு-வயல்-தோட்டங்களின் மீதெல்லாம் துள்ளிக் குதித்து விளையாடுகின்றன.

பகல்-இரவுப் பேதமின்றி, நிலமெல்லாம் வெள்ளக்காடாக, மாமழை உலகை விழுங்கிக் கொண்டிருக்கிறது. காற்றின் கனவேகங் கண்டு, பெருமரங்கள் அடி பெயர்ந்து சாஷ்டாங்கமாய் நீரிற் படிந்து, தலை சாய்ந்து வணங்குகின்றன. உலகமெலாம் ஊழிக்காலப் பயங்கரமொன்று, நிர்வாணமாய் நடம் புரிகிறது.

மூன்று நாட்களாய், நடராஜன் இந்த மூலையிற் கிடந்த கள்ளிப் பெட்டியின் மேல் முடங்கிக் கிடக்கிருன். தன் உணர்வேயின்றி விழிப்பற்ற விழிப்பு நிலையில் விழித்திருக்கிருன், இடையிடையே, எப்பொழுதாவது, எழுந்து உட்கார்வது, திரும்பவும் சரிவது எல்லாம், அவனையும் அவன் பொத்தல் குடிசையினுள்ளே இடிந்து கொட்டுண்ட வானத்தையும் பொறுத்தமட்டில் ஒன்றுதான். ஆனுலும், எதிர் மூலையிலே, கால் மிதி கட்டையை மட்டும் வெளிக்காட்டிக் கொண்டு வெள்ளத்தினுள் கிடந்த சைக்கிளைப் பார்த்து, இரண்டொருமுறை பெருமூச்சு விட்டிருக்கிருன்.

பெருமூச்சின் பின்னணியாய். அடுத்த வீட்டிலே, பராசக்தியாய் வளையவரும் பராசக்தி. அவன் 'சக்தி'. பாலேப்பம் விட்டுப் பஞ்சின்மேல் படுத்துறங்குவாள் என்ற எண்ணம் தோன்றி, மனத்துக்கு இதஞ்செய்ய ஆரம்பிக்கும்.

உள்ளும் புறமும் ஊளையிட்ட பேய்க்காற்றைப் பொய்யாக்கி. அவன்


## ஆட்சி இயல்

உலகில் நடைபெறும் பலவேறு ஆட்சி முறைகள். அவை உருவான விதம், அவற்றுல் ஏற்பட்ட பலாபலன்கள் என்பனபறறியும், அவற்றின் வரலாறுகள் பற்றியும் விளக்கமாக உதாரணங்களுடன் எல்லோரும் எளிதில் வாசித்து விளங்கிக்கொள்ளக்கூடிய நடையில் எழுதப்பட்டுள்ளது. பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புப் பாட விதானத்துக்கு ஏற்றமுறையில் எழுதப்பட்டிருப்பதால் அம்மாணவர்களுக்குப் பெரும்பயன் அளிக்குமென்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

ஆசிரியர் : எஸ். ஹன்டி பேரின்பநாயகன் B. A. அவர்கள்

விலை ரூபா **6-00** -- தபாற்செலவு சதம் 35

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

**தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்**

# பெண்மணிகளே!

# கண்மணிகளே!!



காலைமுதல் மாலைவரை
கஷ்டப்பட்டு வேலைசெய்து வரும்
உங்கள் கணவரை மகிழ்விக்க

உங்கள்
**புன்னகை ஒன்றே போதும்**

எங்களிடமுள்ள
புதிய விதமான, கவர்ச்சி நிறைந்த, விலைமலிவான
நீடித்து உழைக்கக்கூடிய

## சேலைத் தினிசுகள்; ஜாக்கெட்டுகள்
## சோளி வகைகள்

முதலியவற்றை அணிந்து
உங்கள்
அன்புக் கணவரை ஆனந்தமடையச் செய்யுங்கள்.

# ராஜன்ஸ்

வவுனியா.

## RAJANS — VAVUNIYA.

பெருமூச்சொன்று, உணர்ச்சிகளை எரித்து வெளிவந்தது.

அவன் யார்?

அவள்?

அயர்ந்து போய்க் கிடந்த அவனுள்ளம், அணு அணுவாய் அசையத் தொடங்கிற்று.

சமூகத்தின் கண்களிலே, அவன் பாதாளத்தில் முளைத்த ஒரு புல். அவள் மலையுச்சியிலே ஒரு—

ஆனாலும் அவனுக்கு, அவள் 'என் சக்தி.'

அவன் சிந்தனை ஊழியிலிருந்து ஊழிவரை உருண்டு நீண்டதில் காலம் கடந்ததே தெரியவில்லை.

புயல் குறைந்து, மழை ஓய்ந்துபோய்க்கொண்டிருந்தபோது தான், நடராஜனுக்கும் உலகப் பிரக்ஞை ஏற்பட்டு, தன்னையே தான் பரிதபித்துக்கொள்ளுகிற நிலை உண்டாக ஆரம்பித்தது.

பசிக்கிறதா?

பசித்துத்தான் செய்வதென்ன?

வெளியிலே, வெள்ளத்தைச் சளசளத்து முன்னேறி, அவன் கொட்டில் வாசலில் வந்து நிற்பது மாடா? மாடாக இல்லாமல், மனிதராக இருக்குமா இந்தப் பேரழிவில்?

அவனது இந்தத் தீர்மானத்தை உருக்குலைத்துத் தடுமாற வைக்கிற தோரணையில், வந்த உருவம் உள்ளே 'டோர்ச்' விளக்கை விளாசி அடித்தது. ஒளி, தேங்கி நின்ற நீரில் பட்டு, குடிசையினுள்ளே ஒரு கணம் மின்னலாய்ச் சிதறியது.

சிந்தனைத் தொடர்பு சிதற, 'சக்தீ!' என்று பேரிடிபோல் அவன் கத்திவிட்டான்.

"க்ளக் அவன் கையிலிருந்த 'டோர்ச்' விளக்கும், ஏதோ பொட்டலமும் வெள்ளத்துள் விழுந்து விட்டன.

மின்னலும், இடியும், அதைத் தொடர்ந்த இருளும் அரைக் கணத்துள் அவர்கள் இதயங்களை இறுகித் தழுவச் செய்தன.

ஆயினும், அவன் அரக்கனாய்க் கூவினான்.

"சக்தீ! என் உள்ள[illegible]தக் குத்திக் கிழிக்கவா இப்படிப் புறப்[illegible]டாய்?"

விக்கல்களுக்கிடையே "உங்களைப் பார்த்துப் போக வந்தேன்" என்ற வார்த்தைகள் பி[illegible]ங்குகின்றன.

"நோயை வாவென்ற[illegible]காமல் உடனே திரும்பிப் [illegible]" யாராவது கண்டுவிட்டால்-? [illegible]ய்விடு."

வார்த்தைகள் வார்[illegible]களாயிராமல், அவள் நெஞ்சி[illegible] நெருப்பைக் கொட்டுகின்றன

விம்மலும் விக்கலு[illegible] அந்த இடத்திலே ஒரு கணம் அ[illegible]சயாமல் நின்று, பின்பு, நீரின் '[illegible]-சளக்' சப்தத்தோடு சென்று [illegible] மறைகின்றன.

சில நிமிஷங்களில் [illegible]முன்று தினங்கள் இரவு பகலா[illegible]ளக்கொளியிலே ஊறிக் கிடந்[illegible] வீட்டு மேல் மாடியில் இரு[illegible]ந்தது.

தன்மேற் கவிந்த [illegible]னையை உதறிவிட்டு, அவன் வே[illegible]யில் முனைகிறான்.

('இன்னும் எத்தனை [illegible]பாத்தல்களோ?')

அந்த ஒரு பொத்தலை ஒட்டி, காற்றடித்து, வாளித் தண்ணீருள் முழுக்கி,—

அடுத்த பொத்தல் சீறியடித்துக் குமிழிகளைச் சொரிகிறது,

அவன் தன்னை மறக்கிருன்.

## 4

"சூன்யாம் கனக சம்பன்னும்..."

ஐயரின் வேதகோஷம் அவன் காதில் விழவில்லை. அவள் காதிலும் விழுந்திராது.

மங்கல வாத்தியங்கள், சபையோரின் சலசலப்பு, ஓமகுண்டத்துப் புகையெல்லாம் அவன் மௌன மனத்திரையில் விழுந்து, ஞாபகக் குப்பைகளைக் கிளறுகின்றன.

அவனுக்குப் புரியாத புதிராய், இந்தக் கல்யாணம் நடந்துகொண்டிருக்கிறது.

கோவில் மண்டபத்தின் எல்லையிலே, விதானத்தினூடாகத் தெரிந்த வானமண்டலத்தில், வெள்ளை வெளேர் என்ற 'புகார்' உருவம் ஒன்று, அவனை, அவர்களை வாழ்த்துகிற பாவனையில் அசையாது நிற்கிறது.

('அம்மா!')

பக்கத்திலே, ஆனல் மனத்துக்கு எட்டாத பெருந் தொலையிலே, உள்ளத்தை வேதித்து வைரமாக்கி நிற்கும் பெரிய தம்பிப்பிள்ளையின் மௌனத்தோடு, நடராஜனின் மௌனம் மல்யுத்தமிடுகிறது.

கெட்டிமேளம் முழங்க, பராசக்தியின் கழுத்திலே மாங்கல்யம் ஏறுகிறது.

ஓட்டைக் குடிசையிலே, 'அம்மா'வின் படத்தின் முன்னல் அவர்கள் அடியற்று விழுந்தபோது, அம்மாவின் ஆசிகள் மழைத்துளிகளாய் அவர்கள்மேல் மலருகின்றன.

சம்பிரதாயத்தையொட்டி, அவர்களோடு வந்த இரண்டொருவர் 'வருகிறேம்' சொல்லி நழுவுகிருர்கள்.

வாழ்வு மலர்ந்துவிட்டது!

மழை.

வெயில்.

காற்று.

புயல்.

சாந்தியும் பிறந்துவிட்டாள்.

குழந்தை பிறந்தபோதுகூட பெரியதம்பிப்பிள்ளையோ, கல்யாணியோ வந்து பார்க்கவில்லை. அவர்கள்வரவு இங்கே எதிர்பார்க்கப் படவுமில்லை.

கசப்பையே நிலைக்களமாகக் கொண்டெழுந்த அவர்களின் கல்யாணமுகூர்த்தம் முடிந்ததுமே, தொடர்புகளும் நிரந்தரமாக அறுந்துவிடடன. இவர்கள் வீட்டையும் வேறெங்கோ மாற்றிக்கொண்டார்கள்.

அரசியல் காரணமாய், ஆசிரியத் தொழிலுக்கு முழுக்குப்போட்டுவிட்டு உணர்ச்சிகளை அடக்கி முகத்திலே தேக்கி, இரண்டொரு 'டியூஷன்'களோடு நடராஜன் போராடிக் கொண்டிருந்தான்.

சாந்தி ஓடியாடிக் குறும்பாய் நிறைந்தபோதுதான், அவர்களின் உள்ளே குமுறிய எரிமலைகள் ஓரளவு சாந்திபெற ஆரம்பித்தன.

அதிகாலையில் அவர்கள் வீட்டுக்கு யாரோ வருகிருர்கள்.

# வவுனியாவில்

## உங்களுக்கு என்ன வேண்டும்?

**இரும்புச் சாமான்களா?**

நோயால் அவஸ்தைப்படுபவர்கட்கு
**மருந்துச் சாமான்களா?**

மாதர்கள் அணிந்து மகிழ,
**கண்ணைக் கவரும் புடைவைகளா?**

உலகப் புதினங்களை அறிந்து ரசிக்க,
**நல்ல ரேடியோக்களா?**

உல்லாசப் பிரயாணம் செய்ய றஜ் சைக்கிள்களா?
பாலர் முதல் கிழவர் வரை பருகிப் பயனுறப்
பால் மா வகைகளா?

**உணவுப் பொருட்களா?**

உங்கள் நெற்பயிர்களை
நாசம் செய்யும் கிருமிகளைக் கொல்லும்
**கிருமி நாசினிகளா?**

**பசளைகளா?**

கோழிப்பண்ணைக்குத் தேவையான **கோழித்தீன்களா?**

என்ன வேண்டுமானாலும் எங்களிடம் பெறலாம்.

# சில்வா ஸ்டோர்ஸ்

**வவுனியா.**

"அது யார்?"

"கல்...யாணி!"

கல்யாணியின் உடல், உடை, நடையிலெல்லாம் பதட்டம் பரவிப் பாய்கிறது.

"அக்கா!"

அக்கா தங்கையை அணைக்கையில், அவர்கள் எலும்புகள் முறிந்து உருகுகின்றன. கண்கள், கன்னங்களில் இரத்த ஆறு கிழிக்கின்றன

நடராஜனும் கலங்கி, திடீரென்று நிலை பெறுகிறான்.

கதறலும் விம்மலும் வார்த்தைகளாய் வெடிக்கின்றன. "அப்பாவுக்கு ஆபத்து. உடனே புறப்படு. உன்னைத்தான் அடிக்கடி கூப்பிடுகிறார்."

'அப்பா' என்றதுமே, ஏனோ தன் மனம் வைரிக்கிறதைத் தானே உணருகிறான் நடராஜன்.

பராசக்திக்கு மனத்தால் புறப்பட்டு, அப்பொழுதே அப்பாவின் காலடியில் போய் அமர்ந்து விட்டாள்.

தங்கையிடமிருந்து தன்னை அவிழ்த்துக்கொண்டு, அவள் அவனைப் பார்க்கிறாள்.

அவன் முகம் கல்லாகிறது.

கல்யாணியின் கண்களும் நடராஜனைத் துழாவுகின்றன.

"ஒரு வாரமாக நெருப்புக்காய்ச்சல். நேற்றையிலிருந்து ஒரே புசத்தல் "பராசக்தி, பராசக்தி, பராசக்தி...' அப்பாவுக்குத் துணையா எவருமில்லை. நான் போகிறேன் நீ வா'.


# தேவையா?

## 2 மணித்தியாலத்தில்

- உறுதியான டிசைன்களில் றப்பர் ஸ்டாம்புகள்
- அழகான எழுத்துக்களில் பிளாஸ்டிக் போர்டுகள்
- புளக்குகள்

செய்துகொடுக்குமிடம்

இதேபோன்ற வேலைகள் செய்யுமிடம் யாழ்ப்பாணத்தில் எங்கள் ஸ்தாபனம் ஒன்றுதான் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

# கலாசோதி இன்டஸ்றீஸ்

பதிவு இல: 4272

141/1, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்.

அவள் பைத்தியமாய் ஓடுகிறுள்.

இங்கே. பைத்தியமாய் நிற்கிற பராசக்தியின் தேம்பல், பழைய நினைவுகளை மேலே மிதக்க வைக்கின்றன.

அவளுக்கு அப்பாவாய், அம்மாவாய், எல்லாமாய்நின்ற அவர்...... அவருக்கு ஆபத்தா ?

அவனுடைய 'நான்', கசப்பைத்தான் காணுகிறது. "நாய் நன்றிகெட்ட நாய். துரோகி!"

அவன் அசைந்து கொடுக்கத் தயாராயில்லை. மௌனம் குத்திக் கிழிக்கிறது. அது அவளையே அழித்துவிடுவதாய் நீளுகிறது. அவள் அதை இன்னும் நீளவிடவில்லை.

"ராஜா—"

"போகவேண்டுமானுல் போ, போய்விடு."

ராக்ஷஸ வீணை ஒன்றின் நரம்புகள் முறுக்கேறித் தெறித்துக் கூட்டிய அபசுரங்களாய், அவன் கூவினுன்.

கல்யாணியைக் கண்டதுமே மனத்தால் அப்பாவிடம் போய்விட்ட அவளை, அத்தனைகாலமாய் அடங்கிக் கிடந்த பாசம் முதுகிலே பிடித்துத் தள்ளிற்று.

தெருக்கதவைத் தாண்டும்போது அவன் சொல்வது அரைகுறையாய் அவள் காதில் விழுந்தது.

"அங்கேயே இருந்துவிடு. இங்கே உனக்கு இனி எவருமே இல்லை."

அவள் போய்விட்டாள்.

**போ**யே போய்விட்டாள்.

நெருப்புக்காய்ச்சல், அப்பாவிலிருந்து அவளிடம்போய், ஒரு வாரத்தில் சாந்திபெற்றுவிட்டது.


மாணவர்களே!
படித்துவிட்டீர்களா?

**தங்கத் தாமரை**

சிறுவர்க்கான சிறுகதைத்தொகுதி

ஆசிரியை :
மா. இந்திராணி

விபரங்களுக்கு :
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
பெரியகடை, யாழ்ப்பாணம்.


(விஷயந் தெரிந்தும், அவன் அவளைப் போய்ப்பார்க்கவே இல்லை. அவனுடைய 'நான்' அனுமதித்தால் தானே! குழந்தையையும் அனுப்பவில்லை. அவள் வீட்டிலிருந்து போகும்போதுதான், ஒரு நல்ல வார்த்தை? எப்படித்தான் அவள் துடிதுடித்துச்.........அவன் வயிற்றினுள் தீ சுவாலைவிட்டு எரிக்கிறது.)

குழந்தையைக் கையில் பற்றியபடி மயானத்திலிருந்து திரும்பிக் கொண்டிருக்கிறுன்.

உள்ளே, அவன் இதயத்தினுள்ளே, சக்தியின் சிதை பற்றி எரிந்து, அவனையும் எரிக்கிறது. அது, அவனையும் எரித்துச் சிதைக்காமல், சிதைந்துவிடாது.

('என்னையும் எரித்துச் சிதைத்துவிடு, சிதைத்துவிடேன்!')

பிளேட்டினுல் டியூப்பை வெட்டி, தன்னை மறந்த நிலையில், ஒரு மூலையிலே எறிகிறுன்.

பெருமூச்சொன்று, தீக்காற்றுய்ப் புகைகிறது.

"ஏனப்பா, அதை வெட்டி எறிந்துவிட்டீர்கள்?"

திரும்புகிருன்.

சாந்தி!

பொய்யாய் ஒரு புன்னகையை முகத்திலே படரவிட்டு, அவளைத் தூக்கி அணைத்துக் கொள்ளுகிருன்.

"இதுதானம்மா வாழ்க்கை"

"வாழ்க்கையா?"

குழந்தை அப்பாவின் முகத்தைக் கேள்விக்குறியால் ஊடுருவுகிறது.


('குழந்தை! அவளுக்கா நான் பதில் சொல்லுகிறேன்?')

"இதோ பார், இந்த ரியூப் இவ்வளவு காலமா உழைத்து. இதிலே எத்தனையோ பொத்தல்கள். இனி, இது தானுக உழைக்கமுடியாது. உன்னைப்போல, புதிசான ஒரு ரியூப்பிலே, ஒருபொத்தல் விழுந்தா, அதை அடைத்து ஒட்டத்தான் இது உதவும்."

விளக்கம் புரிந்துவிட்டதைப் போல் குழந்தை சிரிக்கிருள்.

குழந்தைக்குச் சொல்வதுபோல் அவன் தனக்குத்தானே இந்தத் தத்துவங்களைச் சொல்லிக்கொண்டான்.

உள்ளே சிதை எரிந்துகொண்டேயிருக்கிறது.

கல்யாணி

தலைமுடிகள்,

அன்பளிப்பு, பரிசளிப்புப் பொருட்கள்

பாட்டா (Bata) கால் அணிகள்

அலுமினியப் பாத்திரங்கள்

பலவித அழகிய

றேந்தை, கலர் நூல் வகைகள்

வாசனைத் திரவியங்கள்,

பீங்கான் கோப்பை

முதலியன எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கல்யாணி

(புதிய பஸ் நிலையத்துக்கு முன்னுல்)

ஆஸ்பத்திரி வீதி : : யாழ்ப்பாணம்

# ஏன் எழுதுகிறோம்?

> **சம்பந்தன்**
>
> "புதினம் பிரதிநிதியாகக் கொழும்பில் கடமையாற்றும் கடமையாற்றும் சம்பந்தன் தமிழார்வம் மிக்கவர். பத்திரிகை வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிபவர். இக்கட்டுரையில் நல்ல சில கருத்துக்களைக் காணலாம்.

ஏன் எழுதுகின்றோம்? எதற்காக எழுதுகின்றோம்? எப்படி எழுதவேண்டும்? என்ற வினாக்களுக்கு பல எழுத்தாளர் சங்க மகாநாடுகளில் விளக்கமற்ற கருத்துக்கள் தெரிவிக்கின்றார்கள். ஒவ்வொருவரும் தங்கள், தங்கள் சிந்தனா சக்திக்கு ஏற்றவாறு வேற்றுவிதமான விடைகளைக் கூறுகின்றார்கள். கருத்தரங்குகளில் பங்குபற்றுவோர் தங்கள் கட்சி வெல்ல வேண்டும் என்பதற்காகத் திரித்தும், கூட்டியும்குறைத்தும், முரண்பட்ட கருத்துக்களுடன் பேசுகின்றார்கள். இவைகள் ஆழ்ந்து அறிந்த அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியன அன்று. எந்த விதமான கேள்விகளுக்கும் அடிப்படையான உண்மைகள் இருக்கத்தான் செய்கின்றன.

எழுத்து என்பது ஒருகலை. அதை ஏனைய கலைகள் போன்று பேணிப் பாதுகாத்து வளர்க்க வேண்டியது எழுத்தாளரின் தலையாய கடமை. எழுத்தின் மகத்துவத்தையும், பெருண்மைகளையும் புரியாது, எழுத்தாளனாக வரவேண்டும் என்ற நோக்கத்துடன், கவ்வைக்குதவாத, தரம் அற்ற கஞ்சல் படைப்புகளைப் படைத்துவிட்டு "எழுத்தாளன்" என்ற பட்டத்தைச் சூட்டிக் கொள்ளுவோர் பலர் இருக்கின்றார்கள். இவர்கள் எழுதுவதின் உண்மைத் தத்துவத்தை உணராத, விளங்கிக்கொள்ளாத, புகழ்விரும்பி எழுதும் போலி எழுத்தாளர் வரிசையில் இடம் பெறக்கூடியவர்கள் என்றே கூற வேண்டும்.

"எழுத்தை எழுதுவோர் எல்லாரும் எழுத்தாளர் அல்லர். எழுத்தை ஆளுபவரே எழுத்தாளர்" என்று டாக்டர் இராசமாணிக்கனார் விளக்கம் தந்துள்ளார். கருத்திற்கேற்ற சொற்களையும், வசனத்திற்கேற்ற வார்த்தைகளையும் கையாள வேண்டியது எழுத்தாளரின்

பண்பும், நியதியுமாகும். ஒரு சாதாரண நிகழ்ச்சியைப்பற்றி எழுதும்போது வர்ணிக்கமுடியாத, பொருத்தமற்ற சொற்களைப் பிரயோகித்து அதைப் பிரமாதப் படுத்துவது எழுத்தாளரின் உயரிய பண்பாகாது. அதனுல் எழுத்துக்குரிய தனித்தன்மையும் குன்றிவிடுகின்றது. தன்னுடைய எழுத்துக்கள் எல்லோராலும் போற்றப்படவேண்டும் என்ற குறிக்கோளுடன் எழுதப்படுவது, பேதமையும், அறியாமையுமாகும்.

எழுதப்பட்ட விஷயத்தில் மனித சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய உண்மையான கருத்துக்களும் அறிவுரைகளும் இருக்கின்றனவா என்பதுதான் முக்கியம்.


என்றென்றும் நிலைத்து நிற்கவேண்டிய பேருண்மைகளையும், மனிதப் பண்புகளையும் ஆழ்ந்த கருத்துக்களையும், மறைமுகமாக கதைகளினூடே வலியுறுத்துவது இலக்கியம். மனிதகுலத்தின் ஆணிவேர்களான சீரிய சிந்தனைக்கும் உயர்ந்த உணர்ச்சிக்கும் உயிரோட்டம் கொடுத்து செழிக்கச் செய்யவேண்டியது எழுத்தாளரின் கடமையாகும், இவ்வாருன மகத்தான பணியைச் செய்யும் எழுத்தாளர்களிடையே நேர்மை, கட்டுப்பாடு, கடமையுணர்ச்சி, சேவை மனப்பான்மை முதலிய பண்பாடுகள் இருக்கவேண்டும். சந்தனமரம் எப்படித் தன்னை அழித்துக் கொண்டு மற்றவர்களுக்கு மணம் தருகிறதோ, அதே போல் எழுத்தாளன் தன் சொந்த வாழ்வைப்பற்றிக் கவலைப் படாமல் மனிதாபிமானம் வாழ்வதற்காக எழுதவேண்டும்.

அறிவு மேதைகளின் கருத்துப் புரட்சி நிறைந்த எழுத்துகளால் பல நாடுகளின் சரித்திரமே மாறியிருக்கின்றது. அடிமைப்பட்டுஅல்லலுற்றுக்கிடந்த இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகள் விடுதலை பெற்று சுபீட்சவாழ்வை அடைவதற்கு மூலகாரணமாக இருந்தவை அறிஞர்களின் எழுத்துப்புரட்சியேயாகும். அவ்வாருன சந்தர்ப்பங்களில் எழுத்தையும் ஒரு விடுதலை ஆயுதமாகப் பாவித்துள்ளனர்.

பிறநாட்டு அரசியல்வாதிகள் பலதினசரிப் பத்திரிகைகளில் செய்திகளைப் படிப்பதுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. அந்தந்தக் காலத்துச் சமுதாய வாழ்வைப் பின்னணியாகக்கொண்டு எழுதப்பெற்ற கதைகளையும் நாடகங்களையும் படித்தார்கள். சமூகத்தில் சீர்திருத்தப்பட வேண்டிய இவை

டர்ஷ்வூட்

# "வாட்டர் பவ்வலோ"



தானே இயங்கவல்ல

## தண்ணீர்ப் பம்ப் 2"

இரும்புத்தகடு ஒன்றில் பொருத்தப்பட்டிருக்கும் பம்ப் பலம் பொருந்திய இரண்டு றப்பர் சில்லுடைய வண்டியில்வைத்து இணைக்கப்பட்டிருக்கிறது. அலுமினியத்தினல் வார்த்தெடுக்கப் பட்ட யந்திரம். ஒரு மணித்தியாலத்திற்கு 6,000 கலன் தண்ணீர் இறைக்கவல்லது.

எம்மிடம் ஸ்ரொக் இருக்கிறது.

## மஸ்கன்ஸ் லிமிட்டட்

*175, ஆமர் வீதி,* கொழும்பு.

களை இலக்கியவாதி எடுத்துக் காட்டியிருந்ததால், இவற்றைச் சீர்திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டார்கள்.

அரசியல் வாதிகளால் மட்டும் மக்களிடையே விடுதலைத் தாகத்தை ஏற்படுத்தமுடியாது. பாரதத்தின் விடுதலைப் போராட்டத்தின் போது இலக்கியவாதியான பாரதி சுதந்திர உணர்ச்சியூட்டக்கூடிய கவிதைகளைப் பாடி மக்களைத் தட்டி எழுப்பினன். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் படைத்த இளங்கோ ஒரு இலக்கியவாதி. சிலப்பதிகாரம் நீடித்து நிலைபெற்றிருப்பதற்குக் காரணம் என்ன?

தமிழ் மக்களின், கலை, கலாச்சாரம், வீரம், அரசியல், எல்லாவற்றையும் சிறப்புடன் பொதிந்து வைத்திருப்பதே காரணம். ஒரு எழுத்தாளன் இலக்கியத்தை மட்டும் வளர்த்தால் போதாது. அரசியலையும் வளர்க்க வழிவகுக்கவேண்டும்.

அதனுல் இலக்கியவாதிகள் அரசியல் வாதிகளாக வேண்டுமென்பதில்லை. இருசாராருமே மனிதர்களுக்காக உழைப்பவர்கள் என்ற அடிப்படை ஒற்றுமையைப் புரிந்துகொள்ளவேண்டும். உணர்ச்சிப் பெருக்கினுல்


அடுத்த இதழில்:

ஓவிய மன்னர்

**மாதவன்**

பேட்டிக்கட்டுரை

வெளியாகின்றது.

கலைச்செல்விக்காகப் பேட்டி கண்டவர்

"உமாசுதன்"



சமுதாயச் சிந்தனைகளை உருவாக்கும் இலக்கிய வாதிகளின் எழுத்துக்களை அரசியல் வாதிகள் படித்துப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். மக்களின் போக்கைக் கூர்ந்து கவனித்து, அவர்கள் எங்கே எப்படிப் போகின்றுர்கள் என்று முன்கூட்டியே சுட்டிக்காட்டும் கூர்மதியாளன் இலக்கியவாதி மக்களை ஆக்கவும், அழிக்கவும் வல்லசக்தி படைத்தது பேனுமுனை. அதன் வழியாக நாட்டைப் பார்ப்பதற்கு அரசியல் வாதிகளுக்குச் சந்தர்ப்பம் உண்டாகும்.

மனிதவாழ்வை அரசியல் போக்கும் உருவாக்குவதால் வாழ்க்கையில் கலந்துள்ள

சோம்பலை ஓட்டி

சுறுசுறுப்பை ஊட்டுகின்றது.

## சதானந்தா & ஆனந்தா பீடி




அன்பர்களே!

நீங்கள் களைப்புற்று இருக்கும் நேரங்களில்

**சதானந்தா & ஆனந்தா பீடிகளைப்**

பாவித்துப் பெரும்பயன் அடையுங்கள்.

விசேடமாக

இறக்குமதி செய்யப்பட்ட பீடிப் புகையிலையினால்

சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட

## சதானந்த & ஆனந்தா பீடி

உங்களுக்கு என்றும் உற்சாகத்தை அளிக்கும்.

# SADANANDA BEEDI Co.,

Telegram: Sadananda. Phone: 401.

MATALE

வவுனியாவில் ஏக விநியோகஸ்தர்

## றகுமானியா ஹோட்டல் : வவுனியா.

அதன் போக்கை, இலக்கிய வாதி அறவே உதறிவிட-முடியாது. நாட்டில் ஏற்பட்டு வரும் அரசியல் பொருளாதார நிலையை அடிப்படையாகவைத்துக் கதை, கட்டுரைகள் வரையவேண்டும். அதை மக்கள் படித்து நாட்டின் நிலையைத் தெரிந்துகொள்ளவேண்டும். சுவையூட்டும் செய்திகளுடன் சம்பவங்களைத் திணிப்பதால், வாசிப்போர் அதை எளிதில் புரிந்துகொள்ளுவர்.

மக்கள் பழைய இலக்கியங்களையும் நன்ருகப் படிக்கவேண்டும். எழுத்தாள மேதைகளும் இலக்கியவாதிகளும் நாடு எங்கே செல்கிறது என்பதை மறந்துவிட்டு, வானத்துக் கற்பனையில் மட்டும் சஞ்சரித்தலாகாது. இன்று நம் தாய்த்திரு நாடான ஈழத் தமிழ்மக்களுக்கு ஏற்பட்டிருக்கும், இன்னல்களையும். சுபீட்சமற்ற அரசியல் பொருளாதார சூழ்நிலைகளையும் நிலைக்களனுகவைத்து இலக்கியப் படைப்புக்களைப் படைத்து மக்களைச் சுதந்திரப் பாதையில் இழுத்துச் செல்லவேண்டியது எழுத்தாளர்களின் தலையாய கடமைகளில் ஒன்ருகும்

மனிதத் தன்மையில் நம்பிக்கைகொண்டு அதன் வளர்ச்சிக்காக அயராது எழுதுவோமாக.


**விசேட செய்தி!**

நவீன வசதிகளுடன்கூடிய எமது அச்சகத்தில்

**வடமொழி**

(தேவநாஹரி)

எழுத்துக்களை வாங்கியுள்ளோம்.

ஸமஸ்கிருத நூல்களும் விஞத்தாள்களும்

அச்சிட விரும்புவோர் எங்களைக் கலந்துகொள்க.

**ஆசீர்வாத அச்சகம்**

32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 274.

**மில்க் வைற்**

**நீல சோப்**

என்று கேட்டு

வாங்குங்கள்.



"வடக்கர் வாத்தியார்" எனப் பலராலும் அன்புடன் அழைக்கப்பட்ட திரு. கந்தையா உபாத்தியாயர் அவர்கள் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையை நிறுவியவர்; பழைய பரம்பரையில் வந்த உத்தம ஆசிரியர். அவருடைய நினைவுதினம் ஆகஸ்டு 1-ந் திகதியாகும். ஷெ பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் சிறப்பான முறையில் ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றனர். எத்தனையோ பேருக்கு எழுத்தறிவித்து எண்ணில்கோடி புண்ணியஞ் செய்த இப் பெருந்தகைக்கு எமது அஞ்சலியைச் செலுத்தி, யாழ். நாவலர் கலாசாலைத் தலைமையாசிரியர் ஆக்கிய நினைவுப் பாமாலையை வெளியிடுகின்றோம்.

# நினைவுப் பாமாலை

பண்டித, வித்துவான் இ. திருநாவுக்கரசு

சீர்வளரும் ஈழவள நாட்டின் ஓர்சார்
திகழ்கின்ற யாழ்ப்பாண தேசம் மேவும்
பார்வளரும் உயர்கந்த ரோடை மன்னும்
பண்பிலுயர் பெருங்குடியிற் பனுவல் போற்றி
ஏர்வளரும் பெருவேளாண் குடியிற் றேன்றி
இயல்தமிழ்வித் தியாசாலை இனிது தாபித்(து)
ஆர்வமொடு தனிபுரந்த அண்ணல் சீரார்
அருட்குரவன் கந்தையா அமர ராஞர் (1)

கரவருடம் ஆடிமதி கவினீ ரொன்பான்
கருதுநாள் பிரதமைசேர் தருநன் ஞளில்
வரமருவு மோர்தமிழ்க் கந்தைய பிள்ளை
வள்ளலார் உயர்பாதம் மருவி நின்ருர்
விரவுபுகழ் ஸ்கந்தவரோ தயக் கல்லூரி
மிக்கோங்க வளர்த்ததென் கந்தைய பிள்ளை
மருவிமகிழ் மைத்துனர் பிணவழிக் கொண்டுற்ருர்
மன்னுலக நிலையாமை யுணர்த்தி நின்ருர். (2)

ஆரியமும் தமிழுமிரு கண்க ளென்றே
அவனிபுகழ் சொலவளர்த்த வரதர் பின்னே
சீரியலத் தனிபுரந்த சுன்னை முத்துக்
குமார சுவாமிக் கவிராயர் பின்னின்றே
காரியலும் சுன்னைவரு குமார சுவாமிக்
கவிவலவன் புலவர்வழி புலமை கண்ட
பாரியலு புகழ்கொண்ட தமிழ்க் கந்தைய
பனுவல்தெரி நல்லாசான் நாமம் வாழி (3)

தக்காரும் தகவிலரும் தரணி காண்டல்
தகுமெச்சம் அதனுலென் றுரைக்கும் வேதம்
மிக்காரும் ஒப்பாரும் இலராய்ச் சைவ
மேன்மைநெறி தழைப்ப வருஉம்கந்த ரோடை
புக்கார்வ மொடு வடகந் தையபிள்ளை
போற்றியவித் தியாசாலை வளர மேலும்
அக்கார் செஞ்சடையமலன் அருளி னுலே
அணிசிறந்து நலம்படைத்திவ் வவனி வாழி. (4)

நந்திபிரான் கருணையினுல் நவின்ற உண்மை
நலமெல்லாம் சித்தாந்தத் துணர்ந்து போற்றிப்
புந்திமலி மூவடி முப்பதுரை கண்ட
போதநிறை தவமுனிவன் கந்த ரோடை
வந்துறை தென்கோவைக் கந்தைய பிள்ளை
மருவினிய வித்தகனுர்க்கு அன்பு பூண்டு
சிந்தைநிறை யுயர்தமிழ்க்கந் தைய பிள்ளை
சீர்பரவும் நினைவுநாள் சிறந்து வாழி. (5)

# தூதுப் பிரபந்த வளர்ச்சி

## — செட்டிகுளம் பூலோகசிங்கம் —

பிரபந்தங்களின் பொது வரலாற்றினை நோக்கு மிடத்து, அவை, பல்லவர்காலப் பிரிவில் அரும்பி, சோழர்காலப்பிரிவிற் போதாகி, நாயக்கர்காலப் பிரிவில் மலர்ந்தன எனலாம். பதிகவகையினைப் பெருமளவிற் பயன்படுத்திய நாயன்மார்களும் ஆழ்வார்களும் அந்தாதி, கோவை, உலா, இரட்டை மணிமாலை முதலியபிரபந்தங்களைக் கையாண்டுள்ளனர். பேரிலக்கியங்களான சிந்தாமணி, இராமாயணம், பெரிய புராணம் முதலியன தோன்றிய சோழர்காலப் பிரிவிலே பரணி, பிள்ளைத்தமிழ், தூது முதலிய சிற்றிலக்கியங்களும் எழுந்தன. ஆனல், நாயக்கர் காலப் பிரிவிற் பெருமளவில் எழுந்த இலக்கிய வகைகள் தல புராணங்களும் பிரபந்த வகைகளுமேயாம்.

> செட்டிகுளத்தைச் சேர்ந்த பூலோகசிங்கம் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றவர்; B,A,Hons பட்டதாரி. தூதுப் பிரபந்தங்கள் பற்றிய சில ஆராய்ச்சி உண்மைகளை வெளியிடுகின்றார்.

பிரபந்த வளர்ச்சியின் காரணமாக எழுந்த பாட்டியல் நூல்கள் இவற்றின் இலக்கணங்களைக் கூறுவன. தூதுப் பிரபந்தம் கலிவெண்பாவாற் பாடப்படவேண்டுமென்பது விதி. தலைவன் தலைவியருள் விரகத்தாற் துன்புறும் ஒருவர் மற்றொருவர்பாற் தம் துயரினைத் தெரிவிக்கும்படி வேண்டும் முறையில் இப்பிரபந்தம் அமையும். தூதுவிடுக்கப்படும் பொருள் உயர்திணை அன்றி அஃறிணையில் அமையலாம்.

நமது பண்டைத் தமிழ் இலக்கியங்களிற் காணப்படும பல செய்யுட்கள் தூதுப் பிரபந்தங்களுக்கு வழிகாட்டிகளாக விளங்குவன. பண்டைத் தொகை நூல்களில் உள்ள சில செய்யுட்கள் 'காம மிக்க கழிபடர் கிளவி' என்னும் வகையில் அடங்குவன. இவற்றை நோக்குமிடத்துச் சில, அஃறிணைப் பொருள்களுடன் பேசுவதையும், சில தூதுரைக்கவேண்டுவதையும் குறிப்பதைக் காணலாம். தொல்காப்பியர் கூறும் 'சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச், செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்'' என்பது இதற்குரிய விதியாகலாம். தலைவி

தூதுவிட முயலுதலை வரைந்து எய்தும் கூட்டத்திற்கு ஏதுவாகிய எட்டு வகை மெய்ப்பாடுகளுள் 'தூது முனிவின்மை' என்பதனுள் அடக்குவர். 'தூது முனிவின்மை—புள்ளும் மேகமும் போல்வன கண்டு சொல்லுமின் அவர்க்கென்று தூதிரந்து பன்முறையானும் சொல்லுதல்' என்பது பேராசிரியர் உரை.

தும்பிசேர் கீரனார் குறுந்தொகையில் (செய்யு 392) வண்டைத்தூது வேண்டுகிறார். நற்றிணையில் சேத்தங் கண்ணனார் (செய்யு. 54) வெண்குருகையும், வெள்ளிவீதியார் (செய்யு. 70) குருகையும், செம்பியனார் (செய்யு 102) கிளியையும் கபிலர் (செய்யு. 376) கிளியையும் தூதுவேண்டும் பாடல்கள் உள. அகநானூற்றில் மதுரைக்கள்ளிற் கடையத்தான் வெண்ணாகனார் செய்யு (170) அலவனைத் தூது வேண்டுகிறார். ஐந்திணை எழுபதில் மூவாதியார் அன்றிலைத் தூது வேண்டுகிறார். இச் செய்யுட்களிற் பிற்காலத்தில் எழுந்த தூதுப் பிரபந்தங்களின் அமைப்பு முறையின் சாயலைக் காணலாம்.

தலைவி தூதுவேண்டும் பொருளை விளித்துத் தலைவனுக்குச் செய்தி கூறும்படி வேண்டுதல் இச் செய்யுட்களிற் காணப்படும். பொதுப் பண்பாகும். பொதுவாகத் தூது வேண்டும் பொருளை விளிக்கு மிடத்துப் பிற்காலத்துப் பிரபந்தங்களிற் காணப்படும் முகஸ்துதி செய்யும் வார்த்தைகள் இல்லை எனலாம். தூதுப் பிரபந்த ஆசிரியர்கள் தம் வித்துவத்தன்மையைக் காட்டிய பிரிவுகளிற் தூது விடுக்கப் படும் பொருளை விளிக்கும் இடமும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால்,

"கானலுங் கழறாது
　　கழியுங் கூறாது
தேனிமிர் நறுமலர்ப்
　　புன்னையும் மொழியாது
ஒருநின் அல்லது
　　பிறிதியாதும் இலனே"
　　　　(அகம் 170)

எனும் அடிகளிற் தூதுப் பிரபந்தங்களிற் பிறபொருள் தூதிற் சிறவா எனக் கூறும் பகுதியின் சாயலைக் காணலாம். இவ்வடிகளில் ஒரு வகை முகஸ்துதி இல்லாமல் இல்லை.

"கொடுங்குரல் குறைந்த
　　செவ்வாய்ப் பைங்கிளி
அஞ்சல் ஓம்பி
　　ஆர்பதங் கொண்டு
நின்குறை முடித்த
　　பின்றை என்குறை
செய்தல் வேண்டுமால்
　　கைதொழுது இரப்பல்"
　　　　(நற். 102)

எனும் அடிகளிலும் தலைவி தன் காரியத்தை நிறைவேற்றப் பைங்கிளியை மகிழ்விக்க முயல்கிறாள்.

அன்பினைந்திணையுள் அடங்கிய தூதுச் செய்யுட்கள் பல்லவர் காலத்திற் தம்நிலை மாறிக் கைக்கிளைப் பாடல்களாக அமைந்தன. இறைவனிடம் காதல் கொண்ட தலைவியின் நிலையில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் பல பதிகங்களைப் பாடியுள்ளனர். அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர், சேரமான் பெருமாள் முதலிய நாயன்மார்களும்; ஆண்டாள், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்களும் தூதுப்பொருளைப் பயன் படுத்தியுள்ளனர். திருப்பழனப் பதிகத்தில் அப்பர்,

"பொங்கோத மால்கடலிற்
புறம்புறம்போய் இரைதேரும்
செங்கால்வெண் மடநாராய்
செயற்படுவ தறியேன்யான்
அங்கோல வளைகவர்ந்தான்
அணிபொழில்சூழ் பழனத்தான்
தங்கோல நறுங்கொன்றைத்
தாரருளா தொழிவானே"

என இசைக்கின்றார். சங்க காலத்துத் தூதுப் பாடல்களிற் காணப் படாததும் பிற்காலத் தூதுப் பிரபந்தங்களில் முக்கியமானதுமான தொடைவாங்க வேண்டும் பண்பு பல்லவர் காலத்துப் பக்திப் பாடலிற் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. சம்பந்தர்,

"வண்டரங்கப் புனற்கமல
மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்டரங்க இசைபாடு
மளியரசே ஒளிமதியத்
துண்டரங்கப் பூண்மார்பர்
திருந்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்நிலைமை
பரிந்தொருகாற் பகராயே"

எனத் திருத்தோணிபுரப் பதிகத்தில் வேண்டுகிறார். அளியை விளிக்கவந்த தலைவி "அளியரசே" எனவிளிப்பது, தூதுப் பிரபந்தங்களிற தலைவி தூதுவிடுக்கும் பொருளை முகஸ்துதி செய்து காரியத்தை முடிக்க முற்படுவதை ஞாபகமூட்டுகின்றது. சுந்தரர்,

"வண்டுகாள் கொண்டல்காள்
வார்மணற் குருகுகாள்
அண்டர்வா ணர்தொழும்
அடிகளா ரூரரைக்
கண்டவா றுங்காமத்
தீக்கனன் றெரிந்துமெய்
உண்டவா றும்மிவை
உணர்த்தவல் லீர்களே"

எனத் திருவாரூர் பதிகத்திற் கூறுவர். பிற்காலத்திலெழுந்த தூதுப் பிரபந்தங்கள் பலவற்றிற் தலைவி பவனிவரக்கண்டு காமுற்றதைப் போன்று இப்பாடலிலும் தலைவிபவனிவரக் கண்டு காமுற்றது காணலாம்.

(தொடரும்)

# எது சுதந்திரம்?

தமிழ்ச்செல்வன்

பல நூற்றுண்டு காலமாக மாற்றுரின் அடிமைத் தளையில் சிக்குண்டு கிடந்த எமது ஈழத்திருநாடு இன்று சுதந்திரம் பெற்றுவிட்டது. இச்சுதந்திரத்தை இலங்கை வாழ் மக்கள் எந்தளவில் பயன்படுத்துகிருர்கள் என்பதை நாம் சிந்தித்தால் நாம் வாழ்வது சுதந்திர வாழ்வுதானு என்ற கேள்வி எம் மனதில் எழுகின்றது, அந்நியர் எம்மை ஆண்ட காலத்தில் அவர்களது அதிகாரங்களுக்கு அடங்கி நடந்தோம்.

உலகின் எந்த நாட்டு மக்களாயினும்சரி மனிதசமுதாயத்தின் முன்னேற்றத்தையே எதிர் நோக்குகின்றனர். இதே முன்னேற்றக் கண்ணுடன் நாம் எதிர் நோக்கியதுதான் சுதந்திரம். நாம் எதிர்பார்த்தபடி அந்நியர் எமது அன்னையை எம்மிடமே ஒப்படைத்துவிட்டனர். இதன் பலன் எமது நாடு — அந்நியரிடமிருந்து விடுபட்டுக்கொண்டது. ஆனல் இந் நாட்டில் வதியும் மக்கள் சுதந்தரமாக வாழுகின்றனரா என்ருல்... ........? அதுதான் கேள்விக்கிடமாயிருக்கிறது.

## பொருளாதாரம்:—

இந்நாட்டின் மக்களாகிய நாம் இன்று நாட்டின் கண் போன்ற பொருளாதாரத்துறையில் எவ்வளவு தூரம் பின் தங்கியுள்ளோம் என்பதைச் சிந்தித்தால் — மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால்—பள்ளத்தில் நின்று மலையின் சிகரத்தைப் பார்க்கும் அப்பாவிகளின் நிலையாகவே எமது நிலையும் இருக்கிறது என்பது தோன்றும்.

உழைப்பதற்குத் தகுந்த ஊதியமில்லை — செலவுக்குத் தக்க வருவாய் இல்லை. இவ்விரு பிரச்சினைகளும் எம்முன் தலைவிரித்துக் கோர நர்த்தனம் புரிகின்றன. இதன்காரணம் என்ன?

பாரதநாட்டில் அண்ணல் காந்தி சுதந்திரத்திற்காகப் பல போராட்டங்களின் பலனாகச் சிறைக்கூடம் புகுந்தார், அவர் எந்தெந்த வழியில் மக்களுக்குச் சுதந்திர தாகத்தை ஊட்டினுர் என்பதை நாம் சிறிது நேரமாவது சிந்தித்தோமானல் நாம் செய்த மூடச் செய்கைகள் யாவும் எமது மூளையில் தட்டுப்படும்.

பாரத நாட்டின் சுதந்திரப் புரட்சியின்போது "அந்நியனே வெளியேறு" என்ற கோஷத்துடன் தமது நாட்டு உற்பத்திப்பொருட்களையே உபயோகியுங்கள் என்ற வீர முரசும் மக்கள் குரலில் ஒலித்தது. நாளாந்தம் அவர்கள் அதை நடைமுறையிலும் கொண்டுவந்தனர். 'முடிவு...? நல்ல முடிவுதான். ஆமாம் சுதந்திரம். தமது நாட்டுப் பொருட்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் படிந்தது. இதனல் உள்ளூர் உற்பத்திகள் பெருகத் தொடங்கின. அந் நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு அந் நாட்டு மக்களே நல்லாதரவு அளிப்பதால் தொழில் வளம் அங்கு மலர்ச்சியடைகின்றது.

அதேபோல் யாம் இந்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு ஆதரவு கொடுக்காதபடியால் எமது நாட்டின் தொழில் வளம் வீழ்ச்சியடைகின்

றது. அத்துடன் கையில் முதல் இல்லாதபடியால் எத்தொழிலையும் புதிதாகத் தொடங்க அஞ்சுகின்றனர். இதனால் எமது முயற்சிக்குத் தகுந்த ஊதியம் கிடைப்பதில்லை. பிற நாட்டுப் பொருட்களை நாம் வாங்கும் போது அவை வருவாய்க்கும் மிகுந்த செலவாகின்றது.

ஒவ்வோர் இல்லங்களிலும் நாம் செய்யக்கூடிய — நமக்குத் தேவையான—பொருட்களை நாமே செய்வதென்ற திடசங்கற்பம் செய்து நடைமுறையில் கொண்டுவருவோமானால் எம்முன் பயங்கரமாகப் பல்லிளித்து வரும் பிரச்சினைப்பேய்கள் புறமுதுகிட்டு ஓடுமென்பது திண்ணம்.

## அச்சம்

அன்று அந்நியர் எம்மை ஆண்டு வந்தார்கள், இன்று நம்மை நாமே ஆளுகிறோம் என்று எண்ணுகின்றோம், அன்று அந்நியரின் இரும்புப் பிடியில் எக்கணமும் நசுங்கிவிடுவோமென அஞ்சினோம். இன்று இந் நாட்டில் வாழும் மக்களால் ஒரு இனம், மற்ற இனத்தை எப்பொழுது விழுங்கி ஏப்பம் விடுமோ என்று அஞ்சுகின்றோம். இந்நிலையில் நாம் அனுபவிப்பது சுதந்திர வாழ்வு என்பதை எப்படிக் கூறமுடியும். எமதுள்ளத்தில் உதித்த வாழ்வு என்பதை எப்படிக் கூறமுடியும். எமதுள்ளத்தில் உதித்த அச்சம் அகலாது வளர்ந்துகொண்டே போகின்றது, எனவே எம்மைப் பீடித்திருக்கும் அச்சம் எம்மிடமிருந்து விடைபெறவில்லை.

ஒரு காட்டில் சுதந்திரமாகச் சுற்றித்திரிந்த ஒரு சிங்கத்தை ஒருவன் பிடித்துச் சங்கிலியால் பிணைத்துவிட்டான், அது தினமும் கர்ச்சித்துக் கொண்டிருப்பதைத் தாங்கமாட்டாதவன் இறுதியில் சிங்கத்திற்கென ஒரு இரும்புக் கம்பிகளினால் ஒரு கூடு அமைத்து அதனுள் விட்டான், "நான் சிங்கத்திற்குச் சுதந்திரம் கொடுத்துவிட்டேன்" என்று அவன் திருப்தியடைந்தான். அதே நேரம் சிங்கமும் தனக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டது என நினைக்கிறது. ஆனால் வெளியில் சிங்கத்தால் உலாவ முடியவில்லை, காரணம் இரும்புக் கூடே. கழுத்தில் கட்டுண்டு கிடந்த சங்கிலி அகற்றப்பட்டதேதவிர உண்மையான சுதந்திர வாழ்வை அது அடைய முடியவில்லை. இதேபோல் நாமும் அந்நிய ஆட்சியிலிருந்து விடுபட்டோமேதவிர உண்மையான சுதந்திர மனிதராக நாட்டில் உலாவவில்லை.

## ஆட்சிப்பீடமும் சுதந்திரமும்

எந்த ஒரு நாட்டிலும் அரசாங்கம் இருக்கத்தான் செய்கிறது. எந்த அரசாங்கமும் மக்கள் இயற்றும் சட்ட திட்டங்களுக்கு ஒத்துழைக்க வேண்டுமென்பதும் உண்மைதான். ஆனால் சுதந்திரமடைந்த ஒரு நாட்டில, மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சிபீடத்தில் உள்ளவர்கள் அந்த நாட்டு மக்களின் நலனுக்காகவே சட்டதிட்டங்களை இயற்றவேண்டும். அது அந்தநாட்டு மக்களின் நலனுக் கிடையூறாக இருக்குமாயின், அவர்கள் சுதந்திரம் பெற்ற அடிமைகள் என்றே கருதப்படுவர். ஒரு சுதந்திர நாட்டு மக்கள் தம் நாட்டு ஆட்சியாளர்களுக்கு எத்தகைய பெரிய பொறுப்புக்களைக் கொடுத்திருக்கிறார்களென்பதை ஆட்சியாளர் கடமை உணர்ச்சியுடன் உணரவேண்டும்.

அரசாங்கம் என்பது சிறுபிள்ளை விளையாட்டல்ல. நாம் கட்டுப்பட்டு

எடுத்த சுதந்திரத்தைச் செவ்வனே பாதுகாக்க வேண்டும். மக்களின் தேவை அறிந்து கடமை ஆற்ற வேண்டும்.

"இயற்றலும் ஈட்டலும்
காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லதுஅரசு"

என்று வள்ளுவர் கூறுகின்றார். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் எமக்குக் கூறியுள்ள அரசியல் அமைப்பைப்போல் இன்று உலகில் எந்த நாட்டிலும் இல்லை எனக் கூறலாம்.

## இலங்கைத் தமிழரும் சுதந்திரமும்

இலங்கையில் வதியும் தமிழர்களின் இன்றைய நிலையை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் அவர்கள் சுதந்திரத்துடன் வாழுகின்றார்களா என்றால் இல்லவே இல்லை. அவர்களின் குறைகளை ஆட்சியாளர்களுக்கு எடுத்துக் கூறவே அஞ்சுகின்றனர். காரணம் தமிழர் தம் குறைகளை எடுத்துக் கூறினால், அது "வகுப்பு வாதம்" என்று கூறித் தமிழர் வாழும் பகுதிகளில் இராணுவத்தினரைக் கொண்டு போய் அட்டகாசம் செய்கின்றனர். ஒரு சிறுபான்மை யினத்தினருக்காக இந்நாட்டில் இராணுவ முகாமுள்ள தென்றால், நாம் சுதந்திரமக்கள் என்று எப்படிக் கூறமுடியும்? இலங்கைத் தமிழர் இன்று இந்நிலையில் வாழ்வதற்குக் காரணம் ஆட்சியினர் மட்டுந்தான் என்று கூறுவது தவறு. கடந்தகால எம் வாழ்க்கையைச் சிந்தித்துப் பார்த்தால் நாம் செய்து கொண்ட தவறுகளை உணர முடியும்.


தமிழா! கடந்தகாலத்தில் உன்னிடத்தில் தமிழ்ப்பற்று இருந்ததா? உன் நெஞ்சைத் திறந்து சொல். இல்லை...... இல்லவேயில்லை! வயிற்றுப் பிழைப்பிற்காக ஆங்கில நாகரிக வலையில் வீழவில்லையா? நாளடைவில் ஆட்சிப்பீடம் முதல் அடுப்பங்கரை வரை பரவத் தொடங்கியது. "அம்மா" என்று மழலை மொழி பேசும் கொஞ்சும் குழவிக்குக்கூட "மம்மி" என்று சொல்லிக் கொடுக்கவில்லையா? ஆங்கிலம் தெரியாதவனை, அந்நியனாக மதித்து நடக்கவில்லையா? ஆங்கிலம் படிக்காத ஆணுக்குப் பெண் கொடுக்கத் தயங்கவில்லையா? இத்தனையும் உண்மை. இதன் பலனை இன்று அனுபவிக்கின்றோம்.

## தமிழன் மாறவேண்டும்

சென்ற காலங்களில் தமிழர்கள் செய்த தவறுகளை இனிமேலாவது உணர்ந்து தம் மொழிக்கும், தம் இனத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தமிழர்கள் வதியும் இடங்களில் அவரவர்க்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யவேண்டும்.

நாம் எமது தேவைகளுக்கு மற்றவர்களிடம் கையேற்காது "தன்கையே தனக்குதவி" என்ற முதுமொழிக்கிணங்க எமது தேவை அனைத்தையும் நாமே பூர்த்திசெய்ய வேண்டும். இதனால் அடிமை விலங்கு அறுபடும். அரசாங்கத்தில் அடிமை வேலை பார்த்து வயிறு வளர்ப்பதே கௌரவம் என்று நடந்த தவறை மறந்து சொந்த முயற்சியில் ஈடுபட்டு உண்மையில் தமிழனை முற்றாக மாறவேண்டும்.

# உங்களுக்குத் தெரியுமா?



- கைக்கடிகாரம்
- மணிக்கூடு வகைகள்
- பெற்றோமாக்ஸ்விளக்கு


பள்ளிக்கூட விளையாட்டு உபகரணங்கள்

- கண்ணாடி, தொப்பி
- குடை, சூட்கேஸ்

மற்றும் எல்லாவகையான சாய்ப்புச் சாமான்களையும் மலிவுவிலையில்
வாங்குவதற்கு நீங்கள் வரவேண்டிய ஒரே இடம்

**லக்கி ஹவுஸ்**

88—90 K. K. S. வீதி பெரியகடை, யாழ்ப்பாணம்.





ரசிகர்களின் மனதை எல்லாம் தன் நடிப்பால் வேட்டையாடி அவர்களைத் தன் வசமாக்கிக் கொண்ட நடிகர் திலகம் சிவாஜி கணேசன், காட்டிலே வாழும் கொடும் புலிகளையும் வேட்டையாடுவதில் சிறந்தவர்.

இக்காட்சி எந்தப் படத்திலும் வரும கட்டமல்ல சிவாஜி ரங்கராவ் முத்துமாணிக்கம் ஆகியோர் காட்டில் வேட்டை ஆடச் சென்று கொடிய இரு புலிகளைச் சுட்டுக் கொன்று விட்டு துப்பாக்கியும கையுமாக கம்பீரமாக நிற்கும் காட்சி.



கப்பலோட்டிய தமிழன் படப்பிடிப்பின்போது சிலவெளிப்புறக் காட்சிகளைப் படமாக்கி விட்டு சிவாஜி கணேஷனும்—ஜெமினி கணேஷனும் ஓய்வெடுத்துக் கொள்ளும்போது—எமது இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்புப் பகுதியில் கடமையாற்றும் திரு மயில்வாகனனும் நின்று கொண்டிருக்கின்றார்.




"புனர் ஜென்மம்" படத்தில் நடிகர் திலகம் சிவாஜியும் பத்மினியும்.

# கண்பார்வை இழந்தவன்

## வாழ்விழந்தவன் ஆவான்

உங்கள் கண்களின் பார்வை குறைவாக இருந்தால்

தராதரம்பெற்ற எம் நிலையத்தில் கடமையாற்றும் டாக்டரிடம்



இலவசமாக உங்கள் கண்களைப் பரிசோதனை செய்வித்து.

எம்மிடமுள்ள சிறந்த
மூக்குக் கண்ணாடிகளை வாங்கி உபயோகியுங்கள்.

முகத்திற்கு அழகுதரும் பிறேம்களும் குளிர் கண்ணாடிகளும்
எம்மிடம் சகாயமாகக் கிடைக்கும்.

அப்துல்லா அன் கோ,
127 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்-

தொலைபேசி இல. 486.

---

**எதிர்பாருங்கள் !** **எதிர்பாருங்கள் !!**

## இலங்கையர்கோனின்

# சிறந்த சில சிறுகதைகளை

# புத்தக வடிவில்

## விரைவில் வெளியிட எண்ணியுள்ளோம்.

பாலன் வெளியீட்டு நிலையம்
செட்டிகுளம்.

# S. SINNATHURAI & BRO,

Importers & Exporters. Sole Agents for

## 786 Kalki Beedies

நீங்கள்

உல்லாசமாகப் புகைப்பதற்கு




786 கல்கி பீடி

## 786 கல்கி பீடிகள்

**திறம்பீடிப் புகையிலை, பீடி இலை,**
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.


## சி. சின்னத்துரை அன் பிறதர்,

**39, K. K. S. ரோட் : : யாழ்ப்பாணம்.**

**கிளை:**
44, 3ம் குறுக்குத் தெரு : : கொழும்பு

**தொழிற்சாலை:**
118/12, ஆட்டுப்பட்டித் தெரு : : கொழும்பு.

எழிலோவியமாய் இருக்கின்றாள்
ஏ. கே. எஸ். நகைகளை
அணிகின்றாள்





உங்கள் அபிமானத்திற்கும்
அன்பிற்கும் உரிய நகை, வைர
வியாபாரிகள்.

## ஏ. கே. எஸ். அன்ட் சன்ஸ்

# நகை மாளிகை

**63, 65, கன்னாதிட்டி யாழ்ப்பாணம்**

போன்: 519